
# "பிள்ளையார் வணங்கும் சோதி"



விலை ரூபாய் 45/-  தபாற் செலவு தனி

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



# "பின்னானார் வணங்கும் சோதி"

திருமதி இந்து ரங்கன்

வெளியீடு:

23-08-2000

ஆவணி- 7

விக்ரம ஆண்டு

ஸ்ரீஜயந்தி நாள்

விலை : 45/-

தபால் செலவு தனி

Sri:

Srimathe Ramanujaya Nama:

# Pinnanar Vanangum Sothi

By

Smt .Indu Rangan



| | |
|---|---|
| Publisher | : Smt. Indu Rangan |
| Copyright | : Publisher |
| Copies | : 1000 |
| Price | : Rs. 45/- |

This book is published with the Financial Assistance of Tirumala Tirupati Devasthanam Under their Scheme "Aid to Publish Religious Books"

Copies Available at:

**Mrs. Indu Rangan**

F-99, Journalist's Colony

Srinivasapuram, Tiruvanmiyur

Madras -41

Printed at:

Sri Ranganachiyar Achagam

214, East Uthara Street,

Srirangam - Trichy - 620 006

☎: (0431) 434398

: akchari@vsnl.com

# பொருளடக்கம்


| வரிசை எண் | | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|---|
| | | திருக்கோஷ்டியூர் ஸ்வாமி ராமானுஜாசார்யர் குறிப்பு | |
| | | முதல் பாகம் – திருவேங்கடம் | 9 |
| | | முன்னுரை | |
| | | பின்னானார் வணங்கும் சோதி | |
| I | | மலை – வேங்கடம் | 10 |
| II | | மலைமேல் நிற்பதன் சிறப்பு | 11 |
| | 1. | வேதமும் திருமலையும் - ஒரு ஒப்பீடு | 11 |
| | 2. | மலையும் உபநிஷதும் | 12 |
| | 3. | உபய வேதாந்த கருத்து | 12 |
| | 4. | இறங்கும் துறைகள் பலபலவாகி | 13 |
| | 5. | திருவாய்மொழியில் காணப்படும் ஈஸ்வரனின் 5 நிலைகள் | 13 |
| III | 1. | கருணையின் வெளிப்பாடு-மலை | 14 |
| | 2. | எம்பெருமான் - வள்ளல் | 15 |
| IV | | அனைவரும் தொழும் வேங்கடேசன் | 16 |
| | 1. | திருமலையேஅர்ச்சாவதாரத்திற்கு எடுத்துக்காட்டு | 17 |
| | 2. | விண்ணவரும் மண்ணவரும் தொழும்படி ........ | 18 |
| V | | ஸ்தலப் பெருமை | 18 |
| | 1. | அடிக்கீழ் அமர்ந்து புகுந்து .... | 20 |
| VI | | நித்ய சேஷத்வம் | 21 |
| | 1. | இருள்சேர்இருவினையும் நீக்கும்மலை-சிறப்பு | 21 |
| | 2. | சேஷத்வம் | 22 |
| | 3. | சேஷத்வம் - திவ்யப்ரபந்த கான கைங்கர்யம் | 23 |
| VII | 1. | திருமலையே ஸர்வ ஜீவராசிகளுக்கும் சரணாலயம் | 24 |

| | | | |
|---|---|---|---|
| | 2. | திருவேங்கடமுடையான் அரையர்க்கு அளித்த சன்மானம்- திருவேங்கடமே யாம் விரும்பும் வெற்பு | 24 |
| | 3. | தேவகான ரசிகன் திருவேங்கடத்தான் சிறிய திருமடலை செவி சாய்த்தது | 25 |
| VIII | | **தெய்வ நன்னோய்** | **26** |
| IX | 1. | பகவத் ராமானுஜரின் அனுபவம் | 27 |
| | 2. | கைங்கர்யஸ்ரீயும் நம் சித்தாந்தமும் | 28 |
| | 3. | திருமலையே வேதமலை - ஸ்ரீராமானுஜரின்கருத்து | 28 |
| | 4. | திருமலையானும் - ஸ்ரீ ராமானுஜரும் | 29 |
| | 5. | மங்கள ஸ்லோகத்தில் காணப்படும் குறிப்பு | 29 |
| | 6. | திருமலையான் -விஷ்ணுவா/சிவனா? | 30 |
| | 7. | குத்ருஷ்டிகளின் வாதம் - பதில் - கருத்து | 32 |
| | 8. | தாளப்பாக்கம் சென்னையா | 33 |
| X | | **செல்வ நாயகன்** | **34** |
| | 1. | திருக்குறளில் பொருள் நிலை | 36 |
| XI | | **பின்னானார் வணங்கும் சோதி** | **36** |
| XII | 1. | வேங்கடேசன்-உயர்ந்த திருநாமம் | 38 |
| | 2. | திருமலையின் மற்ற பெயர்கள் | 39 |
| | 3. | பூமியே உயர்ந்தது | 39 |
| | 4. | ப்ரம்மானந்த மயம் | 40 |
| | 5. | சிறியவரும் பெறும் பெருமை | 40 |
| | 6. | பகவான் செய்யும் தொழில் | 41 |
| | 7. | பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் நோக்கில் | 42 |
| | 8. | கோவிந்த நாமத்தின் ஏற்றம் | 44 |
| | 9. | விரஜா நதி ஸ்வர்ணமுகியானது | 45 |
| XIII | | **ஆழ்வார்கள் ஆதரித்த வேங்கடம்** | **46** |
| | 1. | முக்திக்கு வித்தாகும் முதன்மை வெற்பு | 47 |
| | 2. | பிள்ளை பெருமாள் ஐயங்கார் கருத்து | 48 |

XIV பெருமானே உகக்கும் வெற்பு 4?

எம்பெருமானுக்கு திருமலையே அடையத்தக்க இடம் 50

1. விபவ அவதாரங்களின் அனுபவம் 50
2. ஆண்டாளின் மங்களாசாஸனம் 51
3. பரகாலநாயகியின்(கலியன்) அனுபவம்- அரங்கனை பாடப்போய் வேங்கடவனை அழைத்தல் 51
4. திருப்பாணாழ்வார் 52
5. திருமலையைப் பாடிய அருள் நெறி ஆழ்வார்கள் 53
6. பெரியாழ்வார் அனுபவம் 54

XVI 1. திருமலை போவதே புருஷார்த்தம் 55
2. வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே 56
3. என் வேங்கடவன் வரக் கூவாய் 56
4. மேக சந்தேசம் 57
5. பகவத் கைங்கர்யம்தான் வாழ்ச்சி 57
6. எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே 59
7. திருமழிசைப்பிரானின் ஈடுபாடு 61
8. நான்முகன் திருவந்தாதியில் திருமலைவேங்கடவன் 62
9. திருப்பாணாழ்வார் திருமலை அனுபவம் 65
10. திருமலையப்பனை ஒரு யானையாகப் பாடும் திருமங்கைமன்னன் 67
11. பொய்கையாழ்வார்-திருமலை அனுபவம் 68
12. பூதத்தாழ்வார் என்னும் பெரும் தமிழன் 69
13. பேயாழ்வார் அனுபவம் 70
14. நம்மாழ்வார் ஈடுபாடு 71
15. ஸ்ரீதேசிகனுக்கு அமைந்த இத்திருநாமம் 73
16. ஸ்ரீதேசிகனின் மங்களாசாஸனம் 73
17. பின்னானோர் பலர் கொண்டிருந்த ஈடுபாடு 75
18. மங்களம் 77
19. மூன்று திவ்ய தேசங்களுக்கும் ஒரு சேர மங்களம்கோருகை 77

## இரண்டாம் பாகம்


| | | | |
|---|---|---|---|
| | தெற்குத்திருமலை திருமாலிருஞ்சோலை | | **79** |
| I | திருமலையாழ்வாரைப்போற்றும் பாசுரங்கள் | | 80 |
| II | | அழகரின் புகழ் பற்றி மங்களாசாஸனம் | 81 |
| III | | உத்தமூர் ஸ்வாமி வ்யாக்யானம் | 83 |
| IV | | ஸ்ரீ தேசிகரின் மங்களாசாஸனம் | 86 |
| V | 1. | திருமாலிருஞ்சோலை (மலையின்)மற்றைப் பெயர்கள் | 87 |
| | 2. | நூபுர கங்கையின் வரலாறு | 88 |
| | 3. | தவப்புருஷர்கள் வசித்த ஸ்தலம் | 89 |
| | 4. | மலயத்வஜனை ஆட்கொண்ட அழகர் | 89 |
| | 5. | கங்கையினும் புனிதம் எவ்வாறு நூபுரகங்கை பெற்றது? | 90 |
| | 6. | சிலம்பாறின் ஏற்றம் | 90 |
| | 7. | ஆழ்வார்கள் மங்களாசாஸனம் | 91 |


## மூன்றாம் பாகம்


| | | |
|---|---|---|
| | திருச்சிங்கவேள்குன்றம் நவநரஸிம்ஹ க்ஷேத்ரம் | 94 |
| | **ஸ்தல வரலாறு** | |
| 1. | மேல் அஹோபிலம் | 96 |
| 2. | கருடாத்ரி | 96 |
| 3. | ஆண்டாள் மங்களாசாஸனம் | 97 |
| 4. | சனந்தனன் செய்த தவம் | 98 |


## நான்காம் பாகம் – முடிவுரை


| | | |
|---|---|---|
| | நான்காம் பாகம் – முடிவுரை | **101** |
| 1. | திருப்பிரிதி | 102 |
| 2. | திருவதரி | 103 |
| 3. | திருநாராயணபுரம் | 104 |

## ஸ்ரீ திருக்கோஷ்டியூர் ஸ்வாமி குறிப்பு



ஸ்ரீமதி இந்து ரங்கனின் "பின்னானார் வணங்கும் சோதி" என்ற கட்டுரையைப் பார்த்தேன். அதில் கூறிய விஷயங்கள் ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களை கொண்டும், ஆசார்யர்களுடைய உபதேசங்களை [கிரந் தங்கள்/நூல்] கொண்டும், இன்னும் ஆங்காங்கு உள்ள திவ்யதேசங்களுக்கு ஏற்பட்ட ஸ்தல புராணங்கள்/ஸ்தல நூல்களில் காணப்பட்ட கதைகளைக் கொண்டும் விரி வாக வும், புரியும்படியும், பார்ப்பவர்கள் மனதிற்கு இன்பத்தை கொடுப்பதாகவும், முதலில் படிக்க ஆரம்பித்தால் அதை படித்து முடித்த பிறகுதான் வேறு வேலைகளில் மனதை செலுத்தத் தக்கதாகவும் அமைந்திருப் பதைக் கண்டு நான் மிகவும் உவகை கொண்டேன். அவ்வாறே மற்றவர்களும் அனுபவித்து சந்தோஷம் அடையும்படி வேண்டுகிறேன். இந்த அம்மணிக்கு மேன் மேலும் இவ்விதம் அனுபவம் ஏற் பட்டு அதை பிறரும் அனுபவிக்கும் படி செய்ய நீண்ட ஆயு ளையும் ஆரோக்கியதிடகாத்திரத் தையும் பகவத் பக்தியையும் திருவுருவுடன் சேர்ந்த எம் பெருமானும், ஆழ்வார், ஆசார்யர் களும் தந்து உலகத்தை உஜ்ஜீவிக்கச் செய்யவேண்டும் என்று அவர்களையே இறைஞ்சுகிறேன்.

அநேக மங்களாசாசனங்கள்

**திருக்கோட்டியூர் இராமமாநுஜாசார்யர்ஸ்வாமி**

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆரண நூல்காவலர்

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர் ஸ்வாமி

M.A., (Tamil), M.A., (Public Admn),

M.A., (Sociology)

ஆசிரியர் பாஞ்சசன்னியம்

இயக்குநர் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அஞ்சல்

வழிக்கல்வி முறை இயக்ககம்.


## அணிந்துரை

எமது நிறுவனத்தின் மூன்று நிலை ஸ்ரீவைஷ்ண வக் கல்வியில் மூன்றாம் நிலையான ப்ரபன்னா பட்டப் படிப்பினை முடித்து 1998 ஆம் ஆண்டு ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ பட்டத்தினைப் பெற்றவர் திருமதி. இந்து ரங்கன் அவர்கள்.

ப்ரபன்னதேர்வில்வெற்றிபெறுவதற்குக்கட்டாயப்பாட மாக 30 தலைப்புகள் ஏதேனும் ஒரு தலைப்பில் 100 பக்கங் களுக்குக் குறையாமல் ஆய்வுக்கட்டுரை ஒன்று எழுதப்பட வேண்டும் என்ற விதிமுறைக்கு உட்பட்டு எழுதப் பட்ட ஆய்வு கட்டுரையே இந்நூலாகும். திருமதி. இந்து ரங்கன் அவர்களால் **பின்னானார் வணங்கும் சோதி** என்ற தலைப்பில்எழுதப்பட்டஅந்த ஆய்வுக் கட்டு ரைஅச்சுவடி வில் திருவேங்கடவனது இன்னருளால் இப்பொழுது வந்துள்ளது.

எம்பெருமான் பின்னானார் வணங்கும் சோதியாக அர்ச்சாவதார நிலையில் திவ்யதேசங்களில் சேவை சாதிக் கும் சௌலப்யத்தை திருமதி.இந்து ரங்கன் அவர் கள் இந்த ஆராய்ச்சி நூலில் வெளிப்படுத்தியுள்ளார். ஸ்தல புராணங்கள், அருளிச்செயல் வ்யாக்யானங்கள் ஆகிய வற்றின் துணை கொண்டு பல புதிய செய்திகளைத் தந்துள்ளார் ஆசிரியர். ஆசிரியருடைய பணி பாராட்டுதற்கு உரியது.

அநேக மங்களாசாசனங்கள்

**அ.கிருஷ்ணமாசார்யர்** ,

ஸ்ரீரங்கம், 01-08-2000 ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

## முதல்பாகம்

# பின்னானார் வணங்கும் சோதி

## திருவேங்கடம்

### முன்னுரை

வேதம் அனாதியானது என்பது அனைவரும் அறிந்ததே, இந்த வேதத்தால் கூறப்படும் ஜகத்காரணன் ஜகத்ரக்ஷகனானவன் ஸ்ரீமந்நாராயணன், இவனே 'பரம்பொருள்' என்ற சொல்லால் அறியப்படுகிறான். பரம் பொருளைப்பற்றிக் கூறும் வேதத்தைக் கடலின் ஆழத்திற்கும் மலையின் உயர்ந்து நிற்கின்ற நிலைக்கும் சான்றோர்கள் ஒப்பிடுகிறார்கள். இத்தகைய பெருமையுடைய மலையின் மேல் நிற்பவனது சிறப்புக் களைக் காணும் முன்னர் மலையின் விளக்கத்தையும் அதன் சிறப்புக்களையும் விளக்கினால் அதன் மூலம் அம்மலைமேல் நிற்பானது சீரும் சிறப்பும் பெருமையும் தானே தெள்ளத்தெளிய விளங்கும்.

## 1 மலை - வேங்கடம்

### ஸ்வாமி தேசிகர் கூறும் வெற்பு

கண்ணனடியிணை எமக்குக் காட்டும் வெற்பு
கடுவினையருவினையும் கடியும் வெற்பு
திண்ணமிது வீடென்னத் திகழும் வெற்பு
தெளிந்த பெருந்தீர்த்தங்கள் செறிந்த வெற்பு
புண்ணியத்தின் புகலிதெனப்புகழும் வெற்பு
பொன்னுலகிற் போகமெல்லாம் புணர்க்கும் வெற்பு
விண்ணவரும் மண்ணவரும் விரும்பும் வெற்பு
வேங்கடவெற்பென விளங்கும் வேத வெற்பே.

மலை என்றால் நமக்கு நினைவில் வருவது திருமலை தான். ஏன் வேறு மலைகளான திருமாலிருஞ்சோலை. சிங்க வேள்குன்றம் என்னும் அஹோபிலம், ஸ்ரீபத்ரிகாச்ரமம், ஸ்ரீசாளக்கிராமம், திருநாராயணபுரம் என்பவைகள் உள்ளனவே எனில், **திருவேங்கடமலை என்று போற்றப்படுவதும், வேதத்தால் புகழப்படுவதும், ஸ்ரீநிவாஸன் எழுந்தருளி உள்ளதுமான திருமலைதான்.**

இது, எம்பெருமானுடைய திருவடிகளிரண்டையும் அடைக்கலமாக அடையுங்கள் என்று காட்டுகிறது. மிகக் கொடிய பாபம் புரிந்தவர்களின் புண்ணிய பாபங்களாகிய இரண்டினையும் அகற்றி, தங்கு தடையின்றி மோக்ஷம் பெறச் செய்வது, இது ஸ்ரீவைகுண்டம் என்று கூறும்படி ப்ரகாசிக் கின்றது. புண்ய தீர்த்தங்கள் பலவற்றைக் கொண்டுள்ளது. புண்யத்தின் இருப்பிடம் என்று புகழப்படுவது, நித்யசூரிகளும் பூலோக மாந்தர்களும் விரும்பும் தலம் ஆகும் இஃது.

வணங்கி வழிபட எளிதான நிலை **அர்ச்சாவதாரம்**. எம்பெருமான் அர்ச்சையில் பூர்ண அம்சத்தோடும், நில உல கில் வீடு தோறும், கோயில்களிலும் குடி கொண்டுள்ளான். அர்ச்சாவதாரங்களில், ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப் பெற்றவையும், பூர்வாசார்யர்களின் அபிமானம்

பெற்ற திவ்ய ஸ்தலங்கள் நூற்றெட்டில், பூர்வர்கள் மிகவும் ஆதரித்துக் கொண்டாடியது, கோயில், திருமலை,பெருமாள் கோயில், திருநாராயணபுரம் ஆகிய திருப்பதிகள். இவற்றுள், புஷ்ப மண்டபம் என்று புகழ் பெற்ற திருமலை நடுநாயக மாய் இருந்து கொண்டு வடநாடும் தென்னாடும் தொழ விளங்கி வருவதை நாம் காண்கிறோம். அதன் உச்சி மேல் நின்ற விளக்காய் எம்பெருமான், ஸ்ரீநிவாஸன், திருவேங்கடத் தான், வேங்கடாசலபதி, பாலாஜி, என்று பல நாமங்களாலும் புகழ் கொண்டு அடியார்களை நோக்கி நின்று நிலை பெறு கிறான். ஆகவேதான், நம்மாழ்வாரும் அவனை **மலைமேல் நிற்பான்** என்று அவ்வாறே மங்களாசாஸனம் செய்தார் போலும்.

## II மலைமேல் நிற்பதன் சிறப்பு

### (1) வேதமும் திருமலையும் – ஒரு ஒப்பீடு :

உயர்ந்து, அகன்று எழிலுடைய தோற்றங்கொண்டது மலையின் தன்மை. எங்கும் ஒரு போதும் அசையாது நிலைத்து உறுதியாக நிற்கும்.அதற்கு மேல் சிகரங்கள், அச்சிகரங்கள் நடுவே உலவும் மேகங்கள் என்று எல்லாம் வியக்கும்படியாக இருக்கும். அம்மலையின் மேல் உள்ள நீர் நிலைகள், செடி கொடிகள், பூக்கள் எல்லாமே மனத்தை கவரக் கூடியதுதான். இப்படிப்பட்ட பல உயர்ந்த மலைகள், பனிச் சிகரம் கொண்ட மலைகள் பல உள்ளன இப்பூவுலகில். ஆனால், பாரத தேசத்தில் உள்ள இமயமலை என்னும் மேரு பர்வதம், கைலாசம் போன்றவைகள் போல் தெய்வீக மணம் கமழும் மலைகள் வேறு எங்கும் காணக் கிடைக் காது. ஆகவே தான் உயர்ந்து நிமிர்ந்து கம்பீரமாக தோற்ற மளிக்கும் பெரிய சிகரங்களுடைய மலை அதுவும் திருமலை வேதத்திற்கு நிகராக ஒப்பிட்டு பேசப்படுகிறது.

### (2) மலையும் உபநிஷத்தும் :

வேதத்தின் சிகரம் உபநிஷத்துகள்; அதனால் தெளியப் படுவது ப்ரஹ்மம். அதே போல் திருமலையின் சிகரத்தில் மின்னும் சோதியானது திருவேங்கடமுடையான். பல பிறப்பு பிறந்து இறந்து போகும் சேதனர்களை உய்ப்பிக்கவே உயர்ந்த மலைமேல் நித்ய வாஸம் புரிகிறார், எம்பெருமான்,

*“கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ?**
*புற்பா முதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே,**
*நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்**
*நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே?” **

என்றும்(திருவாய் 7-5-1)

*“வார்த்தையறிபவன் மாயவற்காளன்றியாவரோ?**
*போர்த்த பிறப்பொடு நோயோடு மூப்போடு இறப்பிவை*
*பேர்த்து * பெரும் துன்பம் வேரற நீக்கித் தன்தாளின் கீழ்ச்**
*சேர்த்து அவன் செய்யும் சேமத்தை யெண்ணி தெளிவுற்றே”**

(திருவாய் 7-5-10)

என்கிற கருத்தை மெய்ப்பிக்கவே திருமலையில் நிற்கிறான்.

### (3) உபய வேதாந்த கருத்து :

நம்மைக்காட்டிலும் அவன் எண்ணிலடங்காதளவு உயர்ந்தவன். “உயர்வற உயர்நலம் உடையவன், மயர்வற மதிநலம் அருளுபவன், அயர்வரும் அமரர்கள் அதிபதியானவன்”, இப்பேர்பட்டவனின் திருவடியை திருமலை ஏறிச் சென்று துயரற (திருவடிகளை) அதாவது சுடரடிகளை தொழுதெழும் வகையாக அவன் உயரத்தில் இருந்து கொண்டு நம்மையும் உயரும்படி செய்ய ஆங்கு “மலை மேல் நிற்கிறான்”.

**(4) ஆற்றில் துறைகள் பலபலவாக ......**

ஓடிச் செல்லும் ஆற்றில், ஆங்காங்கு பல துறைகள் இருக்கும். அவரவர்களுக்கு வசதியான துறையில் நின்று குளிப்பதும், தண்ணீர் சேகரிப்பதும் ஆன பல வகையில் அத்துறைகளை அவர்கள் உபயோகிப்பார்கள். அவ்வாறே, ஆச்ரிதர்கள் எல்லாக்காலங்களிலும் எல்லோராலும் ஆச்ரயிக்கும்படி நிற்கும் நிலையே, மலைமேல் நிற்பவ னான திருவேங்கடமுடையானுடைய நிலை. :

**(5) திருவாய்மொழியில் காணப்படும் ஈச்வரனின் ஐந்து நிலைகள் :**

வேதம் தமிழ் செய்த வித்தகரான நம்மாழ்வாரும்
*விண் மீதிருப்பாய்! மலை மேல் நிற்பாய்! கடற்சேர்ப்பாய்! **
*மண் மீதுழல்வாய்! இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்!*
(திருவாய் 6-9-5)

என்ற இவ்வைந்து நிலைகளைத் போற்றியுள்ளார். மனிதர்கள் அனைவரும் கண்டு பற்றுவதற்கேற்ற வகை யில் அர்ச்சாவதாரமாய் எழுந்தருளியுள்ள திவ்யதேசங்கள் தான் நமக்கு சாலச் சிறந்தவையாகும். ஆழ்வார்கள் அனைவரும் அர்ச்சாவதாரத்தில் மண்டினவர்களே.

பகவான் அர்ச்சாமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசங்கள் 108 என்பதை "சதம் தாமாநி ஸப்த ச" என்று வேதமே அறுதியிட்டு கூறுகின்றது. அவற்றுள்ளும் ஸ்வயம் வ்யக்த க்ஷேத்ரங்கள் என வழங்கப்படுபவை எட்டு ஆகும்.

ஸ்ரீரங்கம்,ஸ்ரீமுஷ்ணம், திருவேங்கடமலை, ஸாளக் ராமம், நைமிசாரண்யம், வானமாமலை புஷ்கரம், பத்ரிகாச்ரமம் ஆகிய எட்டும் எவராலும் ஸ்தாபிக்கபடாமல் தானே தோன்றிய க்ஷேத்ரங்களாகும்.இவ்வெட்டினுள்ளும் திருவேங்கடமலைக்கு ஈடாக எதுவுமே கிடையாது.

*வேங்கடாத்ரிஸமம் ஸ்தாநம் ப்ரஹ்மாண்டே நாஸ்தி கிஞ்சந।*
*வேங்கடேபிஸமோ தேவோ ந பூதோ ந பவிஷ்யதி॥*

என்று புராணங்கள் எல்லாம் ஒரு முகமாகக் கூறுகின்றன. இத்தகைய வேங்கடவனின் சிறப்பை யஜுர் வேதமும் ருக் வேதமும் போற்றிப்புகழ்கின்றன.

## III

### (1) கருணையின் வெளிப்பாடு – மலை:

கருணா மூர்த்தியான ஸ்ரீமந்நாராயணன் மண்ணுலகில் வாழும் மனிதர்கள் எல்லோரும் செல்வம் முதலான இம்மைப் பயன்களையும், மறுமைப்பயன்களையும் பெற்று இன்புற்று வாழ வேண்டும் என்று திருவுள்ளம் பற்றினார். அதற்காக, யாகஸ்வருபியான பகவான் விஷ்ணுவின் உருவில் யாகத்திற்குரிய எட்டுவகைப்பொருள்களையும் தேவர்கள் கண்ணுக்குத் தெரியாமல் மறைத்துக் கொண்டு பூலோகத்திற்கு வந்தார். அது கண்ட தேவர்கள் பூலோகத்தவர்கள் செல்வந்தர்கள் ஆகி விட்டார்களானால் நம் கையை எதிர் பார்க்க மாட்டார்கள், நம்மை மதிக்கவும் மாட்டார்கள் எனப் பொறாமை கொண்டு, பகவானையாகப் பொருளுடன் செல்லவிடாமல் சுற்றி வளைத்துத்தடுத்தார்கள். மேலும் பெருமாள் அவர்கள் வலையில் சிக்காமல் போவதைக் கண்ட இந்திரன் துரத்திச் சென்று மேலே போகவிடாமல் தடுத்தான். உடனே பகவான், "என்னைக் போகவிடாமல் தடுப்பதற்கு நீ யார்?" என்று கேட்க அதற்கவன் (இந்திரன்) எப்படிப்பட்ட செல்ல முடியாத பகுதிக்குச்சென்றாலும் தான் தன் விரோதியை விடாமல் துரத்திச் சென்று கொல்ல முடியும் என்றான். அது கேட்ட விஷ்ணுவானவர் "நானும் எப்படிப் பட்ட கடினமான ப்ரதேசங்களுக்கும் சென்று பகைவர்களிடம் சிக்காமல் எனது பொருளைப் பாதுகாத்துக் கொண்டு வரு


வேன்'' என்றார். அதற்கு இந்திரன் "நீ எப்படிப்பட்ட கடின மான பாதையில் சென்றாலும் நான் உன்னை கொன்றே தீருவேன்'' என்றான்.

பின் விஷ்ணு, வராஹ ருபம் எடுத்துக் கொண்டு, "**தீக்ஷணீயங்கள்**'' எனப்படும் நான்கு வகைப் பொருள் களையும், "**உபஸதம்**'' எனப்படும் மூவகைப் பொருள் களையும், ஆக ஏழையும் ஏழு மலைகளாக்கிவிட்டார். தூண்டா விளக்கு போன்ற சமஸா பாத்திரத்தின் வடிவில் ஐஸ்வர்யங்களையும் மறைத்துக் கொண்டு விட்டார், அத் தகைய பெருமாளே இன்று ஏழுமலையானாக, ஸ்ரீநிவாச னாக வேண்டுவோர்க்கு வேண்டியவற்றை எல்லாம் கொடுத்துக் கொண்டு கண்கண்ட தெய்வமாக திருமலையில் விளங்கி வருகிறார்.

யஜுர் வேதம் ஸம்ஹிதை 6-2-4 "**யஜ்யோ தேவே ப்யோ நிலாயத விஷ்ணு ருபம் க்ருத்வா ஸ ப்ருத்வீம் ப்ராவிசத் தம் தேவா ஹஸ்தாத் ஸ கும்ரப்யைச்சன் உபர்யுபர்யத் யக்ரமாத் ஸோ (அ) ப்ரவீத் கோ மா (அ) யம் உபர்யுபர் யத்க்ராமி தித்யஹம் துர்கே ஹந்தேயத் கஸ்த்வமித்ஹம் துர்காதாஹர்தேதி ஸோ (அ) ப்ரவீத் துர்கே வை ஹந்தாவோசதா வராஹோ (அ) யம் வாமமோஷஸ் ஸப்தாநாம் கிரீணும் பரஸதாத் வித்தம் வேத்யம் அஸுராணும் பிபந்தி**''.

**(2) எம்பெருமான் – வள்ளல் :**

அடுத்தபடியாக, ஸ்ரீநிவாச பெருமாள் தன்னை அண்டி வந்த பக்தர்களுக்கு வேண்டிய செல்வங்களை வாரி வாரி வழங்குகிறார் என யஜுர் வேதம் கூறுகிறது. "விஷ்ணுவே! நீர் வானுலகிலிருந்தும், அந்தரிக்ஷ லோகத்தி லிருந்தும் கொணர்ந்த பெரும் செல்வங்களால் உமது கைகளை நிரப் பிக் கொள்வீராக, அவற்றை மேன் மேலும் பெருக்கி, மிகுந்த முத்துக்களையும் மணிகளையும் வைரங்களையும் வலக்கை யாலும் இடக்கையாலும் வாரி வாரி வழங்குவீராக ''



யஜுர் வேத ஸம்ஹிதையில் ஸ்ரீ வேங்கடேச பெருமாளிடத்தில் யார் யார் என்னென்ன ப்ரார்த்தனை செய்து கொண்டாலும் அப்பிரார்த்தனைகள் எல்லாவற்றை யும் நிறைவேற்றித்தருகிறார் என்கிறது.

ருக்வேதம். "ஹே மனுஷ்யா , நீ பணம், காசு அற்றவனாய் புதிதாக ஐஸ்வர்யத்தை மீண்டும் பெற விரும்பினாலும் ஊனக்கண்ணோ ஞானக்கண்ணோ இல்லாதவனாக இருந்தாலும், பலவிதமான துன்பங்கள் மிக்கவனாய் ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதைவிகங்களாகிய தாபத்ரயங்கள் மிக்கவனாக இருந்தாலும், தர்மார்த்த காம மோக்ஷங்களா கிய புருஷார்த்தங்களை அடைய முடியாதவாறு இடையூறுகள் மிக்கவனாய் இருந்தாலும், ஸ்ரீநிவாச பக்தர்களை முன்னிட்டுக் கொண்டு ஸ்ரீநிவாசனுடைய மலைக்கு செல்வீர்யாக. அந்த திருமலையில் பக்தர்களை முன்னிட்டுக் கொண்டு அப்பெருமாளிடம் நீ துன்பங்கள் அனைத்தும் நீங்கி இன்பங்கள் ஏற்பட ப்ரார்த்தனை செய்து கொள்வாயாக. அப்பெருமாளிடம் உன்னை ஸமர்ப்பித்துக் கொள்வாயாக" என்று கூறுகிறது.

## IV

### அனைவரும் தொழும் வேங்கடேசன்

மலையின் சிறப்புகள் நன்கு விளக்கப்பட்ட நிலையில், அம்மலை மேல் நிற்பவன் யார்? அவனது பெருமைகள் யாவை என்ற விளக்கம் அவசியமாகிறது. ஆதலால் வேங்கடம் என்னும் அம்மலை மேல் நிற்பானது அரும் பெரும் சிறப்புக்களை இனி காண்போம்.

நம் நாட்டில் , ஆண் பால் பெயர்களில் மிகப் பெரும் பான்மையாக ஹிந்துக்களிடையில் சைவ, வைணவ, ஸ்மார்த்தாதி பேதமற வழங்குவது "ஸ்ரீநிவாசன்" என்ற பெயர் தான். "வேங்கட" என்றதுடன் ராமன், கிருஷ்ணன் போல் எத்தனையோ சேர்ப்பர். இதெல்லாம் தவிர, என் அப்பன் திருவேங்கடமுடையானின் படங்கள். சின்னங்கள், உருவங்கள் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பதை நாம் காணலாம். பரப்ரஹ்மம் ஸர்வவ்யாபீ "ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே" என்று ஸ்ரீபாஷ்யகாரர் குறிப்பிட்டதை மெய்ப்பித்ததை போல் எங்கும் எதிலும் திருமலையப்பன் தான். அனைத் தில்லங்களிலும் அதிகாலையில் ஸ்வாமி ப்ரதிவாதி பயங் கரம் அண்ணனுடைய ஸ்ரீ வேங்கடேச ஸுப்ரபாதத்தின் ஸ்ரீஸூக்திகள் தேனாகக்காதில் வந்து பாய்கின்றது. பெருமாள் என்றால் இவன்தான் என்றே எல்லோரும் கொண்டுள்ளனர். திருவிண்ணகரப்பன் கோயிலும் தென் திருப்பதி யென்றல்லவோ அழைக்கப்படுகிறது.

இப்படி மலை என்றால் திருமலை ; பெருமாள் அர்ச்சா மூர்த்தியென்றால் திருவேங்கடமுடையான்; அர்ச்சைக்கு எடுத்துக்காட்டே திருவேங்கடமுடையான்தான் என்றாயிற்று!

## IV.

### 1.திருமலையே அர்ச்சாவதாரத்திற்கு எடுத்துக் காட்டு:

ஆழ்வார் காட்டும் பெருமாளின் ஐந்து நிலைகளை, முறையே, பரம், அர்ச்சை, வ்யூஹம், விபவம் அந்தர்யாமித்வம் இவற்றைச் சொல்லி கூவுகிறார். அர்ச்சைக்கு ஓர் எடுத்துக் காட்டாக ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பெருமாளைச் சொன்னால் தானே நமக்குப் புரியும். அதற்கு திருமலையையே எடுத்துக்காட்டாகச்சொல்கிறார்.

ஆழ்வார்களுக்குள் திருமங்கை மன்னன்தான் பல தேசங்களுக்கு 'திவ்யதேசத்தன்மையை' வழங்கியவர்.

அவர் மங்களாசாஸனத்தால் மட்டுமே அவை திவ்ய தேசங்களா கின்றன! இதை மனத்திற் கொண்டால், ஸ்ரீதேசிகனின் ப்ரபந்தஸாரம் பாசுரம் 16 (பத்தரடிப்பொடி)..... “பரகாலன் சொல் அத்தனுயர் வேங்கடமாற்காயிரத்தோடு, ஆன இரு நூற்றோரைம்பத்து மூன்று ........ ” என்ற இடத்தில் ஸ்வாமியின் திருவுள்ளம் தெளிவாகும்.1253 பாசுரங்களும் திரு வேங்கடமுடையானுக்கே. நீர் சொல்லுவது போல் அர்ச்சானுபவம், அதனால் திவ்யதேசங்கள் பலவற்றுக் கீழ் இட்டவை என்பதை ஏற்க முடியாது என்றால் அடியேனுக்கு என்ன ? மிக்க மகிழ்ச்சியே! திருவாய்மொழி ஆயிரத்து நூற்றிரண்டும் (1102) அரங்கனுக்கே! பரகாலன் பாடல் மொத்தமும் வேங்கடவனுக்கே! இந்தக்கருத்து நன்றாக அனுபவிக்கும் படியாக உள்ளது அன்றோ?

### IV. 2.விண்ணவரும் மண்ணவரும் தொழும்படி....

விண் மீதிருப்பவர்கள் நித்யசூரிகள். மண் மீதிருப்பவர்கள் நித்ய ஸம்ஸாரிகள். இவர்கள் எல்லோரும் ஒன்றாக நின்று சேவிக்கும்படி '**மலைமேல் நிற்கின்றான் திரு வேங்கடமுடையான்**'. விண்மீதிருப்பவர்களைக் காட்டி லும், மண்மீதிருப்பவர்களை ஆதரித்தும், விண்ணவர் களும் சற்று இறங்கி வந்து, இருவருமே சமமாகக்காணும்படி மலை மேல் சாட்சி தருகிறான். இத்தால் அவனது பாரபட்சமற்ற தன்மை தெளிவாகிறது.

## V

### ஸ்தலப்பெருமை

வராஹவதாரம் முடிந்து பூமியை புதிய பொருளாக எடுத்து வைக்கப் பெற்றவுடன், பெருமாள் தான் வந்து தங்கவென்று ஓர் அப்ராக்ருதமான ஸ்தலத்தை இந்த பூமியில் நிறுவ விரும்பினான். அதற்காக, இந்தத்திருமலை ப்ரதேசத்தை, ஏழு மலைகளை, ஸ்ரீவைகுண்டத்திலிருந்து பெயர்த்து எடுத்து

பூமியில் சேர்த்து, ஸ்ரீவராஹனாக உட்கார்ந்து ஸந்நிதி கொண்டுள்ளான்.

ஆகவே தான், திருமலை வைகுந்தத்தின் சிறு பகுதியாக பூமியில் உள்ளது என்று அறிந்து கொள்ள வேண்டும். இதற்கு விளக்கமாக உள்ள ஒரு ஸ்ரீஸூக்தி :-

*மாயாவதி பரமானந்தம் த்யக்த்வா வைகுண்டம் உத்தமம்।*
*ஸ்வாமி புஷ்கரணி தீரே ரமயா ஸஹ மோததே ॥*

"பெருமாளுக்கு ப்ரஸித்தமானது இரண்டு விபூதிகள் (1) நித்ய விபூதி (2)லீலா விபூதி ; ஆனால் இப்போது திருமலை வாசத்தால் மூன்றாம் விபூதியும் பெற்று அனுபவிக்கிறானாம்! நித்யசூரிகள், மானிடர்கள், காட்டில் வாழும் வேடர்களுடன் கூட மற்ற ஜீவராசிகள் எல்லாமே ஒரேயடியாக ரக்ஷணை பெற்று அனுபவிக்கும் இடமாம் திருமலை. தவிரவும், பரமபதநாதன், பரமபதத்தில் ரக்ஷிக்கப்படுபவர்கள் இல்லாமல், கன்றுக்காக பசு ஏங்குவது போல் இந்த மலைமேல் வந்து நிற்கிறான். நித்ய விபூதியில் இப்படிக் கலந்து பரிமாறுதல் கிடைக்காது! ஆதனால், அங்கு பெறும் பரமானந்தத்தையும், வேண்டாம் என்று த்யாகம் பண்ணி, ஸ்ரீவைகுண்டலோகத்தில் வெறுப்புற்று இங்கு வந்து பிராட்டியுடன், நம்முடன், கலந்து ஆனந்தப்படுகின்றான். ஆகவே அவன் 'விடாய் தீர்ந் தது' இந்த தண்திருவேங்கடத்தில் தான். இனிய திருஅஷ்டாக்ஷரத்தை உச்சரித்து, மேன்மேலும் அதை அனுஸந்தித்தும், இன்னும் இங்கே இருந்து பாடுபடும் மக்களை உய்யும்படி செய்யவே மலை மேல் நிற்கிறான்; நின்று கொண்டே காப்பதற்காகவே, கால்கடுக்க சலிக்காமல் நிற்கிறான்.

பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும் சொல்லிநின்று,பின்னரும்*
பேசுவார்தமைஉய்யவாங்கிப் பிறப்பறுக்கும்பிரானிடம்*
வாசமாமலர்நாறுவார்பொழில் சூழ்தரும்உலகுக்கெலாம்*
தேசமாய்த்திகழும் மலைத் திருவேங்கடம் அடைநெஞ்சமே!

(பெரிய திருமொழி 1-8-9 ) என்பது கலியனது அனுபவம்

V (1) [illegible]..........

"அகலகில்லேன்" (திருவாய் 6-10-10) பாசுரத்தில் அவனடிக்கீழ் புகுந்தார் ஆழ்வார். அடுத்த பாசுரத்தில், "அடிக்கீழ் அமர்ந்து புகுந்து. அடியீர்! வாழ்மின் என்று அருள் கொடுக்கும் படிக்கேழில்லாப்பெருமானே" என்று கூறுவதன் கருத்தை நோக்குவோம்.

"என்னடிக்கீழ்க்கைங்கர்யம் செய்ய வா; வேறு உபா யம், வேறு ப்ரயோஜனம் எதையும் கருதாமல் இதை செய். ஸ்வரூப ஞானமுடையவர் செயல் அப்படித்தானிருக்கும். நீ என்னுடைய அடியானன்றோ? இது செய்தால் உய்வா யென்று சொல்லி திரும்ப திரும்ப வந்து சேவித்து நிற்கும் ஒவ்வொருவருக்கும் இடது கையைத் தன் திருவடிப்பக்கம் காட்டி அந்த செய்கையால் சொல்லுகிறான். "மாமேகம் சரணம் வ்ரஜ" என்பது பெருமாள் காட்டுவது. இதை ஒவ் வொருவருக்கும் காட்டிக்கொடுக்கும் வாத்ஸல்யம் தான் அவனை "நிகரில் புகழா"னாக ஆக்குகிறது.

நித்ய சூரிகளும் நாமும் ஒக்கத் தொழும் பெருமாள். "வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு;" "மண்ணோர் விண்ணோர்க்குக் கண்ணாவான்; விண்ணவரும் மண்ண வரும் விரும்பும்வெற்பு" என்றெல்லாம் ஆழ்வார்கள் அருளிச் செய்துள்ளார்கள்.

பரமபதம் - நித்ய சூரிகள் தொழ

திவ்ய தேசங்கள் - ஸம்சாரிகளான நாமெல்லாம் தொழ

இது எப்படி இருக்கிறது என்றால்-இரட்டைப் பிள்ளை களைப் பெற்ற ஒரு தாய், வலது பக்கமும், இடது பக்கமும் மாறி மாறி பாலூட்டுவது போல் அமைந்துள்ளது எம்பெரு மானின் வாத்ஸல்யம்.

# VI

## நித்ய சேஷத்வம்

### (1) [illegible] தீர்க்கும் மலை – [illegible]

பரமபதம் என்ற வைகுண்டமானது இருவினையும் போனவர்களாலே பெறப்படுவதொன்றாகும். இருவினைப் போவதற்கு பக்தியென்ற உபாயம் வேண்டும் ; பரமபதமே வினைகளைப் போக்கவல்லதொன்று. அது வெகு தூரத்தில் உள்ளது. அவ்வாறன்றி திருவேங்கடம் இப்புவியிலேயே இருப்பது. இத்திருமலையின் சேர்க்கையாலே, இப்புவி நீள் நிலமாயிற்று. மிக மேன்மையுற்றது. இதுவே வினைகளை யெல்லாம் முழுமையாகப்போக்குவதால் வேங்கடமென்று வழங்கப்படுகின்றது. வேங்கடம் சென்றார்க்கு தேஹாத்மா பிமானமும் அதன் மூலமான பிறவித் தொடர்ச்சியும் போய்விடும். இம்மலை இதற்காகவே பரமபதத்தினின்று எம்பெருமானால் கொணரப்பட்டதாகும். ஆயினும், இதனை சென்று ஏறி அவனைக் காண நமக்கு சக்தியில்லையே. சென்று தொழுகிறவர்கள் தேவர்கள் என்றே சொல்ல வேண்டும். அவர்கள் நித்யசூரிகள். "நதே மனுஷ்யா தே வாஸ்தேயே சாரு ஷுப குண்டலம், முகம் த்ரக்ஷயந்தி ராம ஸ்ய வர்ஷே பஞ்ச தசே புன:" என்று தயரதன் துயரமுற்றுச் சொன்னதே நாமும் சொல்வதாம். இவ்வளவருகில் இருப்பனை பெற பாக்கியமற்ற நொண்டிகள் நாம். நமக்கு இனி இருவினையும் போனால்தான் வேங்கடம்புகலாகும் போலும் என்றபடி அவர் வருந்துவதை காணலாம். ஆகவே, வினைகளைப் போக்கும் மலை திருமலை என்பது இங்கு தெளிவாகிறது மற்றும் எம்பெருமானை உபாய உபேயம் என்று தெளிந்து ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி திருமலையானுக்கு கைங்கர்யம் செய்வதே பிறவிப்பயனாகும்.

**(2) [illegible]**

*தலைப்பெய்காலம் நமன்தமர் பாசம் விட்டால்**
*அலைப்பூணுண்ணும் அவ்வல்லலெல்லாம்அகல**
*கலைப்பல் ஞானத்து என் கண்ணனைக் கண்டு கொண்டு**
*நிலைப்பெற்றுஎன்னெஞ்சம் பெற்றது நீடுயிரே**

(திருவாய் 3-2-10)

உயிர்பிரியும் தருணம், ஜீவன் தேஹத்தைவிட்டு வெளியேறும் போது அந்த உயிர் பிரியும், வேதனையால் பெருமாளை நினைக்கக்கூட இயலாத நிலை, அதை எவ்வாறு வர்ணிப்பது.

“ப்ராணப்ரயாண ஸமயே கபவாத பித்தை:
கண்டாவரோதந விதௌ ஸ்மரணம் குதஸ்தே”

(முகுந்த மாலை - 7)

என்பதாகவும்,

“எய்ப்பு என்னை வந்து நலியும் போதங்கு,
ஏதும் நான் உன்னை நினைக்கமாட்டேன்”

(பெரியாழ்வார் திருமொழி 4-10-1)

உள்ளதில் காணலாம். யமதூதர் பாசம் படுத்தும் துன்பம் பற்றி நினைத்துப் பார்க் கிறேன். ஆகையால் நடுங்குகின்றேன். பெருமானடியார்க்கு அதெல்லாம் வராதென்று யாரேனும் கூறும் பக்ஷத்தில்– கேட்டுக் கொள் ளுங்கள் நான் தற்போதுள்ள தசை அவ்வாறு உள்ள தன்றோ? நான் படும் வேதனை - பிரிவின் காரண மாக மட்டு மல்ல, இவ்வளவு கெஞ்சியும் பெருமான் இன் னும் முகம் காட்டாமலிருப்பதன் பொருள் என்ன? அவனுக்கு ஊரில் கெட்டபெயர் வராதோ? இதெல்லாம் என்னை மிகவும் வாட்டுகிறது என்னும் ஆழ்வார் அடுத்த பகுதியில் என் அல்லல் எல்லாம் அகன்று போகும்படியாக என் கண்ணன் திருமலைமேல் நிற்பவனை சேவிக்கும் பேறு பெற்று நிறை

மபற்றேன். என் ஆத்மா "ஸ்வத:" நித்யத்வம் பெற்றது இப்பொழுதுதான். ஞானம் பெற்றது இந்த தருணமே. சேஷத்வம் உணர்ந்ததும் அவனை சேவிக்கப்பெற்ற பின்பே என்கிறார். "அன்று நான் பிறந்திலேன், பிறந்தபின் மறந் திலேன்" என்பது போலே இந்த செய்கை அமைந்துள்ளது.

**[illegible]:**

குருகைப்பிரான் போலவே குருகைப்பிரான்பிள்ளானும் திருமலையநுபவத்தில் ஆழ்ந்து மிக்க ஈடுபாட்டுடன் அநுபவிக்கிறார். ஆளவந்தாரின் முக்கிய சிஷ்யர்களில் ஒருவர் திருவரங்கப் பெருமாளரையர். இவர் ஸ்ரீபகவத் ராமானுஜரின் ஐந்து ஆசார்யர்களில் ஒருவர். ஸ்ரீபகவத் ராமானுஜருக்கு இவர் நாலாயிர திவ்யப்ரபந்தம், ஸ்தோத்ரங்கள், நல்வார்த்தைகள் உபதேசித்தவர். ஸ்ரீதேசிகனின் குருபரம்பராஸாரம் என்ற வடமொழி நூலில் இவரை ஸ்ரீரங்கோ விக்ஞப்திகரர் என்று குறிப்பிடுகிறார். ஸ்ரீரங்கத்து அரையர் பெருமாளுக்கு முன்பு பாசுரங்களை தேவகான அபிநய இசையுடன் விண்ணப்பிப்பதே இவரின் நித்ய கைங்கர்யம்.

இந்த ஸ்வாமி ஒரு சமயம் திருமலை சென்று பெருமாளை மெய்சிலிர்க்க கைகூப்பி சேவித்து நின்ற போது, பெருமாள் மகிழ்ந்து 'செந்தமிழ்பாடுவார்வணங்கும்தேவர்' அருளப்பாடு நியமித்து திருவரங்கப் பெருமாள் அறையர் முதல் மூன்று அந்தாதிகளையும் பாடி பகவானை மகிழ்வித்தாராம். 'செந்தமிழ் பாடுவார் வணங்கும் தேவர்' என்று பெரிய திருமொழியில் திருமங்கை மன்னன் அருளிச் செய்துள்ளார். சங்கத்தமிழ் பாடிய முதல் மூன்று ஆழ்வார்களை பற்றியே இங்கு திருமங்கை ஆழ்வார் திருவுள்ளம் பற்றினார். அம்மூவருக்கும் திருமலை மீது விசேஷ அபிமானம் என்பது ஒரு பக்கமிருக்க பெருமாளுக்கே அவர்கள் பாசுரங்கள் மீது விசேஷ ஈடுபாடு - பக்ஷபாதமோ என்று கூட நினைக்கத் தோன்றும்

**(1) [illegible]:**

அன்று முதல் இன்று வரை திருவேங்கடவன் அனைவர்க்கும், ஸர்வஜீவராசிகளுக்கும் பொதுவாகக் கருணை காட்டுபவன். காட்டிலுள்ள வேடர், குறவர், யானை, குரங்கு போன்ற ஞானஹீனர்களுக்கும் அவனே ரக்ஷகன், அவனின் ரக்ஷகம் நிறம் பெறுவது இதனால்தான். நாம்கூட அவனிடம் ரக்ஷணம் கேட்கிறோம். கத்யத்திலும் இந்த கருத்தை ப்ரதிபலிக்கும் அவற்றின் ஸ்வரூபம் தெரியும் படி உள்ள பதங்களான அநாலோகித விசேஷ - அசேஷலோக சரண்ய நிருபணம்தான். பரம தயாளுவாக திருமலையில் கோயில் கொண்டுள்ளதை, மற்றை எல்லாரையும் விட இந்த முதல் மூன்று ஆழ்வார்கள் தாம் பரவலாகப் பாடியுள் ளார்கள்.

**(2)திருவேங்கடமுடையான் அனைவருக்கு அளித்த சரணம் – திருவேங்கடமே யாம் விரும்பும் வெற்பு:**

*மனத்துள்ளான் வேங்கடத்தான் மாகடலான் *மற்றும்,*
*நினைப்பரிய நீளரங்கத்துள்ளான்* -எனைப்பலரும்*
*தேவாதிதேவ னெனப்படுவான்* முன்னொருநாள்*
*மாவாய்பிளந்தமகன்.*

(இரண்டாம் திருவந்தாதி - 28)

*நெறியார் குழற்கற்றை முன்னின்றுபின்தாழ்ந்து**
*அறியாதிளங்கிரியென்றெண்ணி *- பிரியாது*
*பூங்கொடிக்கள் வைகும் பொருபுனல்குன்றென்னும்**
*வேங்கடமே யாம்விரும்பும் வெற்பு*

(இரண்டாம் திருவந்தாதி 53)

உத்தமமான பக்த சீலர்கள், திருமலையாழ்வாரையே தெய்வமாகக் கருதிப் போற்றி, நின்று, ஈடுபட்டு,த்யானத்தில் உலகத்தை மறந்து, ஓர் அசைவு மூச்சு இல்லாமல் நிற்கிறார் கள்; சிறிய மலை போல் தோன்றும் கருங்குழல்-கற்றை யை.கரும்பாறை போல் தோற்றமளிப்பதால் மேலும் அசை

யாமலும் இருப்பதால், பூங்கொடிகள் படர்ந்து பரவப்பயன் படுத்துகின்றனவாம்! அத்தகையர் நெறியார், புனல் பொருப்பு, பூங்கொடி - எல்லாம் கொண்ட திருவேங்கடமேயாம் விரும்பும் வெற்பு! இப்பாசுரங்களை செவிசாய்த்த பரமரசிகனான பெருமாள் அறையர் ஸ்வாமிக்கு சிறந்த சன்மானங்கள் கொடுத்து கௌரவித்தானாம். மேல் கொண்டு அத்யயன உத்ஸவத்தில் அவரை வரவழைத்து அருளிச் செயல்களை செவி சாய்த்தானாம். அங்கே அரங்கன் நித்யமாக அநுப விப்பதை, இங்கு திருவேங்கடத்தான் ஒரு வருட காலம் அநுபவிக்க முடிந்தது.

**(3) தேவகான ரஸிகன் திருவேங்கடத்தான் சிறிய திருமடலை செவிசாய்த்தது:**

மற்றொரு முறையும் திருவரங்கத்தறையரை திரு மலைக்கு வரவழைத்தான் ஸ்ரீநிவாஸன். அறையரும் பெரு மாளின் ரஸிகத் தன்மையை உணர்ந்து சிறிய திருமடலை எடுத்துப், பாடப்பாட, பெருமாள் ஆனந்தக் களிப்பில் ஆடினான். அபிநயம் கூடப்பிடித்தான், தலையசைத்து ஆமோதித்தானாம்! இந்த செய்திகள் திருமலை ஸ்தல புராணம் தொகுப்பில் (நரஸிம்ஹப்ரியா இதழ்களில் வெளிவந்தவை) விவரமாகக் காணப்படுகிறது.

*காரார் வரை கொங்கைக் கண்ணார் கடலுடுக்கை**
*சீரார் சுடர் சுட்டிச் செங்கலுழிப் பேராற்று ......**
*தேரார் நிறை கதிரோன் மண்டலத்தைக் கீண்டு புக்கு**
*ஆராவமுதமங்கெய்தி * - அதினின்றும்*
*வாராதொழிவதொன்றுண்டே? *அது நிற்க*
*ஏரார் முயல் விட்டுக் காக்கைப் பின் போவதே?**

.................................................................................

*தீராதென் சிந்தை நோய் தீராதென் பேதுறவு**
*வாராதுமாமை அது கண்டு மற்றாங்கே**
*ஆரானும்மூதறியும் அம்மனைமார்சொல்லுவார்**
*பாரோர்சொலப்படும் கட்டுப்படுத்திரேல் **

*ஆரானும் மெய்ப்படுவனென்றார் - அதுகேட்டுக்**
*காரார் குழற் கொண்டைக் கட்டுவிச்சி கட்டேறி**
*சீரார் சுளகில் சில நெல் பிடித்தெறியா **
*வேரா விதிர்விதிராமெய்சிலிராக்கைமோவா.....**
*பேராயிர முடையானென்றால் -*
*நீரேதும் அஞ்சேன்மின் நும்மகளை நோய் செய்தான்**
*ஆரானுமல்லன் அறிந்தேன் அவனை நான்**
*பேராயிரமுடையான் பேய்ப்பெண்டீர் நும்மகளை**
*தீரா நோய் செய்தானென உரைத்தாள்* ....*
*காரார் திருமேனி காணுமளவும் போய்ச்**
*சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே **
*மதிகட்சியூரகமே பேரகமே*.......*
*ஊராரிகழிலும் ஊராதொழியேன் நான்**
*வாரார் பூம்பெண்ணை மடல்.*

இந்த ப்ரபந்தத்தில் எடுத்த உடனேயே அர்ச்சாவதார லீலைகளை பரக்கப் பேசி அதற்கு உபலக்ஷணமான திரு வேங்கடத்தையே முதலில் எடுத்து, அர்ச்சாநுபவம் கையி லிருக்க எப்பொழுதோ வரப்போவதான முக்தாநுபவம் தேடிப் போகவோ? என்று பரகாலன் அழுத்தந்திருத்தமாய் சொல்லி யிருப்பதனாலும் இந்த திவ்யப்ரபந்த ஸ்ரீஸூக்தியில் திரு வேங்கடவனுக்கு அதிக உகப்புண்டாயிற்று போலும்.

VIII. தெய்வ நன்னோய் :

“வெருவாதாள் வாய் வெருவிவேங்கடமே வேங்கடமே என்கின்றாளால்” என்ற பெரிய திருமொழி 5-5-1 வது தாய் பாசுரம் - அதுவும் திருவரங்கத்துக்கிட்ட பதிகமே. ஆனாலும் இதை அறையர் சேவிக்கவில்லை! தீராஎன்னோய் என்பது, பெருமாள் மீது ஆராத காதல் ஏற்பட்டு, பரபக்தி, பரஞ்ஞான நிலைகளைத் தாண்டி பரமபக்தி அடைந்த தசை. அந்த நிலையில் என்ன வைத்தியம் செய்ய முடியும்? மற்ற எல்லா ஆதி வ்யாதிகளுக்கும் (மன உடல் நோய்களுக்கு) வைத்

தியத்துறை முன்னேற்றங்கள் குணமளிக்க கூடும். இன்றி ல்லா விட்டால், நாளை, ஆனால், இந்த நோய்க்கு 'தீராநோய்' 'தெய்வ நன்நோய்' என்பர் நம்மாழ்வார். இது அனைவரும் வேண்டிப் பெற வேண்டிய நன்நோய்.

IX

## (1) ஸ்ரீபகவத் ராமானுஜரின் அநுபவம் :

ஸ்ரீ ராமானுஜரின் திருமலை அநுபவம் சொல்லிலடங் காது. அதில் ஓர் திவலையைக் காண்போம். ஒரு சமயம். ஸ்ரீரங்கத்தில் பகவத் விஷய காலக்ஷேபம் நடை பெற்றுக் கொண்டிருந்தது. கீழ்கண்ட திருவாய்மொழி முதற் பாசுரத்தில் -

*"ஒழிவில் காலமெல்லாம்உடனாய் மன்னி**
*வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்**
*தெழி குரல் அருவி திருவேங்கடத்து**
*எழில் கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே*"*

திருவாய்மொழி(3-3-1) ....என்றும்

"சிந்துபூ மகிழும் திருவேங்கடத்து என்னும் இரண் டாவது பாசுரத்தின் போது எம்பெருமானார் எண்ண மெல்லாம் திருவேங்கடமலைமேல் நந்தவனம் அமைப்பதை பற்றியே சிந்தனை. ஆழ்வாரின் பாசுரங்களின் அர்த்தாநு பவம் பெற்றால் மட்டும் போதுமா?- அவர் சொன்னவற்றில் அநுபவம் பெற வேண்டாமோ என்ற தாபம் அதிகரிக்க அதை சபையில் அனைவரெதிரில் தம் எண்ணத்தை வெளியிட்டு - இந்த குளிரும் தண்ணருவி பாயும் திருவேங்கடத்தில் இந்தக்கைங்கர்யம் செய்ய யார் ப்ரியப்படுகிறார் என்று கேட்க, அனந்தாழ்வான் என்ற மகான் தாம் திருவேங்கட முடையானுக்கு நந்தவனம் அமைத்து புஷ்ப கைங்கர்யம். ராமானுஜர் நியமித்ததால் செய்ய முன் வந்தார். இதற்குப் பிறகு ஸ்வாமியின் பெயர் 'நீரல்லவோ ஆண் பிள்ளை' என்ற ஸ்ரீராமானுஜரின் வாக்குப்படி அனந்தான் பிள்ளை என்ற பெயர் பெற்றது திருமலை வரலாற்றில் பொன்னெழுத் தில் பதிக்கப்பட்டது.

## 2) கைங்கர்யஸ்ரீயும் நம் சித்தாந்தமும்

இங்கே ஓர் ரஸமான விஷயம் கவனிக்கணும். இளையாழ்வார் என்ற திருநாமம் லக்ஷ்மணன் என்பதன் தமிழாக்கம். அதுவே ராமானுஜரின் நாமகரணமாகவும் அமைந்துள்ளது. லக்ஷ்மணன் ராமனுக்கு கைங்கர்யம் செய்யவே பிறந்தவன். அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ............................ என்றெல்லாம் வேண்டிக் கைங்கர்ய பாக்யத்தைப் பெற்றவன் லக்ஷ்மணோ லக்ஷ்மீ ஸம்பன்ன: என்பதற்கு உரை செய்வது, அவ ன் கைங்கர்யச் செல்வம் பெற்று விளங்கினான் என்று தானே நம் சித்தாந்தக் கொள்கைக்கே அடிப்படை சேஷத்வ ஸ்வருபமுடைய ஜீவாத்மா என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். ஸ்ரீ ராமானுஜர் சேஷாவதாரர், சேஷாத்ரி மீது சேஷத்வ நிருபகமாக நித்ய கைங்கர்யம் செய்ய ஓர் ஆள் தேடின போது வந்து நின்றவர் அனந்தாழ்வான் - அவரும் சேஷனின் மறுபெயரே. சென்றால் குடையாம், இருந்தால் சிம்மாஸனமாம், நின்றால் மரவடியாம் என்பது சேஷனின் சேஷத்வம்.

*சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்*
*நின்றால் மரவடியாம் நீள் கடலுள் - என்றும்*
*புணையாம் மணிவிளக்காம் பூம் பட்டாம் புல்கும்*
*அணையாம் திருமாற்கரவு*

(53 ஆவது முதல் திருவந்தாதி)

## 3) திருமலையே வேதமலை – ஸ்ரீ ராமானுஜரின் கருத்து

ராமானுஜர் முதலில் திருமலை வந்த போது, மலையேறிப் போய் வேங்கடவனை சேவிக்க மிக்க ஆவல். ஆனால்வேத துல்யமான மலையை அதுவும் சேஷனின் திருமேனியென்று எல்லோராலும் போற்றப்படும் இந்த திருமலையை தம் காலால் ஏறி அபச்சாரப்படவிரும்ப வில்லை. ஆகவே, அடி வாரத்தில் உள்ள ஆழ்வார்கள் ஸந்நிதியை சேவித்து திருப்தியோடு ஊர் திரும்பினாராம். ஆழ்வார்களே இந்த காரணத்தால் தான் மலையேறாமல் கீழேயே தங்கி விட்டதாக ஐதீஹ்யம்

பிறகு ஒரு சமயம் பல பெரியவர்களின் சமாதான பேச்சினால் உடையவர் மலையை முட்டியினாலேயே ஏறிச் சென்று எம்பெருமானை மூன்று நாட்கள் சுத்த உபவாசமாக எழுந்தருளியிருந்து பெருமாளை ஆராவமுதாக, மனதாரக் கண்ணாரக் கண்டனுபவித்தார் என்று வரலாற்றில் காணக் கிடைக்கிறது. அவர் தனது உறுதியான நியமத்தை உத் தேசித்து தம் அனுபவத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டு ஊர் திரும்பினாராம்.

### (4) திருமலையானும் ஸ்ரீ ராமானுஜரும்

திருமலைவாஸன் இப்பேர்பட்ட பாகவதரை மறுபடியும் காண விருப்பம் போலும். நம்மைப்போன்றவர்களையே ஆகர்ஷிப்பவன் ஆயிற்றே பகவத் ராமானுஜர் மறுபடியும் திருமலையில் வருகை தருகிறார். இம்முறை அங்கு, அந்த வேத வெற்பின் மீது, வேத விழுப்பொருளின் முன்னிலையே ஒரு அரிய நூலை இயற்றி சமர்ப்பித்தார். அந்நூலின் பெயர் வேதார்த்த ஸங்க்ரஹம். இதை ஒன்பது ரத்தினங்கள் என்று சாஸ்திர உலகம் கொண்டாடுகிறது. இந்த நவரத்ன க்ரந்தங்களில் திருமலையில் அருளிய க்ரந்தமான வேதார்த்த ஸங்கரஹமே முதலாவது நூல், முதன்மையான நூல் என்று கூட சொல்லலாம்.

விசிஷ்டாத்வைதக் கருத்துக்களை இன்னும் ஸ்வதந் திரமாக வெளிப்படுத்த வேண்டி, வேதார்த்த ஸங்கரஹத்தில் ஸ்வாமி, உபநிஷத் ஸ்ரீவிஷ்ணு புராணாதிகள், பகவத் கீதை இவை எப்படிப் பொருள் கொள்ளப்பட்டு நமது கோட்பாடு களுக்கு அஸ்திவாரமாகின்றன என்று தெளிவாக்குகிறார்.

### (5) மங்கள ஸ்லோகத்தில் காணப்படும் குறிப்பு

*ஸ்ரீ பாஷ்யக்ருது பந்யஸ்தோ ய : ஸ்ரீசைலபதே புர:*
*வேதார்த்த ஸங்க்ரஹஸ்யாஸ்ய குர்மஸ்தாத்பர்யதீபகாம்*

இந்த பீடிகா ஸ்லோகம் ஸுதர்சன பட்டர் என்கிற ச்ருத ப்ரகாசிகாசார்யர் வ்யாக்யான முன்னுரையாக அமைந்தது.


மேற்படி நூல் திருவேங்கடேசன் திருமுன்பு உபன்யாஸ மாக செய்யப் பெற்றது என்ற சங்கதியை உறுதிப்படுத்து கிறது.

ஸ்ரீ பாஷ்ய மங்கள ஸ்லோகத்திலும் உள்ள வரிசை யில் ஒரு வரி இவ்வாறு காணப்படுகிறது - 'ச்ருதிசிரஸி விதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே' என்ற தொடர் திருமலை ஸ்ரீநிவாச னைக் குறித்துதான் உள்ளது போலும்.

### (6) திருமலையான் விஷ்ணுவா அல்லது சிவனா?

ஒரு முறை திருமலையில் பகவத் ராமானுஜர் வருகை தந்த போது, அங்கு வைஷ்ணவர்களின் பக்தி ஈடுபாடு குறைந்து சைவர்களின் ஆதிக்கம் அதிகமாயிருந்த சமயம். அன்றைய அரசன் தொண்டைமானால் (சிறந்த வைணவ பக்தன்) நிலைமையை சமாளிக்க முடியவில்லை. வாதம், ப்ரமாணம், பேச்சு வார்த்தை எங்கு எடுபடும்? ஸாராஸார விவேகர்கள், நன்கு படித்தவர்கள், வெறும் அஸூயைப் பிண்டங்களாக இல்லாமல் எங்கு உண்மை, சாஸ்திர பலம், ப்ரமாணம் இருக்கிறதோ அதை ஏற்கும் தன்மையாளர் - இத்தகையோர் இருப்பர், படிப்பர் என்ற நம்பிக்கையில்தான் நான் வேதார்த்த ஸங்கிரஹத்தைச் செய்தேன் என்று நூல் முடிவில் சொல்லி இருப்பதைக் காணலாம். அன்று அந்த மாதிரியோர் குழப்பமான காலம்.சாஸ்த்திர வாதத்தால் அரசனை அறிவுறுத்தப் பார்த்தார். பயனில்லை. அவன் தர்ம சங்கடத்தில் இருந்தான் ஏனெனில் பகவான் முன்பொரு சமயம் அரசன் எதிரிகளின் படையெடுப்பின் போது திருமலை யானை சரணடைந்து உதவி வேண்டிய போது தனது சங்கு சக்கரங்களை கொடுத்து உதவினாராம். அதை சைவர்கள் இந்த சமயத்தில் பயன்படுத்திக் கொண்டு உங்கள் தெய்வ மானால் அவருக்கு சங்கு சக்கரம் இருக்க வேண்டுமே அது காணவில்லையே? ஆகவே இந்த மூர்த்தி சிவன் தான் என்று வாதாடினார்களாம்.

அப்பொழுது, ஸ்ரீராமானுஜர் பெருமாளை வேண்டி அப்பனே இதென்ன லீலை? கள்ள வேடத்தைக் கொண்டு போய்ப் புரம்புக்கவாறும், கலந்தசுரரை உள்ளம் பேதஞ் செய்திட்டு நீ விளையாடினது உயிரை உருக்கி உண்ணும் இங்கே உன் ஸந்நிதியில் ஆழ்வார் பாசுரங்கள் திருச் செவி சாய்ப்பது நின்று விட வேண்டியதுதானா? என்று மன முருகி நெஞ்சு தழுதழுத்துக் கதறினார். அப்பொழுது, அவருக்கு அங்கோர் உபாயம் தோன்றியது. பக்தர்கள் அன் புடன் சமர்ப்பிக்கும் அங்க ஆபரணங்களையும் ஆயுதங்களையும் ஆதாரத்துடன் பெருமாள் ஏற்கிறான் என்று புராண ஆகமங் களில் இருப்பதைக் கருத்தில் கொண்டு, அரசனிடம் சென்று தம் மனத்திலிருப்பதை விண்ணப்பித்தார். இன்று இரவு திருக்காப்பு (கதவுகள்) சாத்து முன் சக்ரம் சங்கம் ஆகிய பெருமாளின் ஆயுதங்களை அவர்கள் வைக்கவும். நாளைக் காலையில் திருக்காப்பு நீக்கியபின் பெருமாளின் முடிவு தெரிந்துவிடும் என்ற விண்ணப்பத்துக்கு அவர்களும் ஒத்துக் கொண்டனர். மறுநாள் காலை திருக் கதவுகள் திறந்தவுடன் பெருமாள் திருக்கைகளில் சங்கும் சக்கரமும் எந்தியிருப்பது தெரிகிறது. இதை வடுக நம்பியின் யதிராஜ வைபவம் வெகு அழகாக விவரிக்கிறது.









திருமலை அப்பனுக்கு சங்காழி அளித்த இந்தப் பெருமை யோடு இன்னொன்றும் ராமானுஜருக்கு உண்டு. பெருமாள் திரு மார்பில் ஸ்வர்ண லக்ஷ்மியை, இரண்டு கைகளுடன் அமர்ந்த கோலமாக அமைத்து சமர்ப்பித்தார். திருவாய்மொழியில், அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் *மங ்கையுறை மார்பா* என்பதைப் பொருளுடைய தாக்கி உகப்பெய்தினார். அவர் பெருமாளுக்குப் பெண் கொடுத்தது போலாயிற்றென்பர். இதை கருத்தில் கொண்டு அமைந்துள்ளது வடுக நம்பியின் ராமானுஜ அஷ்டோத்திர-சதநாமாவளி இதை பற்றிய இரண்டு திருநாமங்களை பொருத்தமாகக் குறிப் பிடுகிறது.

### (7) குத்ருஷ்டிகளின் வாதம்–பதில்–கருத்து

பிறகும் சில காலம் வீண் பிடிவாதங்கள் இருந்து வந் தது. இதற்கு திருமழிசை ஆழ்வாரின் பாசுரம் ஸாமாநாதி காரண மாக உள்ளதை கண்டதாலோ என்னவோ?

*தாழ் சடையும் நீள் முடியும் ஒண்மழுவும் சக்கரமும்**
*சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் *– சூழும்*
*திரண்டருவிபாயும் திருமலைமேல் எந்தைக்கு*
*இரண்டுருவுமொன்றாஇசைந்து*

*மூன்றாம் திருவந்தாதி* – 63

தாழக்கட்டிய ஜடைமுடி, ரிஷிகள், தீக்ஷையேற்றவர், பிக்ஷையெடுப்பவர், வ்ரதமிருப்பவர்-இவர்கள் ஏற்கும் கோலம், இவர்கள் மனக்குறை தீர, வேண்டுதலுக்கு, நேர்ந்து கொண்டு என்ற வ்யவஹாரங்கள் அன்றிலிருந்து இன்றளவும் உலகில் காணக்கிடைக்கிறது. இதை ஸாதக வேஷம் என்று கூறுவார் கள். ஒரு சாதனம் உபாயம். கர்மா அநுஷ் டிக்கும் நிலை யாருடை யது? சிவனுடையது நீண் முடி சர்வேச்வரத்வ சின்னம். எம்பெரு மான் எவருக்கும் எதையும் தரச் சக்தன். அவன் யாரிடமும் எதையும் கேட்டுப் பெற வேண்டிய ப்ரஸங்கமில்லை. ஏனெனில் அவன் அவாப்த ஸமஸ்த காமன் என்றழைக்கப்படுகிறான். அது அவன் தரித்திருக்கும் பெரிய கிரீடத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். அவன் நமக்கு சித்தமாக உள்ள போது, அவனுக்கு வேண்டிய தொன்றில்லையே என்பதாக உள்ளது.

தோன்றுமால் என்ற வார்த்தைக்கு விவரமாய் காணப் படும் விஷயத்தை காணில்-என் தந்தை, என் அப்பன் பெரு மாளுக்கு, ஸர்வாத்மாவாய் ஸர்வேச்வரனாய் இருப்ப வனுக்கு உள்ள நியதமான அடையாளங்களுடன் இந்த சாதக வேஷ சின்னங்கள் கூடப் பொருந்தியிருக்கும்படி ஒரு சௌசீல்யம் கூட இருக்குமோ? என்று வியப்புடன் பேசும் இடம், உன் ஆதி ராஜ்யத்திற்கும் இந்த பிக்ஷுக வேஷத்திற் கும் என்ன இசைவு? ஏன் இப்படி? மூவுலகும் ஆளும் நீ மூவடி மண் கேட்க வாமனன் உருவில் போனது போன்ற சௌசீல் யமோ? பாண்டவர்க்காகத் தூது போனது போலவோ? இப்படி மாய்ந்து போகிறார்-அதன் வெளிப்பாட்டே 'தோன்று மால்' என்ற வியப்பு. திருமலைமேல் எந்தை என்பது ஒரு அபிமாநக் குறிப்பீடு. அவ்வளவேதான். அதற்காக,திருப்பதி பெருமாள் சிவரூபம் என்ற தான் தோன்றிப் பேச்சுக்கள் எல்லாம் ஆதாரமற்றவை என்பதை பேயாழ்வாரின் மூன்றாம் அந்தாதியில் உள்ள பாசுரத்தால் அறியலாம் -

*அலரெடுத்த உந்தியான் ஆங்கெழிலாய *
மலரெடுத்த மாமேனிமாயன் – அலரெடுத்த *
வண்ணத்தான் மாமலரான்வார்சடையான் * என்றிவர்கட்கு
எண்ணத்தானாமோ? இமை.*

மூன்றாந்திருவந்தாதி - 97

இந்திரன், ப்ரம்மா, சிவன் இவர்கட்கு மாயனை, அவன் பெருமையை சிறிது கூட, நெஞ்சால் கூட நினைத்திட முடியுமா என்பதே இதன் பொருள்.

**(8) தாளப்பாக்கம் சென்னையாவும் திருமலை அப்பனும்**

தாளப்பாக்கம் சென்னையா என்பவர் திருவேங்கடத் தானை மனமுருகப்பாடி மகிழ்வித்து வந்தார். பெருமாளும் பாட்டிற்கேற்பத் தாளலயத்துடன் ஆடுவானாம். இருவரும் பரஸ்பரம் களித்திருப்பாராம். கண்ணன் குரவைக்கூத்தாடி யது அம்பலத்தில் திருவேங்கடவன் ஆடியது அந்தரங்

கத்தில் என்று சொல்வதுண்டு. இந்த ஸ்வாமி சென்னையாவிடம் பகவத் ராமானுஜருக்கு ரொம்ப ப்ரீதி, கௌரவம் உண்டு. ஒரு சமயம் அந்த ஸ்வாமியிடம் பகவத் ராமானுஜர் வேண்டுகோள் விடுத்தார்-பக்த சிகாமணியே உம்மோடு அப்பன் இவ்வாறு ஸல்லாபம் செய்யக் கிடைக்கிறதே. எனக்கு பரமபதம் உண்டா என்று கேட்டுச் சொல்லக் கூடுமா? இவரின் பேரைச் சொல்லி மோக்ஷமடைவார்கள் என்றிருக்க, என்ன விநோதம் இவர் கேள்வியில்?

அப்படியே, ஒரு சமயம் ஸ்வாமி பகவானுடன் பாடிக் களித்திருக்கும் சமயத்தில் ராமானுஜருடைய விண்ணப்பத்தை தெரிவித்தார். எம்பெருமானும் இதில் என்ன சந்தேகம் அவருக்கில்லாமலா? என்று பதிலிருத்தாராம். தமக்கும் உண்டா? என்று கேட்ட போது நிச்சயம் ராமானுஜ சம்பந்தம் ஏற்பட்டால் உண்டு என்று பதிலுரைத்தானாம். இவர் பாடிய பாட்டுக்கும், அவன் ஆடிய ஆட்டத்துக்கும் வரவு செ லவு சரியாக போயிற்று. உபாய அநுஷ்டாநமில்லாமல் நேரடியாகப் பரகதி கிடையாது என்று சாஸ்திரத்தை எடுத்து கூறியிருப்பது தெளிவாகிறது. கோவில் ப்ரதக்ஷிணம் கைங்கர்யம் இவைகளால் பகவான் (மோக்ஷம்) அடைய முடியும் என்பது வெகு ஸ்பஷ்டமாக தெளிவாகிறது இங்கே.

## X

### மழை போல் நீராய் – செல்வ நாயகன்

பரமனின் பெருமை கடலின் ஆழத்தைவிட பல மடங்கு பெரிது. ஆகாசத்தை விடவும் பல கோடி மடங்கு பெரிது. அவனது பெருமையை நாம் பேசப் புகுவது தகுமோ? நாம் அவன் பெருமையை ஒரு துளிதான் புரிந்து கொண்டு உள்ளோம். பரி பூர்ணமான செல்வத்தின் நாயகன் இவன் என்பதை காணும் ஸ்ரீ ஸூக்தியின் மூலம் அனுபவிக்கலாம்.

*ஸ்ரீநிவாசம் ஜகத்யோநிம் ஸ்ரீமத்பி: பரிஸேவிதம் ।*
*ச்ரிதார்த்திஹரணம் வந்தே ச்ரேயஸாம் தாயகம் விபும் ॥*
*தீர்த்த மூர்த்தி ஸ்தலை க்யாதே ப்ரஸித்தே வேங்கடாசலே ।*
*ஸர்வார்த்த வேங்கடாஸ்து தத்வா ராஜதி பூதலே ॥*

செல்வம் என்றால் பணம், ஐஸ்வர்யம், பதவி, அந்தஸ்து, சொல்லாடல், ஆட்சித்திறன் முதலியவையாகும். இதற்கெல்லாம் இருப்பிடம் திருமகள் என்பது அனைவரும் அறிந்ததே.

முதல் வேதமாகிய ரிக் வேதத்தில் இருக்கும் ஸ்ரீஸூக்தியில் பதினைந்து ரிக்குகளாலும் எல்லாச் சீரிய பொருள்களுக்கும் உறைவிடமானவனும் அவைகளை கொடுப்பவளும் லக்ஷ்மியே ஆவாள் என்று உறுதியாக கூறுகிறது. இந்த லக்ஷ்மியான திருமகளை அஷ்டலக்ஷ்மியாக உலகில் கொண்டாடுகிறார்கள். மற்றை தேவதைகளும் இவ்வாறு வரங்களை அளித்தாலும் அது அவர்களின் லக்ஷ்மீ கடாக்ஷத்தால்தான் என்று வேதம் கூறுகிறது. ஆகவே, எல்லா உயர் பொருட்களையும் தருபவள் லக்ஷ்மியே – இவளுக்கு நாயகன் நாராயணன். இவனை லக்ஷ்மீ நாராய ணன் என்று அறிகிறோம். இவனை ஸ்ரீநிவாசன் என்றும் அறியப்படுகிறது. ஸ்ரீ நித்ய வாஸம் செய்யும் இடம் என்பது பொருள்.

இந்த ஸ்ரீநிவாசன் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ப்ரளயங்களுக்குக் காரணமானவன். மாபெரும் புண்யாத்மாக்களான ஆழ்வார், ஆசார்யர்களால் வணங்கிப் போற்றப்படுபவன். ஆச்ரயித்தவர்களின் மனோரதங்களை நிறைவேற்றி வைப்பவன்.

புண்ய தீர்த்தங்களாலும், உயர்ந்த ஸ்தலத்தாலும், அழகான திவ்ய திருமேனியாலும், அனைவரையும் ஆகர்ஷிக்கும் ஸ்ரீநிவாசன் ப்ரஸித்தி பெற்ற வேங்கடாத்ரியில் நின்று இருந்து கலியுக வரதனாக அருள் பாலித்து வருகிறான்.

(1) [illegible]

திருவள்ளுவர் வாக்கில் உள்ளதை பார்ப்போம்

*பொருள் அல்லாரைப் பொருளாகச் செய்யும்.*
*பொருள் அல்லதில்லை பொருள்.*

இத்தால் விளங்கியது யாதெனில்-கல்வியோ, வீரமோ, ஆழகோ, திறமையோ ஏதும் அற்றவனாயினும். செல்வம் உடையவனாயிருந்தால் போதும் அவனை ஊரெல்லாம் கொண்டாடும்-படியாக இருப்பான்.

*கில்லோனோ ஆனாலும் கைப்பொருளொன்றுண்டாயின்*
*எல்லோரும் சென்றங்கெதிர்கொள்வர்*
*இல்லானை இல்லாளும் வேண்டாள் மற்றீன்றெடுத்த தாய்*
*வேண்டாள்*
*செல்லாதவன் வாயின் சொல்*

படிப்பில் பெரியவரும் வயதில் பெரியவரும் சீலத்தில் பெரியவரும் மற்றுள்ளோரும் தனத்தில் பெரியவரையே நாடி நிற்கின்றனர். இதைக் கொண்டு தான் பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை என்றான் வள்ளுவன். இவ்வுலகென்ன, எவ் வுலகுமில்லை என்றே தோன்றுகிறது. தேவர்களுக்கு கஷ்டம் துக்கம் இல்லை. ஆனால், சுகத்தில் தாரதம்யமுண்டு. சக்தி, பதவி, ரூபம் இவைகளில் ஏற்றத்தாழ்வு உண்டு. இதற்குக் காரணம் லக்ஷ்மீ கடாக்ஷமேயாகும். அந்த லக்ஷ்மீக்கு நாயகன் ஸ்ரீநிவாசன். பக்தர்களுக்குப் பணத்தையும் வரங் களையும் வாரி வழங்குகிறான். உலகில் ஒரு நாளில் பல லக்ஷங்கள் வசூலாகும் திவ்ய தேசம் இது ஒன்றேதான்.

## XI

### பின்னானார் வணங்கும் சோதி

இந்த யுகத்தில் வாழும் மக்களில் எவ்வளவு பேர்கள் இன்னும் பரமாத்மாவைப் பற்றி அறிவற்றவர்களாக இருக் கிறார்களோ தெரியாது. அவர்களும், ஏதாவது ஓர் பிறப்பில் அவனை புரிந்து வணங்கும்படியான ஒரு சந்தர்பத்திற்காக

பொறுமையுடன் நின்று அங்கு சேவை ஸாதித்து வருகிறான் என்றால் மிகையாகாது. மேலும் செடி கொடி தாவரங்களும், மிருகங்களும் பட்சிகளும் மற்றுமுள்ள உயிரினங்கள் பிற் காலப் பிறப்பில் ஆறறிவு படைத்த பிறப்பில் பிறக்கும்போது அவர்களுக்கும் அவனை அடையும் வகையாக அருள் பாலிக்கவே திருமலையில் நிற்பாய் என்றாகிறது. இந்த நிலையை திருமங்கை மன்னன் திருநெடுந்தாண்டகத்தில் இவ்வாறு அருளியுள்ளார்-10 ஆவது பாசுரம்

*பொன்னானாய் ! பொழிலேழும் காவல் பூண்ட*
*புகழானாய் இகழ்வாய தொண்டனேன் நான்*
*என்னானாய்! என்னானாய்! என்னல் அல்லால்*
*என்னறிவன்ஏழையேன்?* உலகமேத்தும்*
*தென்னானாய்! வடவானாய்! குடபாலானாய்!*
*குணபால மதயானாய் இமையோர்க்கென்றும்*
*முன்னானாய் !** **பின்னானார் வணங்கும் சோதி**
*திருமூழிக் களத்தானாய்! முதலானாயே!*

இதில் ஜீவாத்மாக்களை காப்பது என்ற ரக்ஷணையே அவனுக்கு ஸ்வரூபமாக உள்ளதை சுட்டிக் காட்டி, இகழ் வாய என்பதால் ஜீவாத்மாக்களின் ஸ்வரூப அஞ்ஞானம் மற்றும் கையாலாகாத தன்மை அதாவது ஆகின்சன்யமும் சொல்லப்படுகிறது. சரணடைவது ஜீவன் மேற்கொள்ளும் உபாயம். ரக்ஷிப்பது அவனது ஸ்வபாவம். ஆகவே, மேல் சொன்னபடி, ஒரு ஜீவாத்மாக்களையும் விட்டு வைக்காமல் ரக்ஷிப்பதற்கே தீக்ஷை கொண்டு உயர்ந்த மலை மேல் உயர்ந்து நிற்பாய். அவர்கள் எல்லாம் ஸ்வரூபம் அறிந்து கொண்டு தன்னை வந்தடையும் காலத்தையும் தருணத் தையும் நோக்கி, மலைமேல் நிற்பாய்.

இந்த திருமலையப்பன் ஸ்ரீநிவாசனின் தீக்ஷைக்கு உறுதுணையாக இருப்பவள் பிராட்டி. புருஷகாரம் என்ற தத் வத்தை நிர்வஹிப்பவள். அண்டும் சேதனர்களையும், அண்

பாத அறிவற்றவர்களையும் பாரபட்சமின்றி கருணை புரிபவள் தாயார். ராவண ஸம்ஹாரத்தின் போது, பிராட்டியின் (ஸாந் நித்யம்) ஸ்ரீயின் இருப்பிடமானதால்தான் பண்டிதனும் பாமர னும் ஸ்ரீநிவாசனை நெருங்கி பொருளைப் பெற்றுச் செல் கிறார்கள். இந்த கீழ்க்காணும் வேத வாக்யத்தில் இதை தெளிவாகவும் த்ருடமாகவும் அறியலாம். ச்ரத்தயா தேவோ தேவத்வம் அச்நுதே (காடகம் (3-3-11) என்கிறது. ச்ரத்தா என்பது மஹாலக்ஷ்மி ச்ரத்தாம் காமஸ்ய மாதரம் ஹவிஷா வர்த்தயாமஸி (அஷ்டகம்2, ப்ரச்னம்3, அனுவாகம் 66). காமாஸ்ய மாதரம் - மன்மதனுக்குத் தாய் மஹாலக்ஷ்மி யுடன் கூடியவன் தான் பரிபூர்ண தேவன், மற்றவர் குறையுடைய தேவர்கள் என்பதையும் பூர்ண பர்தவம் பெற்ற எம்பெருமானுடைய லக்ஷணங்கள். இதை திருமழிசைப் பிரான் அருளி யதை பார்ப்போம் .... பொல்லாத தேவரை தேவரல்லாரைத் திருவில்லாத் தேவரை தேரேன் மின்தேவு, என்று ஸ்ரீயை் உடையவன்தான் பரிபூர்ணதேவன் என்கிறார்.

## XII

### (1) வேங்கடேசன் – உயர்ந்த திருநாமம்

வேம் என்றால் பாபக் கூட்டங்களாகும். கட என்றால் அவைகளை கொளுத்துவது ஆகும். எல்லா பாபங்களையும் நசித்துப் பொசுக்கும் சக்தி படைத்ததால் இம்மலைக்கு வேங்கடாசலமென்று பெயர். வேங்கடமே விண்ணோர் தொழுவதும் மெய்ம்மையால் வேங்கடமே மெய் வினை நோய் தீர்ப்பதுவும்-வேங்கடமே தானவரை வீழத் தன்னாழிப் படை தொட்டு வானவரைக் காப்பான் மலை.

வேங்கடமலை மண்ணவரின் உடல் மன நோய்களைத் தீர்க்கும். இம்மலையை விண்ணோர் வந்து தொழுகின்றனர். அசுரர்களை நாசம் செய்யும் மலை இது.

ஸ்வாமி தேசிகனும் ப்ரபத்யே தம் கிரிம் என்று இத் திருமலையை தொழுகிறார்.

**(2) திருமலையின் மற்ற திருநாமங்கள்**

க்ருதயுகத்தில்,(வ்ருஷபாஸுரனை) அடக்கி ஆட் கொண்டதால் வ்ருஷபாத்ரி என்றும், த்ரேதாயுகத்தில் அஞ் சனா தேவிக்கு அருள் பாலித்ததால் அஞ்சனாத்ரி என்றும், த்வாபரயுகத்தில் சேஷாத்ரி என்றும், கலியுகத்தில் மனிதர் கள் செய்யும் அனேக வித பாபங்களை போக்கடித்துக் கொண்டு இருப்பதால் வேங்கடாத்ரி என்றும் அழைக்கப் பட்டு வருகிறது. ஆகையால், நான்கு யுகங்களிலும் புகழ் பெற்று விளங்குவது இத்திருமலை. மேலும், நேரேவை குண்டத்திலிருக்கும் க்ரீடானசலத்தின் ஒரு பாகம் பகவான் எழுந்தருளி யிருக்க வசதியாகப் பூமியில் திருமலையாக அமைந்தது.

புஷ்கரம் போன்றவை தீர்த்தத்தினால் ஏற்றமுடையது. ஸ்வயம் வ்யக்த மூர்த்தியும் ஞானப்பிரானுமான பூவா ராஹன் முதலிய மூர்த்திகளால் ஏற்றமுடையன. ஸ்ரீமுஷ்ணம் போன்ற திவ்ய ஸ்தலங்கள். நைமிசாரண்யம் முதலியன ஸ்தலத்தினால் ஏற்றமுடையன. இம் மூன்றினாலும் உயர்ந் தது வேங்கடமலை. வேங்கடமாமலையில் இந்த நான்கு வித புருஷார்த்தங்களையும் அதில் உள்ளடங்கிய மற்ற பேறு களையும் அளித்துக் கொண்டு பூவுலகில் வேங்கடநாதன் எழுந்தருளியுள்ளான்.

**(3) பூமியே உயர்ந்தது**

அகிலாண்டங்களிலும், கர்ம பூமியான பூமண்டலம் உயர்ந்தது. அதிலும் பாரத தேசம் உயர்ந்தது. அதிலும் திரு மலை மிக உயர்ந்தது. இதன் பெயரைக் கேட்கும் போதே பெருமை தெரிகிறது. திருமலை என்னும் திருப்பதியைக் கேள்விப்படாத மனிதனோ தேசமோ கிடையாது என்று நிச்சயமாகக் கூறலாம். திருமலை என்றாலே செல்வம்

கொழிக்கும் இடமென்று யாவரும் அறிவர். இதற்குக் காரணம் இங்கிருந்து அருள் பாலிக்கும் எம்பெருமானே (வேங்கடவனே தான்) காரணம்.

### (4) ப்ரஹ்மானந்த மயம்

வேதத்தின் சிரஸான உபநிஷத்தால் பரமனின் பெருமையை அளவிட்டு கூறமுடியவில்லை. அவனின் எல்லா குணங்களுமே வாசாமகோசரம். அனந்த கல்யாண குணாகரன் என்று கூறும் வேதோபநிஷத்துகள் அதன் எண்ணிக்கையும் அளவையும் கூற முடியாமல் திகைக்கிறது எனலாம்.

மானிடர்களின் ஆனந்தமே-கல்வி, ஆரோக்யம், இளமை, அழகு, திறமை, வலிமை, நெஞ்சுறுதி, வீரம், செல்வம் இவையெல்லாம் ஒருங்கே பெறப்பெற்றால் எவ்வளவு ஆனந்தமோ, அதற்கு நூறு மடங்கு ஆனந்தம் கந்தர்வானந்தம். இதை போல் நூறு மடங்கு தேவ கந்தர்வானந்தம். இப்படியே தேவானந்தம், இந்திரானந்தம், ப்ருஹஸ்பத்யானந்தம், ப்ரஜாபத்யானந்தம், இவ்வாறு பெருக்கிக் கொண்டே போய் அளவிட முடியாததாக ஆகிறது ப்ரஹ்மா னந்தம். இவையெல்லாம் ஏன் சொல்லப்படுகிறது என்றால், ஸ்ரீநிவாசன் எவ்வளவு ஆனந்தமயன் என்பதை விளக்கவே, இந்த ஆனந்தமயனின் ஸம்பந்தத்தினால் விமானமும் ஆனந்த மாகியது. அங்கு ஸதா ஸர்வதா ஆனந் தமேதான். இதை சாஸ்திரத்தினால் அறிவதோடு ப்ரத்யக்ஷ மாகவும் இங்கு காணலாம். பசி, தாகம், வேதனை, ஒன்றும் ஏற்படுவதேயில்லை.

### (5) சிறியனும் பெறும் பெருமை

பெரியவர்களுடைய ஸம்பந்தத்தால் சிறியவர் பெரு மை பெறுகின்றனர். இது உலகில் நாம் கண்கூடாகக் காணலாம். பெரியோர்களை முன்னிருத்தி தான் பின்னின்றால் கௌரவத்தை அடைகின்றான். தானே எல்லாவற்றிலும் முன்னே நின்றால் கௌரவத்தை பெறுவதில்லை.

கவிகள் எந்த ஒரு நூலை இயற்றும் போது முதலில் கடவுள் வாழ்த்து கூறுதல் கவி மரபு. மேலும் நூலின் கருப் பொருளை ஸூசகமாகக் கடவுள் வாழ்த்துப் பாடலில் காட்டு வது திறமை. அதன்படி, ஸ்ரீபாஷ்யத்தில் தத்வத்ரயம், அர்த்த பஞ்சகம், நாராயணனின் ஜகத்காரணத்வம், அகில ஹேய ப்ரயத்நீகத்வம், ஸகல கல்யாண குணாகரத்வம், மோக்ஷப்ரத த்வம், மோக்ஷஸாதனமான பக்தி இவைகளை அகிலபுவன ஜன்மஸ்தமே என்றும் மங்கள ஸ்லோகத்தில் ஸ்ரீராமானுஜர் ஸாதித்துள்ளார்.

(பூர்புவஸ்ஸுவராதி) ஏழு லோகங்கள் ஏழு மலை களாக அமைந்திருக்கின்றன. விண்ணவரும் மண்ணவரும் என்னேரமும்வணங்கும் வெற்பானபடியால் தேவர்களும் தும்புரு நாரதர் போன்ற காயகர்களும் மானிடர்களும் பண் இசைத்து பாடிக் கொண்டிருக்கிறபடியால் இசைக்கு ஆதாரமான ஸ,ரி,க,ம,ப,த,நி, என்ற ஸப்த ஸ்வரங்களும் ஏழுமலையாக அமைந்திருக்கின்றன எனலாம்.

**(6) பகவான் செய்யும் தொழில்**

பக்தர்களை (ஜீவன்களை) காப்பாற்ற பகவான் நான்கு வித உபாயங்களை செய்கிறார். நடப்பது, நிற்பது, இருப்பது, கிடப்பது (ஸயநித்திருப்பது). இது எப்படி இருக்கிறது என்றால், உலக நடைமுறையில் ஒருவன், கடன் கொடுத்த வனிடம் வசூல் செய்ய அடிக்கடி நடந்து, அவன் வீட்டில் நின்றும், விடாப்பிடியாக உட்கார்ந்தும் பணத்தை வசூல் செய்ய எடுக்கும் அநேக நடவடிக்கைகள் போல் உள்ளதன்றோ?

அவ்வகையாகவே, பகவானும் ஜீவன்களை தன்னிடம் அழைத்துக் கொள்ள விபவத்தில் ராமகிருஷ்ணாதிகளைப் போல் நடந்தும், இருந்தும் (உட்கார்ந்தும்) கிடந்தும் (சயநித்தும்) எழுந்தருளியுள்ளான். இந்த நான்கு நிலையும் வேங்கடேசனே என்கிறார் பொய்கையாழ்வார். இதோ இந்த ஸ்ரீஸூக்தி - (முதல் திருவந்தாதி 77)

*வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் * அஃகாத*
*பூங்கிடங்கின் நீள் கோவல் பொன்னகரும் * —நான் கிடத்தும்*
*நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே **
*என்றால் கெடுமாம்இடர்.*

ஜனகர் (ஞானச்ருதிகளைப்) போன்று பெரும் புகழ் வாய்ந்தவரும் ராஜரிஷியும், சேரநாட்டின் அரசரான குலசேகரப் பெருமான் வேங்கடேசனால் ஈர்க்கப்பட்டுப் பலவாறாகத் திருவேங்கடவனின் ஸம்பந்தத்தை விரும்பி சொல்லுவதை காண அற்புதமாக இருக்கிறது.

''வேங்கடத்துக் கோனேரி வாழும் குருகாய் பிறப்பேனே''
''திருவேங்கடச்சுனையில் மீனாய்ப் பிறக்கும் விதியுடையனாவேனே''
''வேங்கடக்கோன் தானுமிழும் பொன் வட்டில் பிடித்துடனே
புகப்பெறுவனாவேனே''
''செண்பகமாய்நிற்கும் திருவுடையனாவேனே''

என்று பலவாறாகப் பேசி அழகாகவும் அற்புதமாகவும் உள்ள அருணாதரத்தை அநவரதமும் அனுபவிக்கத் திருவுள்ளம் கொண்டு படியாய் கிடந்துன்பவளவாய் காண்பேனே என்று உருகுகிறார். கிடந்து என்று கூறி நம்மிடையே நெகிழ்வை உண்டாக்குகிறார்.

பகவானின் மிக அருகிலேயே, திருக்கண் எதிரிலேயே பகவானின் கடாக்ஷமும் பாகவத பாதஸ்பர்சமும் ஏற்பட வேண்டுமென்று திருவுள்ளம்.

வேங்கடேசனின் திருவடியின் மிக அருகிலிருக்கும் படிக்கும் குலசேகரன்படி என்று பெயர். இது இவ்வாழ்வார்க்கு ஓர் பெருமையை சேர்க்கிறது.

### (7) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் நோக்கில்

பித்து, மலடு, ஊனம், மூடம், பேய், குருடு, கூன், செவிடு, மெய்த்துயர் நோய் தீர்த்தருளும் வேங்கடமே - பத்தருக்கு வந்த துக்கம் காப்பான் மலர் உந்தியின் உலகம் தந்து அதுக்குஅரங்காப்பான் தலம்.

உலகத்தார் ஏசும் பைத்தியம், மலடு முதலிய நோய் களைத் தீர்த்து பக்தர்களுக்கு வரும் துக்கத்தைப் போக்கும் மாமலை வேங்கடமாகும். நாபீ கமலத்தில் நான் முகனைத் தோற்றுவித்து நான் மறைகளையும் உலகத் தையும் அளி த்த ஸ்ரீநிவாசன் உறையும் தலம் வேங்கடம் என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

மாண்டு பிறக் குந்துயர்போய் வைகுந்தம் புக்கவரு
மீண்டுதொழக் காதலிக்கும் வேங்கடமே – பாண்டுமக
னேறிரதப் பாகனா ரேத்துமடி யார்நாவி
லூரிரதப்பாகனா ரூர்.

(திருவேங்கடமாலை 10)

(பி.பெ. ஐயங்கார்). மண்ணவரும் விண்ணவரும் ஏத்திப் பாடுவது வியப்பல்ல. வேங்கடேசனைத் தொழுததினால் முக்தி பெற்று முக்தரும் கூட மீண்டும் தொழுவதற்கு ஆசை கொண்டு வரும் ஸ்தலம் வேங்கடமாமலை ஆகும். அர்ஜுனன் தேர்ப்பாகனாகிய கண்ணபிரானை புகழும் அடியார் நாவில் ஊரும் ரஸப் பாகாகும் திருவேங்கடம். அரங்கம், குடந்தை, குருகூர், குறுங்குடி, அட்டபுயகரம், கண்ணமங்கை, நறையூர், கடல் மல்லை, கச்சி, கண்ண புரம், கண்டியூர், தஞ்சை, மாலிருஞ்சோலை, புல்லாணி மெய்யம், தரங்கம், பரமபதம், வேங்கடேசர்க்கு தானங்களே (பி.பெ.ஐயங்கார்). மேலே சொன்ன எல்லாவிடத்திலும் வேங்கடேசனே அமர்ந்திருக்கிறார் என்று பிள்ளை பெருமாள் ஐயங்கார் கூறுகிறார்.

*தானே சரணமுமாய்த் தானே பலமுமாய்த்*
*தானே குறை முடிக்குந் தன்மையான் - தேனேய்*
*திருவேங் கடந்தொழுதேந் தீயவிபூ திக்குள்*
*மருவேங் கடந்தனெமிவ் வாழ்வு.*

*(நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி –96)*

சித்தோபாயம், ஸாத்யோபாயம் வேங்கடேசனே, குறைகளைத் தீர்ப்பவனும் அவனேயாம். திருமலையைத் தொழுவதேன், அதனால் மீண்டும் இவ்விருள் தருமாஞாலத்தில் பிறக்கமாட்டேன் என்று அருமையாக இவ்வந்தாதியில் கூறுகிறார் (பி.பெ.ஐயங்கார்)

### (8) கோவிந்த நாமத்தின் ஏற்றம்

ஸ்ரீ ஆண்டாள் பிராட்டியால் கோவிந்த நாமம் பிரபலமாயிற்றெனலாம். திருப்பாவை 28ஆவது பாசுரம் "கறவைகள் பின் சென்று குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா ..... சிறு பேர் அழைத்தனவும்" என்று அருளியுள்ளதில், முன்பு அறியாமல் உன்னுடைய பெரிய திருநாமங்களால் அழைத்து உனது பரத்வத்தில் அனுபவம் பெற்றோம். அது உனக்கு த்ருப்தி இல்லை என்பதை இப்போதுதான் உணர்ந்தோம். குறை ஒன்றும் இல்லாத கோவிந்தன் என்ற சௌலப்ய உறவு இருக்கும் போது முன்பு நாராயணன் மூர்த்தி, கேசவன் என்பதான திருநாமங்களால் பரமாத்மா ஜீவாத்மா என்கிற நிலையில் இடைவெளி இருந்தது. இப்பொழுது 'கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா உன்னைப் பாடிப் பறை கொண்டு யாம் பெறும் சம்மானம்' - உறவேல் நமக்கிங்கு ஒழிக்க முடியாது - அறியாத பிள்ளைகளாய் இருந்தமையால் சிறு பேரில் அழைத்து அபசாரப்பட்டுவிட்டோம். அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன் தன்னை, இறைவா, நீ தாராய் பறையேலோ என்று விண்ணப்பம் செய்கிறாள்.

கோவிந்தா=பசுக்களின் (தலைவன்) ரக்ஷகன். அது மட்டுமல்ல எல்லா ஜீவாத்மாக்களும் ரக்ஷகன். உண்ணும் போது கோவிந்தனை நினைக்க வேணுமாம். ஆண்டாள் கூறுகிறாள் நாங்கள் உண்ணும் போது மட்டுமல்ல நினைப்பதும் நேரிலும் கோவலனாய் கோவிந்தனை காணப் பெற்றோமே. நீ இறைவனாய் இருப்பதோடு மட்டும் அல்லாமல் இடைக்குலத்தில் தோன்றி நாங்களும் பசுக்களும்

உன்னுடன் உறவாடும்படியாக வெகு ஸுலபனாய் ஸுசீல னாய் குறைவொன்றுமில்லாத கோவிந்தனாய் உள்ளாய். பரமபதத்தில் வெறும் பரத்வம் மட்டுமே உண்டு, அது உனக்கு குறை என்பது அறிந்தோம். இப்போது, அந்த குறையும் நீக்கப்பட்டது. உன்னுடைய ஸ்வரூப ரூபங்களைப் பூரண மாக எங்களுக்கும் புலப்படச் செய்ததால், நாங்களும் பரஞானம் பெற்று உனது குறையில்லாமையை நன்குணர்ந்தோம், என்று கோவிந்த நாமத்தின் ஏற்றத்தை நன்குரைத்தாள்.

பகவானுக்கு ரொம்பக்குறையாம். க்ருஷ்ணாவதாரத்தில் த்ரௌபதியை கௌரவர்கள் அவமானப்படுத்தியபோது, அவளை ரக்ஷித்தது கோவிந்த நாமமே. அவனே நேரில் வந்து எந்த உதவியும் புரிய முடியவில்லையே என்பது அவனது வருத்தம்.

இப்பொழுதும் நாம் திருமலையில் கோவிந்தா, கோவிந்தா என்ற நாமங்களே எங்கும் முழங்குவதை காணலாம். எல்லோராலும் அன்பாக உச்சரிக்கப்படும் இந்த நாமத்திற்கு ஏற்றம் நாச்சியாரால்தான் ஏற்பட்டது என்றால் மிகையாகாது. அதைத் தவிர இன்னொரு காரணமும் சொல்லப்படுகிறது. ஸ்ரீநிவாசனின் கல்யாணத்தை அவரது தமையனாரான கோவிந்தராஜன் நடத்தி வைத்தாராம். அந்த க்ருதஞ்ஞதை யால்தான் அவர் தம் தமையனின் திருநாமம் உச்சரிப்பதை மனம் குளிர்ந்து கேட்கிறாராம்.

**(9) விரஜா நதி ஸ்வர்ணபுஷ்கரணையானது**

பகவான் வாஸுதேவன் தன் அநந்த கல்யாண குணங்களில் ஔதார்யம், தயை முதலிய குணங்களை ப்ரகாசப்படுத்துவதற்காக த்ரிபாதவிபூதியை விட்டு ப்ரக்ருதி மண்டலத்தில் அவதரிக்கத் திருவுள்ளம் கொண்டபோது வைகுண்டத்திலுள்ள (க்ரீடானசலம்) எம்பெருமான் எழுந்

தருளியிருப்பதற்குத் திருமலையாக அவதரித்தது. ஸ்ரீ வேங் கடேசனுடைய அஷ்டோத்தர சதநாமாவளியில் 'ஸ்வர்ண முகீஸ்நாந மநுஜாபீஷ்டதாயினே' என்று ஒரு திருநாமம் உள்ளது. ஸ்வர்ணமுகியில் ஸ்நாநம் பண்ணினவன் ஸ்வர் ணமாக, அதாவது நித்யஸூரியாக ஆகிவிடுவான். வேங்க டேசன் விரும்பிய வரத்தை அளிப்பான். ப்ரஹ்ம ரிஷியான ஸுகப்ரஹ்மம் ஸ்வர்ணமுகியின் கரையில் தவமியற்றினார். அந்த இடம்தான் திருச்சுகனூர் என்று பெயர் பெற்றது, இப்பொழுது அப்பெயர் திருச்சானூர் என்று மருவி இருக்க வேண்டும். தாயாரிடம் ப்ரபத்தி செய்துதான் பெருமாளை அடைய வேண்டும் என்ற கருத்தை வலியுருத்தும் வகையாக உள்ளது. இங்கு தாயாரின் திருநாமம் பத்மாவதி (அலர் மேல்மங்கை) என்பதாகத் திகழ்கிறது.

தாயாரின் நக்ஷத்திரம் கார்த்திகை சுக்லபக்ஷபஞ்சமி உத்திராடம். அந்த சமயத்தில் 10 நாட்கள் முன்பே உத் ஸவம் ஆரம்பித்து நடைபெறும். இந்த பஞ்சமியில் அவப்ருத ஸ்நாநம் நடைபெறுகிறது. இது மிகவும் விசேஷமான உத் ஸவம். பெருமாளின் சகல மரியாதைகளுடன் மாலை, திருத் துழாய், முதலியவை ஸமர்ப்பிக்கப்படும். இந்த சமயத்தில் அலர்மேல்மங்கை உறை மார்பன் என்ற ஆழ்வாரின் மங்களா சாஸனம் ஆகும்.

## XIII
## ஆழ்வார்கள் ஆதரித்த வேங்கடம்

தான் உகந்த ஊர் எல்லாம் தன் தாள்பாடி என்பதற்கு ஏற்ப, பயிர்களைப்பாதுகாப்பதற்காக ஆங்காங்கே அமைந்த குடிசைகளைப் போன்று, ஆன்ம கோடிகளாகிய பயிர் களைக் கட்டிக் காக்கும் அருட்குடில்களாக, திவ்ய தேசங்கள்

பூர்வாசார்யர்களால் மிகச் சிறப்பாகப் போற்றப் பெற்றாலும், அவைகளில் எல்லா தனிச்சிறப்பும் புகழும் பெற்றும் திகழும் ஒப்பற்ற பதியே திருமலையான திருவேங்கடம் என்பதை அனைவரும் அறிந்ததே. இதை, கவிச் சக்கரவர்த்தி கம்ப நாட்டாழ்வாரும் சொல்லியிருப்பதைக் காணலாம் - வட சொல்லுக்கும் தென் சொல்லுக்கும் வரம்பிற்றாய் நான் மறையும் மற்றை நூலும், இடை சொற்ற பொருட்கள் எல்லாம் எல்லையதாய், நல்லறத்துக்கு ஈனாய் உள்ள திருப்பதியே வேங்கடம் என்று அதன் உயர்வினை எடுத்துக் காட்டினார்.

பூதத்தாழ்வாரும்,'பூங்கொடிக்கள் வைகும் பொரு புனற்குன்று என்னும் வேங்கடமே யாம் விரும்பும் வெற்பு' என்றார். பேயாழ்வாரோ, 'வேங்கடமும் வெஃகாவும், வேளுக் கைப்பாடியுமே, தாம் கடவார் தண்துழாயார்' என்றும் வேங்கடத்து மன்னும் - குட நயந்த கூத்தனாய் நின்றான் குரைகழலைக் கூறுவதே நாத்தன்னால் உள்ள நலம் என்று பல படியாக திருமலையின் மேல் நிற்பவனையும் அவனின் பெருமையும் பலவாறாக கொண்டாடிப் போனார்கள்.

### (1) முக்திக்கு வித்தாகும் முதன்மை வெற்பு

திருமழிசை ஆழ்வார், தான் பல மலைகளையும் போற்றிப் பாடி வரும் முறையில் , வேங்கடத்தையும் பாடியதா கவும், அதனால், அது ஒன்றையே காரணமாகக் கொண்டு பரமபதத்தை பெறும் நிலையை தான் அடைந்து விட்ட தாகவும் பெருமிதமாய் கூறுவராய - வெற்பு என்று வேங்கடம் பாடினேன், வீடு ஆக்கி நிற்கின்றேன், நின்று நினைக் கின்றேன் என்று அருளிச்செய்தார். பொய்கையாழ்வாரும் (76 ஆவது பாசுரம்) - பழுது ஒன்றும் வாராத வண்ணம் விண் கொடுக்கும் மண்ணளந்த சீரான் திருவேங்கடம் என்ற பாசுர மும் இதை ஒட்டியதே.

### (2) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் கருத்து

பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் கருத்தில் - திருவேங்கடத்துத் தூயவன் கண் அன்பு உடையார்க்கு வைகுந்தம் தூரம் அன்றே என்றும் வேங்கடத்து அச்சுதனே முக்திக்கு வித்தகன் என்றே சுருதி முறையிடுமே என்றும் கூறிய பாசுரப் பகுதிகளுக்கு மேற்கண்ட கருத்துக்களை வலியுறுத்தும். வேங்கடத்தைப் பாடுவதாலேயே வீடு பேறு கிடைத்துவிடும் என்றால், வேங்கடத்தை நேரில் சென்று சேவித்தால், பரமபதம் உறுதி என்ற காரணத்தால், பிராட்டியைத் தேடி புறப்பட்ட வானரங்களுக்கு வழியை விளக்கிக் கூறும் ஸுக்ரீவன், வேங்கடமலையை வெளியில் இருந்தே வழிபட்டு, விலகிச் செல்லுங்கள் என்று அறிவுரை கூறுகின்றவனாய்,

*'கோடுறு மால் வரையதனைக் குறுகுதிரேல்,*
*உம் கொடுமை நீங்கி,*
*வீடு உறுதிர், ஆதலினால் விலக்குதிர்'*
என்று கூறியதும் இங்கே கருதத்தக்கது.
*திண்ணம் இது வீடு என்னத் திகழும் வெற்பு*

என்று ஸ்வாமி தேசிகன் அருளிச் செய்ததும் இக் கருத்தின் அடிப்படையில்தான்.

வினைகள் நீக்கும் வேத வெற்பு - திருவேங்கடத்தைத் தொழுவோரின் வினைக் கூட்டங்களாகிய நெருப்பை வேங்கடமே அணைக்கும் என்பாராய்.

## XIV

### பெருமானே உகக்கும் வெற்பு

நம்மாழ்வார், திருவேங்கடத்து எழில் கொள்சோதி என்று மிக நயமாகக் குறிப்பிடுகிறார். இதனால், வேறு இரண்டு சோதிகளை எடுத்துக்காட்டி, விளக்குகிறார் உரை ஆசிரியர் அவ்விரண்டில் ஒன்று 'வானோர் சோதி' அது பக லில் விளக்கு போல் ஒளி குன்றி இருக்குமாம்.

மற்றொன்று. 'நீலாழிச் சோதி' அதாவது பாற்கடலில் பரம னின் கிடக்கைக் கோலக் காட்சி. அது, கடலுக்குள்ளே ஒளி மறைக்கப்பட்டுக் கிடக்கும். ஆகாய வேங்கடத்து எழில் கொள் சோதியாகிய எம்பெருமான், வேங்கடம் மேவிய விளக்காய் இருப்பதால்,குன்றின் உச்சியில் இட்ட விளக்கு போல், ஒளி மிகுந்து காணப்படுவார் என்கிறார் உரையாசிரியர் திருவேங்கடத்து எம்பெருமானை.

'வேடு ஆர் திருவேங்கடம் மேய விளக்கு' என்று கலியனும், வித்தகன் வேங்கடவாணன் என்னும் சூடிக் கொடுத்த சுடர்க்கொடியும் அருளியுள்ள பாசுரப் பகுதிகளை இங்கே நாம் நினைத்துப் பார்க்கத் தக்கவை. ஞான முதலாழ்வார்கள் வெண்பாவை ஆதரித்தான் வெற்பு திரு வேங்கடமே என்பர் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார். எம்பெரு மான் உகந்து எழுந்தருளியுள்ள இடங்களாக, திருவரங்கத்த முதனார் இராமானுச நூற்றந்தாதியில் (106) குறிப்பிடும் போது -

*''இருப்பிடம் வைகுந்தம், வேங்கடம் .*
*மாலிருஞ்சோலை என்னும்*
*பொருப்பிடம் என்பர் நல்லோர் ''*

என்று கூறி அம்மூன்றின் நடுநாயகமாகத் திருவேங் கடத்தைக் குறித்துள்ளார். அவ்விடத்தில், இரட்டை பிள்ளை களை பெற்ற தாயானவள் இரு குழந்தைகளுக்கும் முலைப் பால் கொடுக்க நடுவே கிடக்குமாப்போலே, நித்யசூரி களுக்கும், நித்ய ஸம்ஸாரிகளுக்கும் ஒக்க முகம் கொடுப் பதற்காக அவன் நின்று அருளிய திருமலையும் என்று உரையாசிரியர் விளக்கம் தருவது மிக நயமானது. மேலும், இராமானுசருக்கு இன்பம் தரும் மூன்று இடங்களைத் திருவரங்கத்தமுதனார் குறிப்பிடும்போது - ''நின்ற வண் கீர்த்தியும், நீள் புனலும், நிறை வேங்கடப்பொற் குன்றமும், வைகுந்த நாடும், குலவிய பாற்கடலும்'' என்று கூறி அவை நுமக்கு எத்தனை இன்பம் தரும்? என்று எம்பெருமானாரை நோக்கிக் கேட்பது இங்கே ஒப்பு நோக்கத் தக்கது. இத்துடன்,

*"வெற்பு என்று இருஞ்சோலை*
*வேங்கடம் என்று இவ்விரண்டும்*
*நிற்பு என்று நீ மதிக்கும் நீர்மை போல் என்ற"*

பூதத்தாழ்வாரின் அருளிச் செயலும், வேங்கடம், எம் பெருமானின் உகப்புக்குப் பாத்திரமாக விளங்கும் நிலையை எடுத்துக் காட்டும்.

எம்பெருமானிடம் ஏதேனும் ஒன்றைப் பெற வேண்டி முயன்றவர்களுக்கு எல்லாம் (ப்ரயோஜநாந்தரபரர்) அவதார காலங்களில் எம்பெருமான் உதவியுள்ளான். அது போலவே ஏழை, ஏதலன், கீழ்மகன் என்னாது இரங்கி என்றபடியும் (வாத) மாமகன், மற்கடம், விலங்கு .... மற்றோர் சாதி என்று ஒழிந்தில்லை என்றபடி தாழ்ந்தோருக்கு அருளிய சீலத்தையும்அவதாரங்களில் காண முடியும். ஆனால் அவ்வவதாரகாலங்களிலும் தோன்றும் பேறு பெறாத பிற்பாடர்கள், அவதாரக்காலப் பயன்களைத் தவறாமல் பெற வேண்டும் என்ற கருத்தோடு தான் திருமலையில் அர்ச்சையில் எம்பெருமான் எழுந்தருளியுள்ளான் என்பது முன்னோர் கருத்து.

## XV

### எம்பெருமானுக்கு திருமலையே அடையத்தக்க இடம்

**(1) விபவ அவதாரங்களின் அநுபவம்**

வேங்கடம் ......... அடைந்த மாலை, பாதமே அடைந்து நாளும் உய்ம்மினோ, என்ற திருச்சந்தவிருத்தப் பாசுரப் பகுதியின் உரை விளக்கத்தில் நாம் காண்கிறோம். மேலும் நம்மைப் போன்றவர்கட்கு, திருவேங்கடமுடையானின் திருவடிகளே அடையத் தக்கவையாக இருப்பது போல், எம்பெருமானுக்கும், திருமலையே அடையத்தக்க இடமாக உள்ளது என்று கூறும் உரைப்பகுதி மிகவும் இனிமையானது. மேலும் காடுகள் நிறைந்த திருவேங்கடத் தில் எம்பெருமான் நாளும் எழுந்தருளியுள்ள இருப்பை வர்ணிக்கும் போது, இராமாவதாரத்தில் தண்டகாரண்யத்தில், தவ முனிவர்களுடன் இருந்து வனவாசச் சுவையை எப்படி

இராமனாக அனுபவித்தானோ, அது போன்ற இருப் பையே, இனிய அநுபவத்தையே திருமலையில் எம்பெருமான் பெற்று ள்ளான் என்பதை நயமாக நாச்சியார் சொல்லில் பார்க்கலாம் · காட்டில் வேங்கடம் என்ற பகுதிக் கான உரை விளக்கத் தில் உள்ளது. மற்றும் கிருஷ்ணாவதாரகாலத்திய ப்ருந்தாவன இருப்பும், எம்பெருமானின் திருமலை இருப்புக்கு ஒப் பாகக் கூறப் பெற்றுள்ளது.

### (2) ஆண்டாளின் மங்களாசாஸனம்

மேலும், நாச்சியார் திருமொழியில் கோதைப்பிராட்டி, குயிலை நோக்கி, என் வேங்கடவன் வரக் கூவாய் என்று வேண்டும் பகுதியில், வேங்கடத்திற்கு எம்பெருமான் வந்திருக்கும் நிலை, உவமைகளோடு மிக அழகாகக் கூறப் பட்டுள்ளது.

பரமபதத்தை விட்டுத் திருமலையிலே வந்து நிற்கிற நிலை, தன்னுடைய ஸ்வயம்வரத்துக்காக என்று இருக் கிறாள் என்பது உரையாசிரியர் கருத்து.

### (3) பரகால நாயகியின் (கலியனின்) அழைப்பு அரங்கனைப்பாட வந்தவள் வேங்கடவனை அழைத்தல்

பெரிய திருமொழியில், கலியனின் திருவரங்கப் பாசுரங்களில் தானான தன்மை நீங்கி, வேற்று வாயால் பேசும் முறையில் (அந்யாபதேசத்தில்) தாய் கூறுவது போன்று அமைந்த பாசுரங்களில், 'வெருவாதாள் வாய் வெருவி, வேங்கடமே, வேங்கடமே என்கின்றாளாள்' என்ற அற்புத மான பாசுரப் பகுதி அமைந்துள்ளது. அரங்கனைப்பாட வந்தவள் பரகால நாயகி. ஆம் ஆழ்வார் பெண்மை ஏறிப் பாடிய நிலையில் அவருக்குப் பெயர். அப்படி வந்தவள், வேங்கடத்தை அழைப்பானேன்? என்று நாமும் நினைக் கிறோம். பரமபதத்தில் இருந்து திருவரங்கம் நோக்கிப் புறப்பட்ட எம்பெருமான் இடையில், திருமலையில் இளைப் பாறினார் என்கிறார் உரையாசிரியர். இதற்கு ப்ரமாணமாக

மூன்றாம் திருவந்தாதியில் 'வடமுக வேங்கடத்து, மன்னும், குடம் நயந்த கூத்தனாய் நின்றான்' என்ற பாசுரப் பகுதிக்கு, உரையாசிரியர், குடக்கூத்தாடின இளைப்பு ஆறத் திருமலையிலே வந்து நின்றான் போல் என்றடைந்த உரை விளக்கத்தைக் கொள்ளலாம். ஆகவே, எம்பெருமானின் திருவரங்கப் பயணத்தில், இடையே தங்கி, இளைப்பாறிய இடம் திருவேங்கடமே என்று விளங்கியது என்கிறார் உரையாசிரியர்.

அத்துடன் ஒருவனைக் கவி பாடும்போது, அவனது குலவரவைச் சுட்டிப் பாடுவது போன்று, க்ருஷ்ணாவதாரத்தில், பரமபதத்தினின்றும் ஸ்ரீமதுரையிலே தங்கித் திருவாய்பாடிக்கு வந்தார் போலே, ஸ்ரீவைகுண்டத்தினின்றும் திருமலையிலே தங்கி திருவரங்கம் வந்ததாகப் பட்டர் அருளிச்செய்த விளக்கத்தை, உரையாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

## (4) திருப்பாணாழ்வாரின் திருவேங்கட அனுபவம்

திருப்பாணாழ்வாரின் திருமலையனுபவமும் இவ்வகையேதான். அமலனாதிபிரான் பதிகத்தில் அரங்கனைப் பாட ஆரம்பித்த ஆழ்வார்க்கு ஏற்பட்டது - அமலனாதிபிரான், அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன், விண்ணவர் கோன் என்று பாட ஆரம்பித்தவர் 'விரையார் பொழில் வேங்கடவன்' என்றருளியிருப்பதைக் காணலாம். மேலும் அமலனாதிபிரான் மூன்றாவது பாசுரத்திலும் 'மந்திபாய் வடவேங்கடமாமலை, வானவர்கள், சந்தி செய்ய நின்றான், அரங்கத்து அரவின் அணையான்' என்ற பாசுரமும் இங்கே ஒப்பு நோக்கத் தக்கது. இப்பாசுரப்பகுதி, திருவேங்கடமலையிலிருந்து, திருவரங்கத்திற்கு எம்பெருமான் வந்த வழிவகையை சுட்டிக் கூறுவதாக விளக்குகிறார் உரையாசிரியர். இப்பாசுர விளக்கத்தில், ஆழ்வாரின் செயலுக்கு, வேங்கடத்து மந்திகளின் செயலை ஒப்புமைப்படுத்தி எண்ணிப்பார்க்கிறார் உரையாசிரியர்.

அரங்கனின் இடையில் உடுத்துள்ள அந்தி போல் நிறத்து ஆடையில் தன் உள்ளத்தைப் பறி கொடுத்த ஆழ்வாரின் சிந்தனை; அடுத்த கணம் அங்கு நில்லாமல், எம்பெருமானின் திருஉந்திக் கமலத்தின் அழகில் ஈடுபட்டு விடுகிறது. இச் செயலுக்கு, முதலில் ஒரு கனியைச் சுவைத்து உண்டு கொண்டிருக்கும் திருவேங்கடமலை மந்திகள், வேறொரு கனியைக் கண்டால், உடனே, இது வரை சுவைத்தகனியை விடுத்து, தாம் புதியதாகக் கண்ட கனிக்குத்தாவுவதை உவமையாக விளக்குகிறார் உரையாசிரியர்.

### (5) திருமலையை பாடிய அருள் நெறி ஆழ்வார்கள்

*பரன் சென்று சேர் திருவேங்கட மாமலை*
*ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே*

(திருவாய்மொழி 3-3-8)

என்றபடி, பத்து ஆழ்வார்களும் திருவேங்கடத்தைப் பாடியுள்ளார்கள். செந்தமிழ் மாறனும், சீர் சொல் க்லியனும், முதலாழ்வார் மூவரும், கொல்லி காவலன் குலசேகரரும், பல்லாண்டு பாடிய பெரியாழ்வாரும், அவரது திருமகள் கோதை பிராட்டியும், திருமழிசையும், திருப்பாணாழ்வாரும் ஆகிய பதின்மர் பாடிய பெருமாளே திருவேங்கடத்து எம் பெருமான் ஆவார். மூன்றாம் திருவந்தாதியில் பேயாழ்வார், வேற்றுவாய் கொண்டு (அந்யாபதேசமாக) தாய்ப் பாசுரமாக அருளும் போது, தன் மகளின் நிலையை, வெற்பு என்று வேங்கடம் பாடும் என்கிறார். இதனையும் அதற்கு விளக்கமாய் அமைந்த திருமலையை ஒழிய வேறு ஒரு மலையும் அறியாள் என்ற வ்யாக்யான பகுதியையும் நாம் நோக்கினால், திருமலையைப் பாடுவதில் ஆழ்வார்கள் கொண்டுள்ள ஊற்றம் நன்கு விளங்கும். அரங்கனைத் தவிர வேறு எத்தலத்து எம்பெருமான்களையும், முதற்கண் பாட மறுத்த பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் ,பின்பு, வேலை நடுவில் துயிலும் வித்தகனை, வேங்கடத்து மாலை அன்றிப்பாடாது என் வாய்

என்று வேங்கடவனிடம் ஆர்வமாக ஈடுபட்டதற்கும் இத்தகை ய மனநிலையே காரணம் என்பது விளங்குகின்றது. மேலும் ஆழ்வார்கள் திருவேங்கடமுடையானிடம் கொண்டுள்ள ஈடுபாட்டை நன்கு விளக்குபவராய் ஆழ்வார்கள் செந்தமிழை ஆதரித்த வேங்கடவன் என்று அருளினார் பிள்ளைப்பெரு மாள் ஐயங்கார்.

## (6) பெரியாழ்வார் அனுபவம்

திருமலை எம்பெருமானுக்குத் திருவேங்கடத்தான், திருவேங்கடவன் என்பவை போன்ற திருநாமங்கள் சாதார ணமாகப் பழக்கத்தில் உள்ளவை. ஆனால் மிக விசேஷ மான திருநாமம் திருவேங்கடமுடையான் என்பதாம். இப் பெயரிட்டழைத்தவர் பெரியாழ்வார். சென்னியோங்கு தண் திருவேங்கடமுடையாய் என்று எத்தனை அர்த்தத்துடன், அவரை ஆதரத்துடன் அழைக்கிறார். பெருமாள் வெறுமனே அங்கு உறைகிறான் என்று எண்ணிவிடாதீர்கள் பெருமாளுக்கு அந்த திருவேங்கடம் மூன்றாவது விபூதி, நித்ய விபூதியில் விண்ணோர் தொழுவார், லீலா விபூதியில் மண்ணோர் தொழுவார். இந்த மூன்றாம் விபூதியான திருவேங்கடத்தில் மண்ணோர் விண்ணோர் இரு சாராருமே சேர்ந்து தொழு வார். நிதியுடையான், ஸ்ரீ கௌஸ்துபமுடையான், என்பது போல, திருவேங்கடத்தை ஒரு பெரிய உடைமையாகக் கொண்டிருக்கிறானாம் ஆகவேதான் - திருவேங்கடமுடையான்.

குளிர் அருவி வேங்கடம் தண் திருவேங்கடமுடையாய் என்றெல்லாம் குளிர்ச்சியான ஸுகமாய் உள்ள இடம். வெப் பத்தை பற்றி அறவே கவலை வேண்டாம். பரம பதத்தில் ரக்ஷ்யவர்க்கம் கிடையாததானால் அங்கு தேட்டமில்லை. இந்த தண் திருவேங்கடமலையில் ரக்ஷ்யவர்க்கத்திற்கு குறைவே இல்லை. நல்ல அடர்ந்த காடு, வானரம், வேடர், திர்யக் ஜாதி - இவற்றினிடத்தில் அவன் கருணை பெருகி நிற்குமாம். ஆகவேதான், அவன் இந்த ஸ்தானத்தை ஒரு தனி விபூதியாக, ஐஸ்வர்யமாகக் கருதுவான். அதனால் திரு வேங்கடமுடையான்.5-3-இல் துக்கச்சுழலையில் பெரியாழ்வார்

நம்மாழ்வாரின் முனியே நான்முகனே என்கிற நிறைவுப் பாகத்தில் அருளியிருப்பதைக் காணலாம். 'இனிப் போக லொட்டேன்' என்பது 'இனி போகவிடுவதுண்டே' (பெரியாழ்வார்) என்பதை ஒத்துள்ளது.

"சென்னியோங்கு" தசகமோ, நம்மாழ்வாரின் 10-10-10ல் "சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்த" பாசுர பாவம் ஒலிக்கிறதை காணலாம். "பறவையேறு பரம்புருடா" என்றடுத்த பாசுரத்தில் கூட திருவேங்கடமுடையான் கருடவாஹனனாய் ஆழ்வாரை அழைத்துப் போவதை அனுஸந்திப்பதே, பிறகு "வடதடமும் வைகுந்தமும் மதிள் துவராபதியும் இடவகைகள் இகழ்ந்திட்டு என்பால் இடவகை கொண்டனையே" என்று அருளியிருப்பதை காணலாம்.

ஆலிலை, திருப்பாற்கடல், பரமபதம், த்வாரகை போன்ற ஸ்தாநங்களையெல்லாம் அலக்ஷ்யமாகத் துறந்து, அவற்றில் காட்டும் ஆதரத்தையெல்லாம் என்னிடமே காட்டுவது உனது ஸங்கல்பமோ? என்று ஆச்சரியத்தில் ப்ரமித்து போகிறார்.

## XVI

### (1) திருமலைக்குப் போவதே புருஷார்த்தம்

'கீழ்வானம்' என்ற திருப்பாவையில், ஸ்ரீ ஆண்டாள் 'போவான் போகின்றாரை போகாமல் காத்து' என்று சொல்லுமிடத்தில் உரை மிகச்சுவையானது. பொருள் பொதிந்ததும் கூட. அதாவது, போகையே ப்ரயோஜனமாகப் போகிறார்கள். போவான் போவதற்காகவே. அது ஏன் என்றால் - அது உலக இயலை ஒட்டியுள்ள வழக்கம். உதாரணமாக - இப்போது ஒருவர் பெருமாள் ஸேவிக்கப் போகிறேன் என்றாலோ, பெருமாளுக்கு திருமஞ்சனம் செய்விக்கிறேன் என்றவுடன் ஏதாவது ப்ரார்த்தனையோ? என்ன பலனை உத்தேசித்து? என்றெல்லாம் கேட்டார்கள். உலகம் ஒன்றை மறந்து விட்டது. அக்ரூரர் கண்ணனை அழைத்து வர மதுரைக்குப் போனாராம்

கம்ஸன் ஆக்ஞை அது. அக்ரூரர்க்கு இது ஒரு நல்ல வ்யாஜ மாக இருந்தது. இந்த காரணத்தைக் கொண்டாவது கண்ணனை சந்திக்கலாமே என்பதுதான். அதுபோலே ஆத்மா உடலைவிட்டுக் கிளம்பி அர்ச்சிராதி மார்க்கத்தில் பரமபதம் போகும் போது ஏன் போகிறாய் என்று கேட்கக் கூடுமா? அவ்வாறே, திருமலை யாத்ரை போகிறவர்கள், அங்கு போவதை ப்ரயோஜனமாகக் கொள்கிறார்கள் அன்றோ? வேறு எந்த புருஷார்த்தமும் வேண்டுவதில்லையே? மலைக்கு போவதே (திருமலைக்கு) புருஷார்த்தம்.

**(2) வேங்கடவற்கென்னை விதிக்கிற்றியே – ஸ்ரீ ஆண்டாள்**

நாச்சியார் திருமொழி முதல் தசகத்தில் கோதைப் பிராட்டி காமதேவனை வேண்டுவதே, 'என்னைத் திருவேங் கடவனுக்கென்று வகுத்து' அவனுடன் சேர்த்து வைத்திடு வாய் என்கிறாள். வேங்கடவன் கண்ணன் என்பது மட்டு மன்று ஆண்டாளுக்கு அவனிடம் பிடித்த சாதனை "புள்ளின் வாய் கீண்டதாம்" அதாவது பகாசுரனை பாலகிருஷ்ண னாகவே அநாயாஸமாக கொன்ற நிகழ்ச்சி இவ்விடத்தில் குறிப்பிட்டது போலே எவ்வளவு இடங்களில் பாராட்டு கிறாள். அவளுக்காகவே திருமலையப்பன், ப்ரஹ்மோத்ச வத்தில் மூன்றாம் திருநாள் முத்துப்பந்தலில், பகனை (கொக்கை) வாய் பிளக்கும் திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறான். இது ஓர் அபூர்வ அலங்காரமன்றோ?

**(3) என் வேங்கடவன் வரக் கூவாய்**

நாச்சியார் திருமொழி 5ம்தசகத்தில் 'குயிற்பத்து' என்று புகழ் பெற்ற இரண்டாம் பாசுரத்தில் சீதையைக்கைப் பிடிக்க மிதிலைக்கு வந்த இராகவன், புறச்சோலையில் தங்கினார் போலே, அங்கே வேங்கடத்தில் நிற்கிறான். குயிலே அவனை இங்கே வரும்படி கூவிச் சொல்வாய். உன் கூவு தல் இந்த நற்காரியத்திற்கு பயன்படட்டும். அதை விட்டு வீணாக

மிழற்றி என்னை வதை செய்யாதே என்று கெஞ்சுகிறாள். அவளின் வேண்டுகோளுக்குச் செவி சாய்த்தாற் போல் அவனும் ஸ்ரீவில்லிப்புத்தூருக்கு அருகில் உள்ள திருவண்ணா மலை என்ற குன்றில் வந்து நின்றிருந்து சேவை இன்றளவும் தந்து வருகிறான் அன்றோ!

### (4) மேக சந்தேஶம்

காளிதாசன் விடுத்த மேகசந்தேஶம் ஆண்டாளைப் பின் பற்றியே இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. "விண்ணீல மேலாப்பு" என்ற தசகம் முழுவதுமே திருவேங் கடவனுக்கானது. இதில் பிராட்டி மேகங்களைத் தூது விடு கிறாள். ராமன் ஹனுமனைப் பிராட்டியிடம் தூது அனுப்பி யது போல், ஆண்டாளும் மேகங்களைத் தெண்ணீர்பாய் வேங்கடத்து திருமாலுக்குத்தூது விட்டது. அவளது கற்பனை யை பாருங்கள்; மேகங்கள் திருமலையிலிருந்து ஸ்ரீவில்லி புத்தூர் வந்தவை போலும் அவை மறுபடியும் வடக்கு நோக் கிச் செல்வதால், பொறுத்தமான தூதராக எண்ணி வேங்கட வனுக்கு பெண்ணீர்மை ஈடழிக்கும் இது தமக்கோர் பெருமை யை தரும் விஷயமா என்று சொல்லி அனுப்புகிறாள். அந்த மேகங்கள் அசேதனமானது என்பதெல்லாம் ப்ரேம தசை யில் அவள் எண்ணிப்பார்க்கவில்லை போலும்.

### (5) பகவத் ப்ராவண்யம் தான் வாழ்க்கை

*மதயானை போலெழுந்த மாமுகில்காள் !* வேங்கடத்தைப்*
*பதியாக வாழ்வீர்காள் ! பாம்பணையான் வார்த்தை என்னே !**
*கதியென்றும் தானவன் கருதாது * ஓர் பெண் கொடியை*
*வதை செய்தானென்னும் சொல் வையகத்தார் மதியாரே.*

*நாச்சியார் திருமொழி – 89*

கரிய மதம் பிடித்த பெரிய யானைகள் போல் தோற்ற மளிக்கிறீர்கள் திருவேங்கடத்தான் உங்களை ஆனந்திப் பிக்க, நீவீரும், அவனும் ''அஹமந்நம் ! அஹமந்நம்' என்று ஆனந்தத்தில் திளைப்பீர்கள். அந்த மதம் உமக்கு ந்யாயம்

தான். திருவேங்கடத்தையே நித்யவாசஸ்தானமாகக் கொண்டு அதனால் வாழ்வு பெற்றவர்கள் நீங்கள், வெறு மனே அங்கே வசித்தால் மட்டும் போதுமா என்ன? அது வாழ் வாகாதே நீங்கள் வாழ்ச்சியனுபவிக்கிறீர்கள், பகவத் ப்ரா வண்யம் தான் வாழ்ச்சி. இங்கு நான் வீழ்ச்சியில் தவிக் கிறேன், பின் பகவத் விஶ்லேஷம் வீழ்ச்சிதானே?

நீங்கள் நித்யமாக அங்கு வாழ்வது ரஸமானதே, அத்தனையே "நீங்கள் வெறும் வந்தேறிகளோ உத்ஸவம் சேவிக்க, ஓர் தோமாலை சேவிக்க, ஓர் திருக்கல்யாண உத் ஸவம் சேவிக்க, என்று வந்த பிறகு காரியம் முடிந்த உடன் இறங்கிப் போவாரே", அது போலவே நீங்கள்?. நித்யமாய் முக்தர் போல் அங்கே இருப்பவர்கள் அல்லவோ? . உமக்குப் பாம்பணையான் திருவுள்ளம் தெரிந்திருக்குமே என் விஷ யத்தில் அவன் பொய்யனாகி விட்டான். பாரீர் அவன் என்ன தான் நினைத்திருக்கிறான் என் திறத்தே? அவனின் தேர் தட்டு வார்த்தையான "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாசுச:" என்ற வார்த்தையை அல்லவோ நான் நம்பி வாழ்கிறேன். அவன்தான் ஆச்ரிதர்க்கு என்றைக்கும் ஒரே கதி. 'தேவாநாம் தாநவாநாம் ச ஸாமாந்யம்' அத்தைவதம் என்கிறபடி எல் லோருக்குமே அவன் ஒருவனே தான் கதியாகுவான். நாம் வேணுமானால் அவனிடம் ஒதுங்கலாம், விலகியும் இருக் கலாம், அவன் அப்படி இரண்டு விதமான நடவடிக்கைகளைக் கைக்கொள்ள மாட்டாது அன்றோ.

அவன்தான் தன் திருவடிகளைப் பற்றும் மனிதர் யாரே னும் உண்டா, எங்கேனும் இருக்கிறார்களா? என்று தேடி உதவ முற்படுபவனாயிற்றே. புருஷஸூக்தத்தில் ஆண்டாளின் கருத்தைக் கொண்ட ஶ்ரீஸூக்தியை காண்கில்

*"ஸஹஸ்ரசீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்*
*ஸ பூமிம் விஸ்வதோ வ்ருத்வா ..... அத்யதிஷ்டத்தஸாங்குலம்"*

பூமியை எல்லா புரத்திலும் வ்யாபித்து பின்னும் பத்து அங்குலம் அதிகமாகவும் வ்யாபித்து நின்றான். ரக்ஷ்யத் தினளவன்று ரக்ஷகனின் பாரிப்பு. இப்படி என்னை உபேக்ஷிப் பதால் ஏற்படும் விளைவுகளை அவன் எண்ணிப் பார்க்க வில்லையா? அவன் ரக்ஷத்வ ஸ்வரூபத்திற்கன்றோ களங்கம் வரும். ஒரு (பெண்) கொடி அதன் கொழு கொம்பிலே சேர்ந்து படர்ந்தாலன்றி தரையில் பட்டு விழும். அது போல எனக்கு இந்தப் பிரிவு வதமாகிப் போகும். அப்புறம் இந்த உலகத்தினர் அவனை ரக்ஷகனாக மதிக்க மாட்டார்களே!

ஆனால், அவன் சமாதானம் சொல்லக்கூடும். இன்றி யமையாமை என்ற தத்வத்தின்படி, தான் ஊனமாயிருப் பதால் தன்னிடம் உயிரை வைத்திருக்கும் 'நானும் கூட ஊன மாயிருப்பேன் எனக்கும் உயிர் தரித்திருக்கும் என்று'. ஆனால் எனக்கு சத்தை போயாயிற்று. நான் போனாலும் எனக்கு கவலையில்லை. அவனுக்கு ஓர் அவப்பெயர், ஆபரித ரக்ஷணம் செய்யத் தவறினான் என்பதாக வந்தபின் பொறுத்திருக்கக் கூடிய குடியோ எங்கள் வம்சம்? இல்லையே

**(6) 'எம்பெருமான் பொன் மலை மேல் ஏதேனும் ஆவேனே' குலசேகரப் பெருமாள்**

''ஊனேறு செல்வத்துயிர் பிறவி யான் வேண்டேன்'' என்ற 4 ஆம் தசகம் பெருமாள் திருமொழியுள் உள்ள இந்தப் பத்து பாசுரங்களிலும், ஆழ்வார் திருமலையில் ஏதாவது ஒரு வடிவில் வாழவேண்டும் என்று இறைஞ்சி வேண்டுகிறார்.

ஜனக மஹரிஷிபோல் குலசேகரப் பெருமாளும் ராஜரிஷி யாக வாழ்ந்தார். அவர் கூறுகிறார் - இப்படி அரச போகங் களில் முழுகி இந்த போக வாழ்வை பல ஆண்டுகள் அனுப வித்து பின்னர் பெருமாளின் நிர்ஹேதுககடாக்ஷத்தினாலே (நான்முகன் திருவந்தாதி 80 ல் உள்ளபடி) 'ஆட்பார்த்துழி தருவாய் கண்டுகொள்!' என்றுள்ளபடி ஆள் வேண்டு மென்று தேடி நம்மையும் கடைத்தேற்றிவிடுவான் என்று காத்திருக்க

வேணுமா ஐயோ இதை பொறுக்க முடியாதே. உன்னடிக் கீழ் ஓர் வாழ்ச்சி தா. இன்னொரு ஜன்மம் என்று தள்ளிப் போடாதே. இந்த அரச போகம் எனக்கு வேண்டாம். சட்டெ ன்று ஓர் பிறவி, திருமலை மேல் இருக்க அருள வேண்டும், என்று கெஞ்சுகிறார். இப்படிக் கெஞ்சுபவர் சேர, சோழ, பாண்டிய நாடுகள் மூன்றையும் ஒரு குடைக்கீழ் ஆண்ட ஸித்தைபௌவர் யரான சக்ரவர்த்தி. அவர் இவ்வாறு வேண்டி நிற்பது வெறுப் பினால், வைராக்யத்தால், நிர்வேதத் தால் என்று கருதலா காது. ஸ்வரூபம், பகவத் சேஷத்வம், பாரதந்த்ரியம், தாஸ த்வம் இவை யெல்லாம் தான் இவர் அவ்வாறு வேண்டு வதற்கு காரணம். இவற்றிற்கொப்ப அவர் சொல்வதை ஆராய்வோம்.

பகவானுக்கு அடிமை செய்து, சேஷ பூதமாக வாழ வேண்டும், அது தான் உண்மையில் வாழ்ந்த கணக்கு. இந்த அரசனாக இருக்கும்போது ராஜ்ய பாரம், நிர்வாகம், அதிகாரம் இவற்றால் அஹங்காரம் வருவது சகஜம். ப்ரக்ருதி- புருஷன் என்ற பகுத்தறிவு, கல் - மனித்ன் என்ற வித்தியாசம் தெரிந்து கொள்ள அறிவில்லாத குருகுப் பறவையாக பிறக்க வேணும். கோனேரியில் வாழ்வது மிகவும் உத்தமம்! என்ன சாத்விகமான விசாரம்! சரி, குரு காய் பிறந்தால், அதன் ஸ்வபாவப்படி அது இங்கும் அங்கும் பறந்து திருவேங்கடத்தை விட்டு அகல ஹேது உள்ளது. ஆகவே, திருமலைச் சுனையில் மீனாய் பிறக்கலாம் பாதகம் இல்லை. ஸ்வதந்த்ர உணர்ச்சியில்லாமல் இருக்க வேணும். அவ்வளவுதான் வேண்டியது. கைங்கர்யம் செய்யக் கிடைத்தால் அஹோ பாக்யம், பெருமாள் உமிழ்கின்ற வாய் நீரை ஏந்த உபயோகப் படுத்தும் பொன் வட்டிலை எடுத்துக் கொண்டு கைங்கர்ய பரனாக உள்ளே நுழைந்து விடலாமே. சரி, அப்படியே இல்லாவிட்டால் அத்தலத்தில் ஓர் செண்பக மரமாயேனும் இருக்கப்பெற்றால் போதும். ஓர் கால் அம்மரம் அழிந்து போய்விட்டால் பரவாயில்லை அங்குள்ள மலைச் சிகரமாக இருக்கும் பாக்யம் பெற்றால் அதுவும் நல்லதே.

அதைவிட கானாறாகவாவது இருக்க வேணும். சாலையாய் இருந்தால் பாகவத தூளி பெறப்போவோம். அதை விட நல்ல ஸ்திதி ஏற்படவேணுமானால், பெருமாள் ஸந்நிதிக்கு முன்புள்ள படியாக (குலசேகரப்படி என்று இப்பொழுதும் உள்ளது) இருந்தால் அவனையும் சேவித்துக் கொள்ளலாம். என் மேல் ஏறிச் செல்லும் பாகவதர்களுக்கு உபயோகமாக இருக் கலாம் என்றெல்லாம் ப்ரலாபித்து கடைசியாக திருவேங்கடத்தில் ஏதேனும் ஆவேனே என்று அவர் கூறும் பாவத்தில் எவ்வளவு தன்னை முழுவதும் அழித்துக் கொண்டு பகவானுக்குப் பிரயோஜனமாய் இருந்து வாழ வேண்டும் என்ற அவரின் பாரிப்பு நம்மை மெய் சிலிர்க்க வைக்கின்றதன்றோ?

*செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே*
*நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசல்*
*அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்*
*படியாய் கிடந்து உன் பவளவாய் காண்பேனே.*

(பெருமாள் திருமொழி 4-9)

### (7) திருமழிசைப் பிரானின் ஈடுபாடு

திருச்சந்தவிருத்தத்தில் நான்கு பாசுரங்களில் பாடப் பெறுகின்ற திருவேங்கடம், இரண்டு பாசுரங்களில் (48, 65) குன்று, வெற்பு என்ற குறிப்புகளால் மட்டுமே (திருமலை) காட்டப்படுவது ஒரு விசேஷம். செழுங்கொழும் (பாசுரம் 60) என்பதில் - இது திருக்குடந்தை மங்களாசாஸனப் பாசுரங்களிடையே வருவது - நின்ற கோல அழகை சேவிக்க ஆசைப்படுபவர்களுக்காகத் திருவேங்கடத்தில் நிலையார நின்றருளினவன், கிடந்த அழகு காணப்பாரிப்பவருக்காக இங்கே திருக்குடந்தையுள் கிடந்தருளுகிறாயோ? என்று இயற்கையழகு நயம் மிளிர பாடுகிறார்.

பரோபதேசமான பாசுரங்களை தலைக்கட்டும் போது முத்தாய்ப்பாக அவதரிப்பது பாசுரம் 81.

*கடைந்து பாற்கடல் கிடந்து காலநேமியைக்கடிந்து*
*உடைந்த வாலிதன்தனுக்கு உதவ வந்திராமனாய்*
*மிடைந்தஏழ்மரங்களும் அடங்க எய்து,*வேங்கடம்*
*அடைந்த மாலபாதமே அடைந்து நாளும் உய்ம்மினோ.*

மூன்று அடிகளில் பெருமாள் பண்டு செய்ததெல்லாம் நினைவுகூர்கிறார். தேவர்கள் வேண்டுதலுக்கிணங்க தேவர்கள்அம்ருதம் பெற க்ஷீராப்தியைக்கடைந்தான். அதற்கு பிறகு அதிலேயே படுத்துக் கொள்கிறான். எஞ்சியுள்ள கோரிக் கைகளைக் கேட்டருள - தேவர்களை துன்புறுத்திய கால நேமியை அழித்தான். இதை கலி கல்மிஷங்களை கொல் பவனாகவும் கொள்ளலாம் என்று பட்டர் ஸஹஸ்ரநாம உரையில் உள்ளபடி. சுக்ரீவனுக்கு உதவ இராமனாய் வந்து அதற்கான நிபந்தனை நிறைவேற்ற ஏழு மரங்களையும் ஒரே கணையால் சாய்த்தது. வாலியை ஸ்வஹஸ்தே வதத்தி னாலும், தே வாந்த்ர தொடர்பற ஸ்வதர்சனத்தோட உயிர் உண்ட போது அவனும் மோக்ஷம் பெற்றானே!

மற்றை எல்லாப் பயன்களையும் வேண்டி நிற்பவர், பிறப்பினால் குறைந்தவர், காலத்தினால் பின்பட்டவர் - இவர் கள் எல்லோரும் உய்ந்து பிழைக்க வேண்டி தன்னுடைய ஸௌசீல்ய குணத்தாலும், வாத்ஸல்யத்தாலும் திருமலை யை ஆச்ரயித்து நிலை கொண்டுள்ளான். அந்தப் பெரு மாளின் திருவடிகள் அடைந்து கைங்கர்யம் செய்யுங்கள் - எந்நாளும், என்ற சரமச்லோக சாரமாக இப்பாசுரம் அமைந் துள்ளது.

**(8) நான்முகன் திருவந்தாதியில் திருமலை வேங்கடவன்**

நான்முகன் திருவந்தாதியில் 12 பாசுரங்கள் திருமலை யப்பனைப் பற்றியது. (34,39 - 48 மற்றும் 90). இவற்றுள் சிலவற்றை அனுபவிக்கலாம்.

*வெற்பென்று வேங்கடம் பாடினேன் * வீடாக்கி*
*நிற்கின்றேன், நின்று நினைக்கின்றேன் * - கற்கின்ற*

*நூல்வலையில்பட்டிருந்த நூலாட்டி கேள்வனார்*
*கால்வலையில் பட்டிருந்தேன் காண்*

(நான்முகன்திருவந்தாதி - 40)

மலைகளைச் சொல்லிக்கொண்டு வந்த போது இமய மலை, விந்தியமலை, குடகுமலை, ஆல்ப்ஸ் மலை என்று இது போல் எத்தனையோ உள்ளது. அது போல், வேங்கட மலை என்று சாதாரணமாகத்தான் சொன்னேன். ஆனால் பாரும் இந்த அதிசயத்தை, மோக்ஷத்திற்கு அல்லவோ வழி வகுத்தாயிற்று. நின்று நின்று நினைத்துப் பார்க்கிறேன். எவ்வளவு எளிய சாதனையால் எத்தனை லாபம் கிடைக்கப் பெற்றேன். வேதப் ப்ரதிபாத்யையான பெரிய பிராட்டிக்கு நாதனான திருவேங்கடமுடையான் திருவடிகளாகிய வலை யில் அகப்பட்டு நிலையாக அமர்ந்து நிற்கிறேன்.

*காணலுறுகின்றேன் கல்லருவிமுத்துதிர**
*ஓணவிழவில் ஒலியதிர* - பேணி*
*வருவேங்கடவா! என்னுள்ளம் புகுந்தாய் **
*திருவேங்கடமதனைச் சென்று*

(நான்முகன்திருவந்தாதி - 41)

ரத்ன கற்கள், முத்துக்கள் சிதறி விழும்படி அருவிகள் அழகு செய்யும் திருமலை. திருவோண உத்ஸவத்தில், பக்தர்கள் மங்களாசாஸனம், பக்தர்களின் கோவிந்த நாம கோஷம், வேத பாராயணம் இவையெல்லாம் கடலிரைத்தாற் போல் முழங்கும். இந்த வைபவங்களையெல்லாம் இகழ்ந்து என் நெஞ்சை தேர்ந்தெடுத்து அதில் குடிகொண்டாயே உன்னை ப்ரத்யக்ஷமாகக் காண்கிறேன். நான் திருமலை சேர்ந்து, "வேங்கடமே வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு".(45)

என் நெஞ்சிலே அந்தர்யாமியாய் நிற்கும் நிலையிலும் திருவேங்கடமலையில் நிற்கும் நிலை அதிவிலக்ஷண மாயிருக் கையாலே, அங்கு சென்று காண ஆசைப்படுகிறேன்

என்று திருமலையின் பெருமையை பேசுகிறார்.

“கல்லும் கனை கடலும் வைகுந்த வானாடும்
புல்லென்றொழிந்தன கொல்? ஏபாவம்!*—வெல்ல
நெடியான் நிறம்கரியான் உள்புகுந்து நீங்கான் *
அடியேனது உள்ளத்தகம்” (பெரிய திருவந்தாதி 68).

“நிற்பதும், ஓர் வெற்பகத்து ”(திருச்சந்த விருத்தம் 65) என்கிறபடியே அவன் திருமலையை விட்டு இவர் உள்ளத்துக்கு வர ஆசைப்படுவது போலே இவர் தம் உள்ளத் திருப்பை விட்டு இவர் உள்ளத்துக்கு வர ஆசைப்படுவது போலே, “இளங்கோயில் கைவிடேல்” (பெரிய திருமொழி) ப்ரார்த்தித்திருந்தார்.

“புரிந்துமலரிட்டுப் புண்டரீகப்பாதம் *
பரிந்துபடுகாடுநிற்ப*— தெரிந்தெங்கும்
தானோங்கிநிற்கின்றான் தண்ணருவிவேங்கடம் *
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு”
(நான்முகன்திருவந்தாதி - 45)

*நன்மணிவண்ணனூர் ஆளியும் கோளரியும்*
*பொன் மணியும் முத்தமும் பூமரமும் * - பன்மணிநீ*
*ரோடு பொருதுருளும் கானமும் வானரமும்**
*வேடு முடை வேங்கடம்.*
(நான்முகன்திருவந்தாதி47)

நீல ரத்னம் போன்றதும் ச்ரமஹாரமானதுமான வடிவுள்ளவன் வர்த்திக்கும் இடம் திருவேங்கடம். எதற்காக அங்கு தங்கியுள்ளான்? ரக்ஷணத்துக்காக. ராமன் காட்டுக்குப் போனதும் இதற்காகத்தானே. எப்படிப்பட்ட ஊர்! யாளிகளும், பலம் மிக்க சிகரங்களும், பொன் மணி முத்து போன்ற நவரத்னங்களும், பூத்த மரங்களும், அருவிகளும் காடுக ளும், குரங்கு, வேடர் போன்ற ரக்ஷ்யவர்க்கங்களும் கொழிக்கும் ப்ரதேசம் திருமலை!

[ஆளி, கோளரி, வானரர், வேடர் எல்லோரும் நித்ய ஸூரிகளாம். அவர்கள் இருக்கும் தோற்றம் கொண்டு தப்பாக எண்ணாதீர்கள் - (வ்யாக்யானங்களில் காணப்படுவது)]

*வேங்கடமேவிண்ணோர் தொழுவதுவும் * மெய்ம்மையால்*
*வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும் *— வேங்கடமே*
*தானவரை வீழத் தன்னாழிப்படைதொட்டு **
*வானவரைக்காப்பான் மலை*

(நான்முகன்திருவந்தாதி - 45)

எல்லோருக்கும் ப்ராப்யம் திருவேங்கடம்தான் - நித்ய ஸூரிகளுக்கு கூடத்தான், ஏன் ஸர்வேஶ்வரனுக்கும் கூடத் தான்! அதனால் சித்த சுத்தியுடன் நித்யஸூரிகள் தொழுவது திருவேங்கடத்தையே. 'சரீரத்தால் ஏற்பட்ட பாவம், வ்யாதி முதலியவற்றைப்போக்குவதும் அந்த திருமலையேதான்'! அசுரக்குடியை அழித்து - தேவர்களுக்கு குடியிருப்பு தந்து ரக்ஷிப்பவன் - அதற்காகத் தன் சக்ராயுதத்தைப் பிடித்தவன் வந்து குடி கொண்டிருப்பது அந்த மலையில்தான்.

## (10) திருப்பாணாழ்வார் திருமலை அனுபவம்

வானவர்கள் சந்தி செய்ய நின்ற விரையார் பொழில் வேங்கடவன். லோகஸாரங்கமுனி தோள்தனிலே வந்து திரு வரங்கனைப் பாதாதிகேசமாக பாடப்புக்க பாண் பெருமாள், முதற் பாசுரத்திலேயே "அடியார்க்கென்னை ஆட்படுத்த விம லன் விண்ணவர் கோன் விரையார் பொழில் வேங்கடவன்" என்கிறார்.

என் சிறுமை பாராதே, அவனடியார்க்கு என்னை அடிமையாக்கி வெற்றி பெற்ற ஔஜ்வல்யம் பாரீர்! பெரியார் கள் எதிரிகளின் தரத்தைக் கணிசியாது, தம் கௌரவத்துக் குத் தக்கவகையில்தான் கொடுப்பார். அதனால், விமலன் அவன் நித்யஸூரிநாயகன், நித்ய ஸம்ஸாரியான என்னை நித்யர்களோடும் முக்தர்களோடும் ஸமாந நிலையில் வைத்து அனுக்ரஹித்தான். யார்? பரிமளம் நிறைந்த திருச்

சோலைகள் உடையவன். அவன் பெருமை என்ன தெரியுமா? முமுக்ஷுக்கள் நித்யர், முக்தர் என்று எல்லோரும் திரண்டு ஒன்று சேர வழுவிலா அடிமை செய்ய பாரித்து வேண்டி நிற்பர். ஏனெனில், 'கண்ணாவான் வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு' பரமபதத்திலிருந்து இறங்கியவன் திருமலையில் தங்கித் தான் திருவரங்கம் வந்து கிடந்து கொண்டான்!

இந்த இருள்தருமாஞாலத்தில், 'குன்றின் மேலிட்ட விளக்காய்,' வேங்கடம் மேய விளக்காய் நிற்கிறவன், அந்தமில் பேரின்பத்துள்ளாருடைய அனுபவ இன்பத்தைக் காட்டிலும், எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே என்னும் படியிருந்த ஸ்தாவரங்களுடைய அனுபவ இன்பம் அதிசயிக்கும்படிக் கூடுதலாயிருக்கும்! மந்திகள், சகலரான ஸம்ஸாரிகளுக்கு உபலக்ஷணம். ஒன்றை விட்டு இன்னொன்றில் பாய்ந்து திரிகை மந்திகளுக்கும் மந்தரான மாந்தருக்கும் பொதுவான குணம். இவர்கள் வர்த்திப்பதும் மட்டுமின்றி, வானவர்கள் எவர்கள் பரமபதத்தில் கைங்கர்யம் செய்ய அதிகாரம் உடையவர்களோ, அந்த நித்யரும் முக்தர்களும், அந்த தேசத்திற்குப் பொருத்தமான தேஹத்துடன் (வானரமோ, பறவைகளோ, யானைகளோ, வேடரோ, ஏதோ ஒன்று) உசிதமான கைங்கர்யத்தைச் செய்கின்றனர். ஆழ்வார்கள் அவதாரத்தில் அஸாதாரணப் பெருமை பெற்ற இந்தத் தென் ப்ரதேசத்திற்கு வட எல்லையாக அமைந்த மஹாபர்வதம், அதன் மேல் வானவர் ஸமாராதனம் பண்ணப் பெரிய மேன்மையோட நின்றவன், அவர்கள் பின்தொடர வடக்குத் திருவாசலாலே (அது தானே திருவேங்கடத்திலிருந்து பெருமாள் வர நேர்வழி!) வந்து புகுந்து (திருவரங்கக் கோயிலிலே படுத்து விட்டான்! ஸம்ஸாரத்தை வேரோடு போக்கி எல்லோரையும் பரமபதத்திற்கு ஏற்றினாலன்றி இவன் எழமாட்டான் என்று வானவர் திரும்பிப் போய் விட்டார்கள்!

**(11) திருமலை அப்பனை ஒரு பாவையாகப் பாடும் திருமங்கை மன்னன்**

அர்ச்சைக்கே எடுத்துக் காட்டு, சிறந்த உபலக்ஷணம், திருவேங்கடவன், அர்ச்சானுபவத்திற்கென்றே இட்டுப் பிறந்தவர் கலியன். அவர் மங்களாசாஸனம் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை - எத்தனை துணுக்குப் பாசுரங்கள்! நான்கு பதிகங்களையும் தவிர மற்ற இடங்களிலெல்லாம் வேங்கடவனை நினையாமல் இருப்பதில்லை."கலௌ வேங்கடநாயக" என்ற ப்ரஸித்தியைப் பெற்ற பெருமாளை நினைத்த போதெல்லாம் தியானித்துத் திருப்தி பெறுவார் போலும்! ஏறத்தாழ 22 இடங்களில் பெயரைச் சொல்லியும் செயலைச் சொல்லியும் கொண்டாடுகிறார். பூர்வர்களின் வ்யாக்யானங்களை ஸேவிக்கும் போது தான் ஆழ்வாரின் திருவுள்ளம் என்னவென்று தெளிவாகும். சிலவற்றை இங்கும் காணலாம்.

1) செந்தமிழ் பாடுவார் தாம் வணங்கும்
தேவர் இவர்கொல் தெரிக்க மாட்டேன்

(2-8-2 பெரிய திருமொழி)

2)அவன் மேய அண்ணல் மலையும் அரங்கமும் பாடோமே

(11-3-7 பெரிய திருமொழி)

செம்மையான தமிழ்ப் பாசுரங்களை பாடும் சூரிகளும், பாடிப் பணியப் பெற்றவருமான ஒப்பற்ற தேவருமான இராம பிரான் இவராயிருக்குமோ எனக்கு தெளிய சக்தியில்லையே என்று அட்டபுயகரப் பெருமாளை மங்களாசாஸனம் செய்யும் பாசுரம் இது. செந்தமிழ்பாடுவார் முதலாழ்வார்கள். அவர்கள் முக்கியமாகப் பாடினபடியால் அவனைக் குறிப்பதாகப் பெரியவாச்சான்பிள்ளையுரையில் காணப்பெறுகிறோம். (2-8-2 பெரியதிருமொழி)

நமக்கெல்லாம் பெருமாள் ஸ்வாமி ; அவன் தான் நாதன் மலைகளுக்குள்ளே திருமலை ஸ்வாமி, ஸ்வாமி ஸ்தானத் திலுள்ள மலை என்று பொருள். வைகுண்டத்திற்கு சமாதான மாயிற்றே (பெரிய திருமொழி -11.7)

"நீரகத்தாய் நெடுவரையின் உச்சிமேலாய்"

(திருநெடுந்தாண்டகம் 8)

பனிவரையினுச்சியாய் (திருநெடுந்தாண்டகம் 9)

உலகமேத்தும் தென்னானாய் வடவானாய்,

குடபாலானாய் குணபாலமதயானாய்

(திருநெடுந்தாண்டகம்.10)

திருமங்கை மன்னன் ராஜாவாகையால், அருமையாக நான்கு யானைக் குட்டிகள் வளர்த்தாராம்! சீராட்டுகிறார்! நான்கும் நான்கு திசைகளில்! வடக்கே திருமலையெம் பெருமான், தெற்கே அழகர், மேற்கே திருவரங்கன், கிழக்கே திருக்கண்ணபுரத்தெம்பெருமான்! இவையெல்லாம் இவரின் மங்களாசாஸனத்தின் சில சிறப்பு அம்சங்கள்.

**(12) பொய்கையாழ்வார் - திருமலை அனுபவம்**

முதல் திருவந்தாதியில் 10 பாசுரங்கள் திருமலையை பரவுபவை. நமது பாபங்களை அடியோடு நீக்குவது திருமலை - "வினைச் சுடரை நந்துவிக்கும் வேங்கடமே" என்கிறார் ( பாசுரம்26).

எம்பார் தினமும் காலையில் பக்தியோடு அநுசந்திக்கும் பாசுரம் 75 - "வழி நின்று நின்னைத் தொழுவார் .... மண்ண ளந்த சீரான் திருவேங்கடமே". "பக்தி மார்க்கத்தில் நிலை யாக நின்று உன்னை தியானித்து உபாசிக்கிறவர், பொய்யா மொழியாகிய வேதம் - ஒருவருக்கொருவர் ஓது வித்து அந்த ரீதியிலேயே காலங்காலமாக வேதியரால் பாதுகாக்கப் பெற்று வருவது - வலியுறுத்தும் உயர்ந்த ஸ்வரூபத்தை உடையவராவர். அவர்களுக்கு, பூமியை வாமன - த்ரிவிக்ரம ரூபத்தில் அளந்தருளிய நீர்மையுடையவன் கோயில் கொண்டு ள்ள திருவேங்கடம் ஒரு குறையும் வராதபடி, வைகுந்தத்தைத் தந்தருளும்.

## (13) பூதத்தாழ்வார் என்னும் பெரும் தமிழன்

இரண்டாம் திருவந்தாதியில் 9 பாசுரங்கள் திருவேங்கடத்தைப் போற்றுபவை. ஆழ்வார் ஓரிடத்தில் யானே "பெருந்தமிழன், யானே நல்லன்!" என்று சொல்லுகிறார்.

*யானே தவஞ்செய்தேன் ஏழ் பிறப்பும் எப்பொழுதும் **
*யானே தவமுடையேன் எம்பெருமான் !*- யானே*
*இருந்தமிழ் நான்மாலை இணையடிக்கே சொன்னேன் **
*பெருந்தமிழன் நல்லேன் பெரிது.* (74)

இதை நிருபிப்பது போன்றுள்ளது அடுத்த பாசுரம்

*பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று **
*இருகணிள மூங்கில் வாங்கி - அருகிருந்த*
*தேன்கலந்த நீட்டும் திருவேங்கடம் கண்டீர்**
*வான் கலந்த வண்ணன் வரை.* (75)

இது ஒரு அழகான கற்பனைக் காட்சி - பெரிய யானை மதம் பிடித்தது வேறு. அறிவு கேடுற்ற நிலை. தன்னை இஷ்டப்படி ஆட்டி வைக்கும் பெண் யானைக்கு ஊடல் காலம் முடிந்து போய், தன் பிடிக்குப்பிரியத்தைச் செய்யவே காத்திருக்கும் அந்த வேழம், ஒரு இளமூங்கிலைப் பிடித்திழுத்தது. இரண்டு கணு வளர்ந்தது, குருத்து மென்மையானது அருகில் இருக்கும் தேன் கூட்டிலிருந்து தேனெடுத்து குருத்து மூங்கில் ஒரு த்ரவமாகிறது, தேனுடன் எளிதில் கலக்கிறது. இதை ஆதரவோடு பேடைக்குப் பிழிகிறது, வாயகத்தில் ஹிதமாக. இதெல்லாம்எங்கே காணப்படுகிறது என்றால்? திருவேங்கட மலையில் தான். திருமலையில் திர்யக்குகளுக்குக் கூட ரக்ஷயவர்கத்தின் ரக்ஷணமே யாத்ரையாயிருக்கிறது. பெருமாளின் ஆஶ்ரிதரக்ஷணம் இதனால் ஸூசிதமாகிறது..

### (14) பேயாழ்வாரின் அனுபவம்

மூன்றாம் திருவந்தாதியில் 19 பாசுரங்கள் திருமலையைப் பற்றி. அதில் ஒன்றைக் காணலாம்.

*பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம் **
*கொண்டு அங்குறைவார்க்குக் கோயில் போல் - வண்டு*
*வளங்கிளரும் நீள் சோலை வண்பூங்கடிகை **
*இளங்குமரன் தன் விண்ணகர். (6)*

வைகுந்தவாசனுக்கு முன்பெல்லாம் பாற்கடல், திருமலை, திருக்கடிகை, திருவிண்ணகர் இவையெல்லாம் இருப்பிடமாயிருந்தன போலும்! முன்பெல்லாம், அதாவது, என் ஹ்ருதயத்தைப் பிடித்து அமர்ந்து கொள்வதற்கு முன்னால்.

"திருமாலிருஞ்சோலை மலை, திருவேங்கடம் என்று நீ மிக மதித்திடும் ஸ்தானங்களைப் போல் அடியேன் உள்ளத்தையும் கோயிலாகக் கொண்டு இருக்கிறாயே, இதென்ன நீர்மை? ஆனால் நீ முன்பு இருந்த திருப்பாற்கடல் பாலாலயமோ? அதற்காக அதைக் கைவிட்டு விடாதே, அப்பால், பாலாலயம் பண்ணி ப்ரதிஷ்டை செய்வார்கள், ப்ரதிஷ்டையான பிறகு பாலாலயம் கலைக்கப்படுமே! இளங்கோயில் கைவிடேல்!

இயற்கை காட்சிகள், குரங்குகள் பற்றிய பொருள் பொதிந்த பாசுரங்கள் - இவையெல்லாம் உள்ளன. ஆயினும், இன்னும் ஒரே ஒரு பாசுரத்தால் அனுபவம் பெற்று களிப்புறலாம்.

*புகு மதத்தால் வாய் பூசிக் கீழ் தாழ்ந்து, அருவி*
*உகுமதத்தால் கால் கழுவிக்கையால் - மிகுமதத்தேன்*
*விண்ட மலர் கொண்டுவிறல் வேங்கடவனையே*
*கண்டு வணங்கும் களிறு*

*(மூன்றாம் திருவந்தாதி - 70)*

திருமலையில் வாழும் யானை கூட எப்படிப் பெரு மாளை ஆசாரயுக்தமாய் ஆச்ரயிக்கிறது! மஸ்தகத்தில் வழிந்து வாயில் புகும் மதஜலம் கொண்டு வாய் கொப் புளித்து, ஆச மனம் செய்து, கால் வரையில் பெருகி வழியும் மதநீரருவி யால் கால்களையும் அலம்பிக்கொண்டு, தேன் நிறைந்த மலர்களைத் துதிக்கையால் பறித்து மிடுக்கான வேங்கட வனுக்கு ஸமர்ப்பித்து துதிக்கிறது.

முதலாழ்வார்கள் மூவரும் ஏற்றிய விளக்குகள் திரு மலைக்கு, திருவேங்கடமுடையானுக்கு மிகுந்த உகப்பைத் தருபவை. அவன் திருக்கார்த்திகை தீபத்தன்று, இம்மூன்று அந்தாதிகளையும் கேட்டு ஆனந்திக்கிறான்!

**(15) நம்மாழ்வாரின் ஈடுபாடு**

திருவிருத்தத்தில் - 8,10,15,31,50,60,67,81 ஆக 8 பாசுரங்கள். இதில் பாசுரம் 50 "மாமலைக்கே" என்று அனு சந்திக்கப்படுகிறது. பெரிய திருவந்தாதியில் பாடப்பெறு பவை வட திருவேங்கடம், திருப்பாற்கடல் வைகுந்தம் - இவை மட்டுமே.

*கல்லும் கனை கடலும் வைகுநதவானாடும் **
*புல்லென்றொழிந்தன கொல், ஏ பாவம்!* - வெல்ல*
*நெடியான் நிறங்கரியான் உள் புகுந்து நீங்கான் **
*அடியேனதுள்ளத்தகம். (பெரிய திருவந்தாதி-68)*

பெருமான் அடியேனுள்ளத்தில் புகுந்து, அதிலேயே நின்று விட்டான், போக மாட்டானாம்! திருவேங்கடம், திருப்பாற்கடல், ஸ்ரீ வைகுண்டம் இவை மூன்றும் புல் போல, அல்பமாகப் போய்விட்டன போலும் ! என்ன அலட்சியம்! என்ன செய்வது? பாவம் ! (கல் = திருவேங்கடமலை).

**திருவாய்மொழி**

ஆழ்வார் திருவாய்மொழியில் இரண்டு தசகங்கள் ஸமர்ப்பித்திருக்கிறார், திருமலைக்கு. (இந்தப் பெருமை திரு

மாலிருஞ்சோலை மலைக்கும் உண்டு!) அது தவிர 14 துணு க்குப் பாசுரங்கள். இப்பெருமை வேறு எந்த எம்பெருமான்களுக்கும் கிடையாது. இவற்றில் சில நமக்கு அடிப்படை உண்மைகளை உணர்த்துபவையாக உள்ளவற்றைக் காணலாம்

*வார்புனலந்தணருவி வடதிருவேங்கடத்தெந்தை **
*பேர் பல சொல்லிப்பிதற்றிப் பித்தரென்றே பிறர் கூற **
*ஊர் பல புக்கும் புகாதும் உலகோர் சிரிக்க நின்றாடி **
*ஆர்வம் பெருகிக் குனிப்பார் அமரர்தொழப்படுவாரே (3-5-8)*

திருமலைக்குப் போகும் யாத்ரிகர் பெருமாள் திருநாமங்களைச் சொல்லிப், பாடியாடி, ஊர் வழியே, பெருஞ்சோலை வழியே போவர். மற்றவர் இவர்களைப் பித்தரென்று பரிஹசிக்கலாம். அதனாலென்ன? தீயவன் வைதால் வையப் பெறுபவனுக்குக் குறைவில்லை. அவைஷ்ணவன் அங்கீகரிக்கா விட்டால், அதுவே கூட வைஷ்ணவஸித்தி நிருபகம்! மற்றவரைப் பற்றி நமக்கென்ன? இப்படி பஜன ரஸம் அறிந்தவரை நித்யஸூரிகளும் தொழுவர். மாலுக்கு வையமளந்த மணாளர்க்கு, (6-6-1) நியமநப் பாசுரம் "கட்டெழில் சோலை நல்வேங்கடவனை" என்று அமைந்திருப்பது கொண்டு, இந்த தசகமே திருமலைக்கானது என்ற ஒரு கருத்து நிலவுவதுண்டு. "ஒழிவில் காலமெல்லாம்" தசகம் மிகவும் ப்ரசித்தி பெற்றது. முதற் பாசுரம் ப்ரணவார்த்தம், 6 ஆம் பாசுரம் பொருள் பொதிந்தது.

"நமோ வேங்கடேசாய" என்றதன் அர்த்தத்தை விளக்குவது.

*வேங்கடங்கள் மெய்ம்மேல் வினை முற்றவும் **
*தாங்கள் தங்கட்கு நல்லனவே செய்வார் **
*வேங்கடத்துறைவார்க்கு நமவென்ன*
*லாம்கடமை * அது சுமந்தார்கட்கே.*

*(திருவாய்மொழி - 3-3-6)*

திருவேங்கடத்தானுக்கு "நம:" என்று சொல்வது தான் நம் கடமை. அதற்கு மேல் கடமை அதைச் சுமக்கிறானே, அந்தப் பெருமாளுக்குத்தான், அவன் கவனித்துக் கொள் வான். ஸர்வ பாபங்களும் வெந்து போம் (கடங்கள் வேம்). அதன்பின் செய்யப்பெற்ற கர்மாக்கள், பாபங்கள், அதன் பலன் ஏதும் ஒட்டாது, இது சத்யம்.

"நம:" என்றால் நமம என்பதன் வடிவம். இது சேஷத்வ மாகிற ஸ்வரூபத்துக்குள்ள விரோதிகளை, புருஷார்த்தமாகிய கைங்கர்யத் துக்குள்ள விரோதியை இது செய்ததன் கர்த்ருத்வமாகிய எண்ணமாகிய விரோதியை - மூன்றையும் கழித்ததாகிறது.

உலக முண்ட தசகம் (7-10-1) ஆழ்வார் திருவேங் கடத்தானிடம் க்ரமமாகப் ப்ரபத்தி செய்ததைத் தெளிவாகச் சொல்லுகிறது. இவை இரண்டுமே திருவாய்மொழியில் உயிர் மூச்சான தசகங்கள்.

### (16) ஸ்ரீ தேசகனுக்கு அமைந்த இந்தத் திருநாமம்

"சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் பாரொன்று சொன்ன பழமொழியுள் ஓரொன்றுதானே அமையாதோ, தாரணியில் வாழ்வார்க்கு வானேறப் போமளவும் வாழ்வு " என்று பிள்ளை லோகாசார்யர் தனியன் சாதித்துள்ளார்.

### (17) ஸ்ரீ தேசிகனின் மங்களாசாஸனம்


ஸ்வாமி தேசிகனின் வேங்கடேச அவதாரம் என்றும் வேங்கடேச கண்டாவதாரம் என்றும் பலபடியாகச் சொல்லும் படியிருக்கும். அதனால் தானோ என்னவோ மங்களாசாஸன ரீதியில் அதிகமான ஸ்ரீஸூக்திகள் காணக் கிடைக்கமாட்டா! ஆனால் இதற்கு ஈடு செய்வது போல் "தயாசதகம்" ஒரு ஸ்தோத்ரம் போறுமே! அதுவும் ஸ்ரீநிவாசனுடைய மிகச் சிறந்த குணமான தயை, (கருணை, அநுகம்பா, வாத் ஸல்யம் இவைகளை வர்ணிக்கப் பெறுவது) என்று ஒன்றைப் பற்றியே 108 ஸ்லோகங்கள். ஆழ்வார் "நிகரில் புகழான் "

என்று அழைக்கப்படுவதற்குப் பொருளாய் "தயாசதகம்" அர்த்தமாக அமைந்துள்ளதை காணலாம்.

ஸ்வாமி தேசிகரின் "ஸங்கல்பஸூர்யோதயம்" என்கிற அபூர்வமான நாடக க்ரந்தத்தில் 6 ஆம் அங்கம் ராஜா விவேகன் திவ்ய மங்கள விக்ரஹங்களை சேவிப்பதனால் பெறும் பக்தி முதிர்ச்சி விளக்கப்படுமிடம். அங்கு திருமலை ப்ரத்யக்ஷமான பரமபதம், ச்ரமம் போக்கும் ஸ்தலம் பகவானாலே ஸ்வயமாகவே நிர்மாணம் செய்யப்பெற்ற க்ஷேத்ரம் "கலி பலப்ரஸாரித ஸகல ஸங்கட ப்ரசமணம் " செய்வது என்றும் வர்ணிக்கப்படுவது காணலாம்.

இந்தத் திருமலையின் மீது பகவத் பாதங்களிலிருந்து பெருகும் ஆகாச கங்கை இடைவிடாது பெருகுகிறது. மஹான்களுக்கு வாசஸ்தலமாகத்தக்கது. அதேசமயம், இந்த ஆச்சர்யமான பெருங்காட்டில் எல்லா ப்ராணிகளுக்குமே ஆகையால், தமக்குள் பரஸ்பர த்வேஷமில்லாமல், அதனால் எல்லாமே சுகமடைந்தவைகளாக வாழ்கின்றன.

ஹம்ஸ ஸந்தேசம், ராமன் சீதைக்கு ஹம்ஸம் ஒன்றைத் தூது விடுவதாக, ஸ்ரீதேசிகன் சாதித்த காவ்யம். அதில் ச்லோகம் 22 ரசமானது.





திருவயிந்திரபுரம் தேவநாதன், ஸ்வாமி தேசிகன்

நண்பா! ஹம்ஸமே! அந்தத் திருமலையின் பெருமை யைப்பார். கீழிருந்து ஏறி வந்தவர்கள் மனிதர் (மண்ணவர்) இரு பாலரும் ஸத்வ குணம் மேலிட்டவராய் இருக்கிறார்கள். எங்ஙனம்? ஒருவருக்கொருவர் ஏற்றத்தாழ்வு என்பதே இல்லா மல், சேவித்துக் கைங்கர்யம் செய்ய ஒன்றாகச் செல்கிறார் கள், பலனும் பொதுவாயிற்றே (ஆம் கைங்கர்ய ரசம் வை குண்ட ப்ராப்தி) நீயும் பெருமாளுக்கு சக்திக்குரிய முறை யில் உன் விருப்பப்படி கைங்கர்யம் செய்.

எந்நாளே நாம் மண்ணளந்த
இணைத் தாமரைகள் காண்பதற்கென்று
எந்நாளும் நின்றிமையோர்கள்
ஏத்தி இறைஞ்சி இனமினமாய் *
மெய்ந்நாமனத்தால் வழிபாடுசெய்யும்
திருவேங்கடத்தானே! *
மெய்ந்நானெய்திஎந்நாள்
உன்னடிக்கண் அடியேன்மேவுவதே.

என்கிற ஆழ்வார் பாசுரம் 6-10-6 ஈண்டு ஸ்வாமி தேசிகன் ச்லோகத்துக்கு அடிப்படை.

**(18) பின்னானார் பலர் கொண்டிருந்த ஈடுபாடு**

தாளப்பாக்கம் அன்னமாசார்யர் என்ற சங்கீத மேதை ஸ்ரீ ஆதிவண்சடகோப மஹாதேசிகனின் சிஷ்யராய் அநுக்ர ஹிக்கப்பட்டு திருமலையெம்பெருமான் மீது ஆயிரக் கணக் கான கீர்த்தனங்கள் இயற்றியவர். செப்பேடுகளில் பொறிக் கப் பட்டிருந்த அவை அண்மைக்காலத்தில் தான் வெளிக் கொணரப்பட்டுப் பிரசாரத்திற்கு வந்துள்ளன.

திருப்பதி ஸ்வாமி (ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமியின் ஆசார்யன்) திருமலை நம்பி வம்சத்தவர். அங்கேயே எழுந் தருளியிருந்து, திருவேங்கடமுடையானிடம் அத்யந்தமான பக்தியுடன் அவனிடத்திலே பரந்யாசம் செய்வித்து வருவதும்

உண்டு! அது ஒரு காலம்! பின்னர் பல க்ருஹஸகரான மஹநியர்கள் கூட - ஏதோ ஒரு சம்பந்தத்தால் - ஸ்ரீநிவாச னிடம் விசேஷ ஈடுபாட்டுடனே வாழ்ந்து வந்து தம் ஸ்ரீஸூக்தி களில் அதைவெளிப்படுத்தினவர்கள் உண்டு. உதாரணத் திற்கு ஸ்ரீ கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ D.T.தாதாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உத்தமூர் ஸ்வாமி ஆகியோர்..

தமிழ்க் கவிகளாக, பிள்ளைப் பெருமாள் ஐயங்கார், வீரராகவ முதலியார் போன்றோர் உயர்ந்த கவிதைகளை ஸமர்ப்பித்திருக்கின்றனர். சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன் கம்பம் பள்ளத்தாக்கில் தோன்றி மதுரகவி ஸ்ரீ நிவாச ஐயங்கார் என்பவர் லக்ஷக்கணக்கான கவிதைகளை பக்தி பூர்வகமாக அளித்துள்ளார். திவ்யதேசங்கள் பலவற்றுக்கு திருப்புகழ் (சந்தநயத்துடன்) பாடியதுடன் திருமலை எம் பெருமானுக்கே பல ப்ரபந்தங்கள் பாடியுள்ளார். தமிழிசை என்று கொண்டாடுபவர்கள் ஆதரிக்க வேண்டிய பாடல்கள்! (தயாசதகம் முழுவதையும், பாதுகாஸஹஸ்ரம் பாதியை யும் தமிழ் கவிதைகளாகச் செய்து வைத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.)

தயா சதகம் ச்லோகம் 73 ல் (ஸ்வயமுதயிந:) ஸ்வாமி தேசிகன் விவரிக்கிறார். ஸ்ரீநிவாசனுடையதயை ஓர் ஏணி போல் உதவி, அவரவர் விரும்புமளவுக்குப் பலனைப் பெறும்படியான கல்பவ்ருக்ஷமாக ஸ்ரீநிவாசன் நிற்கிறான். அவனுடைய பஞ்சரூபங்களில் ஏதோ ஒன்றை அவரவர் தத்தம் விருப்பத்துக்கு ஏற்றபடி உபாசிக்கலாம். தயைதான் ஏணி. நாம் ஏறிப் பெருமாளைச் சேர, பலனை அடைய என்று அருளியுள்ளார்.

இதை எல்லோரும் உணர்ந்து பயன் பெற வசதி யாகத் திருமலைக்கே ஏற, படிகள் அமைத்தால்? இந்த சிந்தை எழுந்தது ஒரு மஹாபுருஷனுக்கு! ஸ்ரீ ஆதிவண் சடகோப மஹாதேசிகன் அந்த நெடுந்தூரத்துக்கு ஏறும்படி சௌகர்யமாகப் படிகள் அமைத்துக் கொடுத்தார். அந்தப்

**படிகள் வழியே ஏறி ஸ்ரீநிவாசனை சேவிக்கவும், அவர் காட்டிய** ஏணியில் ஏறிப் பரமபதம் பெறவும் எளிதாகிறது.

**(19) மங்களம்**


*ஸர்வலோக சரண்யாய சிதசித்வஸ்து சேஷிணே |*
*ஸ்ரீவத்ஸாங்கதி வக்ஷாய ஸ்ரீநிவாசாய மங்களம் ||*
*ச்ரிய காந்தாய கல்யாண நிதயே நிதயே அர்த்திநாம் |*
*ஸ்ரீ வேங்கட நிவாஸாய ஸ்ரீநிவாசாய மங்களம் ||*

**(20) மூன்று திவ்யதேசங்களுக்கும் ஒரு சேர மங்களம் கோருகை**

கோயில், பெருமாள் கோயில், திருமலை-என்ற இந்த திவ்ய தேசங்கள் (தேசத்ரயம்) எவ்வளவு ப்ரதானம் என்றால் ஸ்வத உள்ள மகிமை, ஆழ்வார்கள், ஆசார்யர்கள், இன்று வரை எல்லா வைஷ்ணவச் சான்றோர்கள் ஒரு முகமாகப் போற்றி உச்சியில் வைத்துக் கொண்டாடுபவை என்பது நன்றாக விளங்குகிறது. இம்மூன்றுக்குமாக ஸ்ரீ தேசிகன் சாற்றியுள்ள ஒரு ப்ரார்த்தனா ஸ்லோகத்துடன் நாமும் அதே கருத்தைப் பெருமாளிடம் விண்ணப்பித்துக் கொண்டு திருமலையிலிருந்து விடைபெற்று - மற்றை மலைகளையும் அதில் உறையும் எம்பெருமானுடைய பெருமையை இனி அனுபவிப்போம்.

வரதன் கோயில் - பெருமாள் கோயில் - திருமலை முதலிய திவ்யதேசங்களில், விரோதிகளிடமிருந்து இடர் வராமல், உன் திருவாராதன வைபவங்கள் விசேஷமாகவும் சாஶ்வதமாகவும் நடைபெறவேணும். அது அப்படி நடக்க நீயேதான் சங்கல்பித்து நடத்திக் கொள்ள வேண்டும்!





## இரண்டாம் பாகம்

# மலைமேல் நிற்பாய்

# திருமாலிருஞ்சோலை



# இரண்டாம் பாகம்

## மலைமேல் நிற்பாய் திருமாலிருஞ்சோலை

## (தெற்குத் திருமலை)

திருமால் இரும் சோலை என்பதற்கு இரண்டு விதமாய் பொருள் கூறப்படுகிறது

(1) திருமால் (எம்பெருமான்)நிரந்தரமாக நித்ய வாசம் செய்து வரும் உத்யாவனம் போன்ற சோலைகள் நிறைந்த திவ்ய தேசம்.

(2) மால், இருமை இரண்டும் பெருமைக்கான வாசகங்கள். (இருதண் மாநிலம் என்பது காண்க, மாலிருஞ் சோலை என்றும் மங்களாசாஸனம் உண்டு), சோலை ஒக்கமும் பரப்பும் மிக்கதாய் இருப்பதால் மாலிருஞ் சோலை. ஆகவே, மால், இரும் இரண்டும் சோலைக்கு அடைமொழிகள். இது ஸ்ரீ மணவாள மாமுனிகள் அருளிய (பெரியாழ்வார் திருமொழி உரைக்கு) இசைந்ததாகும். கூரத்தாழ்வானும் மஹாவநகிரி என்று புகழ்வது இதற்கு இசைந்ததாய் உள்ளது.

### I

### திருமலையாழ்வாரைப் போற்றும் பாசுரங்கள்

1. தக்கார் மிக்கார்களைச் சஞ்சலம் செய்யும் சலவரை
   தெக்கா நெறியே போக்குவிக்கும் செல்வன் பொன்மலை
   எக்காலமும் சென்று சேவித்திருக்கும் அடியரை
   அக்கானெறியை மாற்றும் தண்மாலிருஞ்சோலையே
   *(பெரியாழ்வார் திருமொழி 4-2-3)*

(ஈசுப்பரனை ஒத்த க்ருபையுடையவர்கள், ஸர்வாத் மாக்களும் உஜ்ஜீவிக்க வேணுமென்று கவலைப்படுவதில் பெருமாளையும் மிஞ்சியவர்கள். அப்படிப்பட்டவர்களை நலியும் பாபிகளைத் தென் திசையிலுள்ள யமலோகத்திற்கு அனுப்பிவிடும். ச்ரியபதி வாழும் திருமலை உள்ளதே,

அந்த அழகர்மலை, அநந்ய ப்ரயோஜநராக எப்போது வேண்டு மானாலும்பெருமாளைசேவிக்கும் அடியார்களுக்கு பாபக் காட்டை ஒழித்து, பிணிவீழுமாறு செய்துவிடும் அந்த திவ்ய தேசம். ஆகவே, அயன் மலை அடைவது அது கருமமே).

*2.*மன்னர் மறுக மைத்துனன் மார்கொரு தேரின் மேல்
முன்னங்கு நின்று மோழையெழுவித்தவன் மலை
கொள்ளவில் கூர்வேற்கோன் நெடுமாறன் தென்கூடர்கோன்
தென்னன் கொண்டாடும் தென் திருமாலிருஞ் சோலையே
*(பெரியாழ்வார் திருமொழி 4-2-7)*

*3.*சதிரிள மடவார் தாழ்ச்சியை மதியாது
அதிர் குரல் சங்கத்து அழகர் தம் கோயில்
மதிதவழ் குடுமி மாலிருஞ்சோலை
பதியது ஏத்தி எழுவது பயனே
*(திருவாய்மொழி* 2-10-2)

*4.*நலமென நினைமின் நரகழுந்தாதே
நிலமுனமிடந்தான் நீடுறை கோயில்
மலமறுமதிசேர் மாலிருஞ்சோலை
வலமுறையெய்தி மருவுதல் வலமே *( திருவாய்மொழி* 2-10-7)

*5.*வெற்பென்றிருஞ் சோலை வேங்கடமென்றிவ்விரண்டும்
நிற்பென்று நீ மதிக்கும் நீர்மை போல் – நிற்பென்று
உளங்கோயிலுள்ளம் வைத்துள்ளினேன், வெள்ளத்
திளங்கோயில் கை விடேல்
*( இரண்டாம் திருவந்தாதி* -54)

வெற்பு என்று சொல்லப்பெற்று தெற்குத் திருமலை யான அழகர் கோயில், வடக்கு திருமலையான திருவேங் கடம் என்ற இவ்விரண்டும் நீ உகந்து வாசம் செய்யும் ஸ்தாநங்கள். அவற்றுடன் என்ன ஒரு சௌசீல்யத்துடன் என் நெஞ்சையும் அப்படியே வாசஸ்தலமாகக் கொண்டாயே! இப்படி என் நெஞ்சத்தில் இடம் புகுவதற்கு முன்பாக நீ பாலா லயமாகக் கொண்டிருந்த திருப்பாற்கடலை கைவிட வேண் டாம் என்று உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்.

## II

## அழகரின் புகழ் பற்றிய மங்களாசாசனம்

6. ஆயிரம்தோள் பரப்பி முடியாயிரம் மின்னிலக
ஆயிரம் பைந்தலைய அநந்தசயனனாளும் மலை
ஆயிரமாறுகளும் சுனைகள் பலவாயிரமும்
ஆயிரம் பூம்பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே
*(பெரியாழ்வார் திருமொழி 4-3-10)*

7. மாலிருஞ்சோலையென்றும் மலையையுடைய மலையை
நாலிரு மூர்த்தி தன்னை நால்வேதக் கடலமுதை
மேலிருங்கற்பகத்தை வேதாந்த விழுப்பொருளில்
மேலிருந்த விளக்கை விட்டுசித்தன் விரித்தனனே
*(பெரியாழ்வார் திருமொழி 4-3-11)*

திருமாலிருஞ்சோலையென்னும் மலையைத்தன் வாச ஸ்தலமாகக் கொண்டு, இந்த நிலையில் சலிக்காமல் மலை போல் ஸ்திரமாக இருப்பவன் அழகன் அனந்தசயனன், அவனுக்கு ஆயிரம் தோள்கள், முடிகள் என்றெல்லாம் ப்ரசித்தி. அந்த மலையிலோவென்றால் ஆறுகள் ஆயிரம், சுனைகள் ஆயிரம், பொழில்கள் ஆயிரம், சிலம்பாறு ஒன்றுதானே என்று கருதிவிடாதீர், திருநாராயணப் பொய்கை, நலந்திகழ் நாரணன், ஆராவமுது என்றார் போலே பல பொய்கைகள் அடிவாரத்திலுள்ளனவாம் !

திரு அஷ்டாக்ஷர ப்ரதிபாத்யன் மேலான கல்பக வ்ருக்ஷம். இது கேட்பதையெல்லாம் தரும் என்பர். பெருமாளாகிற கல்பக வ்ருக்ஷம் அதையும் செய்து தன்னையும் கூடத்தரும். என்னையாக்கிக் கொண்டு எனக்குத் தன்னைத்தந்த கற்பகம் என்கிறார் ஆழ்வார் - (திருவாய்மொழி 2-7-11). வேதாந்த ப்ரதிபாத்யங்களான அர்த்தங்களுக்கெல்லாம் மேலாயிருந்து விளங்கும் ஸர்வஸ்மாத்பரன். இதை விஷ்ணு சித்தர் விரித்துச் சொன்னபடி, இதுவே பலச்ருதியாகவும் கருதும்படியாக உள்ளது.

8.எருத்துக் கொடியுடையானும் பிரமனுமிந்திரனும், மற்றும்
ஒருத்தரும், இப்பிறவியென்னும் நோய்க்கு மருந்தறிவாரு மில்லை
மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணா! மறுபிறவி தவிரத் திருத்தி
உன் கோயிற் கடைப்புகப்பெய் திருமாலிருஞ்சோலையெந்தாய்

(பெரியாழ்வார் திருமொழி 5-3-6)

9. தெள்ளியார் பலர் கை தொழும் தேவனார்
வள்ளல் மாலிருஞ்சோலை மணாளனார்
பள்ளி கொள்ளுமிடத்தடி கொட்டிட
கொள்ளுமாகில் நீ கூடிடு கூடலே

(நாச்சியார் திருமொழி 4-1)

10.கோங்கலரும் பொழில் மாலிருஞ்சோலையில் கொன்றைகள்மேல்
தூங்கு பொன் மாலைகளோடு உடனாய் நின்று தூங்குகின்றேன்
பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும்
சார்ங்கவில் நாணொலியும் தலைப் பெய்வதெஞ்ஞான்று கொலோ!

(நாச்சியார் திருமொழி 9-9)

அழகர்மலையில் காடுகளில் கோங்குமரங்கள் செழித்து வளர்ந்து நிற்கின்றன. அங்கு கொன்றை மரங்களில் பொன்னிறத்துப் பூக்கள் மாலை மாலையாகத் தொங்கிக் கொண்டு இருந்து என்ன ப்ரயோஜனம்? யார் என்ன செய்யலாகும்? ஸாத்விகருக்கு என்ன உபயோகம்? வெறும் வீண் இருப்புத்தானே? அவைகளோடு உடன் தொங்கி, தூங்கி, நானும் என் வாழ்க்கையும் வீணாகப் போகின்றனவே! அழகருக்காக நான் காத்துக் கிடக்க, என்னை வந்து கைக் கொள்ள வந்தாரில்லையே! இப்படி காத்து ஏங்கிக் கிடந்தவளுக்கு அவர் என்னவெல்லாம் செய்தார் என்று நினைத்துப்பார்க்கிறேன் சீதைக்குச் சார்ங்கொலி, ருக்மிணிக்குச் சங்கொலி ஆனால் எனக்கு எப்போது எது கேட்குமோ?

11.வலம்புரியாழியனை வரையார் திரள்தோளன் தன்னை
புலம்புரிநூலவனைப் பொழில்வேங்கடவேதியனை
சிலம்பியலாறுடைய திருமாலிருஞ்சோலை நின்ற
நலம்திகழ்நாரணனை நணுகுங்கொல்? என்நன்னுதலே
(பெரிய திருமொழி 9-9-9)

12.பாயிரும் பரவை தன்னுள் பருவரை திரித்து வானோர்க்
காயிருந்தமுதங்கொண்ட அப்பனை எம்பிரானை
வேயிருஞ்சோலை சூழ்ந்து விரிகதிரிரிய நின்ற
மாயிருஞ்சோலை மேய மைந்தனை வணங்கினேனே
(திருக்குறுந்தாண்டகம்.3)

## III

### உத்தமூர் ஸ்வாமி வ்யாக்யானம்

அசுரரை அழித்துத் தாங்கள் வாழ வானோர் வந்து வேண்டிய போது உலகில் தேவாம்சம் வளர வேண்டு மென்று அதற்கு இசைந்து பெரிய பாற்கடலும் கடையப் படும்படி மிகப் பெரிய மலையை தானே கொணர்ந்து கடைந்து, வந்த அமுதத்தை ஸ்த்ரீ உருக்கொண்டு தானே பெற்று அவர்களுக்கு உதவினான். இவ்வளவு பிரயாசை கெண்டானே என வருந்தினேன். பிறகு அவர்களுக்கு ராஜ்யம் நீடிக்க வேண்டுமென்று திருப்பாற்கடலில் திருமா மகளைத் தோன்றச் செய்ததால், அவள் தனது திருமார் புக்கு எழுந்தருளியது தோற்ற அவர்களுக்காக அவ்வமுதத் தை கொண்டானே, கடைந்தது தகுமென்று ஆறுதலுற்றேன். அதனால்இங்கே பிராட்டியுடன் நாம் சேவிக்க அனுகூல மாயிற்று. திருமலையில் இவனது மிடுக்கைக் காணும் போது மந்த்ர மலை கொண்டு கடைந்தவனென்பதும் தெரியலாம். நமக்கு அவன் அனுபவத்திற்கு வரும் போது அவ்வமுதத் திற்கு மேலான இன்பம் ஏற்படுவதால்,அவன் அவ்வமுதமும் தனக்குள்ளே கொண்டான் என்னலாம். விஷக் காற்று வீச அங்கே கடலில் சிரமப்பட்டவன் சந்திரவன் உஷ்ணம் கூட உட்புகாதபடி இருண்ட இம்மாலிருஞ்சோலையில் மன்னியிருப்பதே தகும்.

13. முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ?
அடிச்சோதிநீநின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?
படிச்சோதி யாடையொடும் பல்கலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதிகலந்ததுவோ? திருமாலே! கட்டுரையே
*(திருவாய்மொழி 3-1-1)*

*14.* அருளையீன்னம்மானே! என்னும் முக்கணம்மானும்
தெருள்கொள் பிரமனம்மானும் தேவர்கோனும் தேவரும்
இருள்கள் கடியும் முனிவரும் ஏத்தும் அம்மான் திருமலை
மருள்கள் கடியும் மணிமலை திருமாலிருஞ்சோலை மலையே.
*(திருவாய்மொழி 10-7-7)*

திருவாய்மொழி இரண்டாம் பத்து பத்தாம் தசகம் கிளரொளி இளமைப் பதிகம் அழகர் மலையைப் பற்றியது, சக்தியிருக்கும் போதே அங்கே செல்லுங்கள் என்றெல்லாம் செய்த உபதேசத்தில் பெருமாளைப்பற்றி பேசத் தொடங்க வில்லை. அடுத்த தசகம் மூன்றாம் பத்து முதல் தசகம், அழகர் அழகில் ஈடுபட்டுத் தன்னை மறந்து, பெருமாள் ஊர் பெயர் கூட மறந்து, ஒரே அனுபவப் பெருக்காக வெளிவரும். ஆயினும் இது மாலிருஞ்சோலைப் பெருமாள் மங்களா சாஸனமாகவே கொள்ளப்பெறுவது, உரைகளின் வழியிலான சம்ப்ரதாயம்.

எல்லாரும் ஏத்தித்தொழுவர் திருமலையை, இந்த பரமஸ்வாமி - சிவன், ப்ரம்மா, இந்திரன் போன்ற முப்பத்து முக்கோடி தேவர்களும் தாம் ஸ்வாமி என்று அபி மானித்து நிமிர்ந்து நிற்பரே, அவர்களெல்லோருக்கும் ஸ்வாமி! தானே விரும்பி வந்து உறையும் திருமலை இது. இதுவே நமது அஞ்ஞானத்தையும் தடைகளையும் போக்கிவிடும். சுகமான, எளிதில் கிடைக்கும மணி (ரத்னம்) போன்ற குளிர்ந்த க்ஷேத்ரம், இதுவே புருஷார்த்தம் என்று கூடச் சொல்லலாம். மறுபடியும் சொல்கிறேன் - இதுதான் நமக்கு ப்ராப்ய விரோதிகளை நீக்கிப் பெருமாளைப் பெற்றுத் தரும் திரு மலை - அது தான் திருமாலிருஞ்சோலை மலைதான்! என்று வலியுறுத்திச் சொல்லப்படுகிறது.

'15. பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங்குறைவார்க்குக் கோயில் போல்—வண்டு
வளங்கிளரும் நீள் சோலை வண் பூங்கடிகை, •
இளங்குமரன் தன் விண்ணகர் *(மூன்றாம் திருவந்தாதி 61)*

16. இருப்பிடம்வைகுந்தம் வேங்கடம்•
மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக்கென்பர்நல்லோர்•
அவை தம்மொடும்வந்து
இருப்பிடம்மாயன் இராமானுசன்
மனத்தின்று •அவன்வந்து
இருப்பிடம் என்தன்
இதயத்துள்ளேதனக்கின்புறவே
*(இராமானுச நூற்றந்தாதி 106)*

17. ஸீதாம்பரம் வரதஸீதல த்ருஷ்டி பாதம்
ஆஜாநுலம்பிபுஜம் ஆயதகர்ணபாஸம் ।
ஸ்ரீமந் மஹாவநகிரீந்த்ர நிவாஸதீக்ஷம்
லக்ஷ்மீதரம் கிமபி வஸ்து மமாவிரஸ்து ॥
*(ஸுந்தர பாஹுஸ்தவம் 14)*

18.சதா ஷா குண்யாக்யை: ப்ருதுலபலவிஜ்ஞாந ஸகந
ப்ரபாவீர்யைஸ்வர்யை அவதிவிதுரை ஏதிதஸம் ।
த்ருமஸ்தோம க்ஷமாப்ருத் பரிஸராஹோத்யாநமுதிதம்
ப்ரபத்யே அத்யாரூட ஸ்ரியம் இமமஹம் ஸுந்தர புஜம் ॥
*(ஸுந்தர பாஹுஸ்தவம் 24)*

பீதகவாடைப் பிரான், கருத வரம் தரும் சீதளமான திருக்கண்ணோக்கு, ஆஜாநுபாஹு, தோளளவும் நீண்ட திருச்செவி மடல்கள், என்ன அழகு, திருமாலிருஞ்சோலை மலையில் நித்யவாசம் செய்வதான தீக்ஷை, தீர்க்கமான முடிவு அந்த ஸ்ரீதரன் என்னும் பரஞ்சோதி வஸ்து என் கண்ணுக்கும் மனதுக்கும் தோற்றமளித்துக் கொண்டிருக்க வேணும்.

எல்லையில்லாத அளவுக்கு ஞானம், பலம், சக்தி, தேஜஸ், வீர்யம் ஐஸ்வர்யம் என்ற ப்ரபல குணங்கள் - இவை எப்போதும் இலங்கி இவனை பகவானென்று எடுத்துக் காட்டும் சோலைமலைத் தாழ்வரைகளாகிற உத்யாநவ னத்தில் மகிழ்ந்து உலா வருபவன் ஏறு திருஉடையான் ஸுந்தரத் தோளன். அவனை அடியேன் சரணமடைகிறேன்.

**ஸ்ரீ தேசிகரின் மங்களாசாஸனம்**

*19.* த்வயா த்ருஷ்டஸ் துஷ்டிம் பஜதி பரமேஷ்ட்டீ நிஜபதே
வஹந்மூர்த்தீரஷ்டௌ விஹரதி ம்ருடாநீ பரிப்ருட:।
பிபர்த்தி ஸ்வாராஜ்யம் வ்ருஷசிகரி ச்ருங்காரி கருணே
சுநாஸீரோ தேவாஸுரஸமரநாஸீரஸுபட: ॥

ஸ்ரீதேசிகன், தயா சதகம் 66 வது ச்லோகமாகத் திரு வேங்கடமுடையானைப் பாடியதுதான் ஆயினும் திருமாலி ருஞ்சோலைக்கு அதிபதியான அழகருக்கு மங்களாசாஸன மாக ஸ்ரீ தேசிகனே ஸங்கல்ப ஸூர்யோதயம் நாடகத்தில் அங்கம் 6 ல் ச்லோகம் 64ஆவதாக அனுஸந்திக்கிறார். வடக்கு திருமலைக்கானது தெற்குத் திருமலைக்காகும் இரண்டும் வ்ருஷபகிரி.

வ்ருஷபகிரி எனப்படும் திருமாலிருஞ்சோலை மலைக்கு அலங்காரபூதனாக பெருமாள் கருணையால் தான் ப்ரம்மா தன் ஸ்தானத்தில் ஆனந்தத்துடன் வீற்றிருப் பதும், உமாபதியான ஈச்வரன் தன் எட்டு மூர்த்திகளைக் கொண்டு (ஐந்து பூதங்கள், ஸூர்யன், சந்திரன், யக்ஞம் செய்யும் யஜமானன்) பெருமை பெறுவதும், இந்திரன் தேவ அசுர யுத்தங்களில் தேவர் தலைவனாகப் பெருமையுடன் செயல்படுவதும் என்பது, உன் தயையின் மஹிமையை எடுத்துக்காட்டும் (இது அருளை ஈ என் அம்மானே ....... என்று முன்பு கூறிய பாசுரக் கருத்தை வலியுறுத்துகிறது).

20) பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் அழகரந்தாதி (22,95 இல்) அழகர் திருமாலிருஞ்சோலையை பற்றிய குறிப்பு.

**20.தெய்வம் பலவவர் நூலும் பல, அவை தேர் பொழுதில்**
**பொய்வம் பல என்று தோன்றும் புல்லோர்கட்கு போத நல்லோர்**
**உய்வும் பலனும் அவனே என்றோதி உணர்வர்: நெஞ்சே**
**கொய்வம் பலர் சொரியும் சோலைமாமலைக்கொண்டலையே.**

அழகரந்தாதி 22

*21.*பாதகர் அத்தனை பேரும் கனகனும் பல் நகத்தால்
ஏதகரத்தனையற்கு அருள் ஆளியை, எட்டெழுத்துள்
ஓது அகரத்தனை, சுந்தரத் தோளுடையானை, நவ
நீதகரத்தனை, சேர்ந்தார்க்குத் தேவரும் நேர் அல்லரே!

அழகரந்தாதி 95

**1. திருமாலிருஞ்சோலை (மலையின்) மற்றைப் பெயர்கள் -**

மாலிருஞ்சோலை, மாயிருஞ்சோலை, இருஞ்சோலை, சோலை, இருங்குன்றம், தெற்குத் திருமலை, மஹாவநகிரி, வநாத்ரி, வ்ருஷபகிரி, ப்ருஷபகிரி (ஸிம்ஹாத்ரி கூட) இடபகிரி, அழகர் கோயில், திருமால் குன்றம் முதலியவை.

இந்த ஸ்தலத்தில் வேத ப்ரமாணமாகத் திகழ்பவனின் திருநாமங்களும் பல-

1. அழகர் 2. சுந்தரத் தோளுடையான் 3. சுந்தர பாஹு 4. சுந்தரராஜன் 5. பரமஸ்வாமி (மூலவர்) 6. அலங்காரன் 7. மாலலங்காரர் 8. கள்ளழகர் (இப்பெயர் நம்மாழ்வாரை கொள்ளை கொண்டதையும், மற்றும் அந்த ப்ரதேச மக்கள் பெரும்பான்மையினர் கள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்கள் - இவனையே குலதெய்வமாகக் கொண்டிருப்பது - இவற்றால் வந்த காரணப் பெயர்).

**தாயார்** - சுந்தரவல்லி. கல்யாண நாச்சியார், தனிக் கோயில் கொண்டுள்ளாள்.

விமாநம் - சோமங்க விமாநம்(சோம சுந்தர விமாநம் என்றும் அறியப்படுகிறது).

விசேஷம் - கிழக்கே திருமுக மண்டலம் - நின்ற திருக்கோலம். மூலவர் திருக்கோலத்திலும் உத்ஸவர் திருக்கோலத்திலும் ஒரே ரீதியில் பஞ்சாயுதனாக - சக்கரம், சங்கு , கத்தி, கதை, சார்ங்கமென்னும் வில்லுடன் சேவை சாதிக்கிறான்.

மதுரை நகரிலிருந்து 12 மைல் வடக்கே உள்ளது இந்த க்ஷேத்ரம். வடபுறத்தில் 10-12 மைல் நீளமுள்ள பசுமலைத் தொடரைக் கொண்டது. மலை 1000 அடி உயரம் உள்ளது. இரண்டரை மைல் தூரம் மலைமேல்.

2. நூபுர கங்கையின் வரலாறு

பெருமாள் வாமனனாக அவதரித்து மஹாபலியிடம் போய் மூவடி மண் வேண்டி பெற்று "ஒரு குறளாய் இருநில மூவடி மண் வேண்டி, உலகனைத்தும் ஈரடியால் ஒடுக்கி ஒன்றும்" (பெரிய திருமொழி 3-4-1) என்று இந்த லீலா விபூதியும் அளந்து மற்றோரடியால் ப்ரம்ம லோகத்தை எட்டும் போது, பிரமன் திருமாலின் திருவடியை மறை கொண்ட மந்திரத் தால் வாழ்த்தி திருமஞ்சனம் செய்து மகிழ்ந்ததும், அது வேகமாக கங்கையெனப் பூமிக்கு வந்தபோது சிவன் தன் ஜடாமுடியில் தாங்கினான் என்பது புராண வரலாறு. அது தவிர, அது கங்காதரனின் ஜடையில் விழுவதற்கு முன்பு எம்பெருமானின் தண்டையில் பட்டு சிதறி நீர்த் திவலைகள் தெளிந்து பூ மண்டலத்தில் விழுந்த போது அது நூபுர கங்கை யென்று பெயர் பெற்றது. இது வற்றாத ஊற்றரு வியாக இன்னும் பெருகி வந்து கொண்டிருக்கிறது. அதற்கு "அர்த்தித்த பலப்ரதமான தீர்த்தம்" என்றும் "இஷ்டசித்தி" என்ற பெயரும் பெற்றுள்ளது.

## 3. தவப்புருஷர்கள் வசித்த ஸ்தலம்

அக்காலத்தில் பல ரிஷிகளும் சித்த புருஷர்களும் இங்கு வசித்துப் பெருமானை அநந்ய ப்ரயோஜனராக ஆராதிப்பதே இனிய அனுபவம் அதையன்றி வேறு குறிக் கோள் கொள்ளாமல் அவனை அவனுக்காகவே - ஆராதித்து வந்தனர். தர்ம தேவதையும் இங்ஙனம் இங்கு பலப்பல ஆண்டுகள் ஆராதித்து வந்தான். அவன் ஆலயம் நிர்மா ணம் செய்து வைத்து க்ருதார்தனானான்.. மலை மீது சந்திரன் மெதுவாக நகர்வதை மேலும் அனுபவித்தவன், இந்த ப்ரதேசத்தின் குளுமையை சந்திரன் மேலும் அனுபவமய மாக்கியதையும் ரசித்தான். பிற்காலத்தில் இவ்விடத்தை ஆண்ட அரசர்கள் சந்திர வம்சத்தை சேர்ந்தவர்கள் ஆத லால் தர்ம ராஜன தேவலோக தச்சன் விச்வகர்மாவைக் கொண்டு, பெருமாள் விமாநத்தை சந்திரன் வடிவில் அமை வித்தான். அதனால் தான் அங்கு சோமச் சந்திர விமாநம் என்ற பெயர் பெற்றது.

மார்க்கண்டேயரும், அம்பரீஷன் போன்றோரும் இந்த நூபுர கங்கையின் தீரத்தில் வசித்து அழகரை ஆராதித்து, முன்னவர் சிரஞ்ஜீவித் தன்மையையும், பின்னவர் பரமபதத்தில் கைங்கர்யத்தையும் அவரவர் வேண்டியபடி - பெற்றார் என்கிறது புராணக் கதைகள்.

## 4.மலயத்வஜனை ஆட்கொண்ட அழகர்

சாத்யகி துவாரகையிலிருந்து (ஸ்ரீக்ருஷ்ண பகவானின் சேனாதிபதி) பாண்டிய நாடு திக் விஜயம் செய்தான். அவனது வம்சத்தில் பிறந்த மலயத்வஜன் சிறந்த பக்தன். அதில் தினமும் வானத்தில் சென்றபோது அழகர் கோயில் க்ஷேத்ரத்திற்கு மேல் பறந்து புஷ்பக விமாநத்தின் நிழல் சோமங்க விமாநத்தின் மேல் விழலாயிற்று. அவனை ஆட் கொள்ள எண்ணிய பெருமாள், அவனது விமானத்தை ஆகர்ஷித்து நிலத்திற்கு இழுத்து விட்டார். அப்போது அந்த

அரசனுக்கு ஓர் அசரீரி கேட்டது - "இங்கே பெருமாள் இருக்க, இங்கே கங்கையிலும் புனிதமான நூபுர கங்கை இருக்க, இந்த குல தனம் அண்மையில் இருக்க, நீ ஏன் தினம் இதன் மேலே பறந்து போய் வடக்கே வெகுதூரம் சென்று ப்ரயாசை ப் படுகிறாய்?" அரசனும் மனம் திருந்தி, பெருமாளை வழிபட்டு சுந்தரராஜனுக்கு அடிமையானான்.

கங்கையினும் புனிதம் எவ்வாறு நூபுர கங்கை பெற்றது?

இதை ஸ்ரீ தேசிகன் ஹம்ச சந்தேசகாவ்யத்தில் சொல்கிறார் (முதல் உச்வாஸம் 49)

சுந்தரர் - அழகர் என்ற திருநாமமுடைய பெருமாள் நித்ய வாசம் செய்யுமிடம். வணங்குபவர்களுக்கு மஹாபாக்யமாக, பலப்ரதமாக அமைந்த க்ஷேத்ரம், அதன் பெயர் வ்ருஷபாசலம். அங்கு சென்றுரைகின்ற சுந்தரராஜப் பெருமாளை அடைந்து, உடனே சேவி. அவன் ஒரு சமயம், பலியை வென்ற போது, மேலே தாவிய திருவடியின் நூபுரம் (சிலம்பு, தண்டை என்பது) என்ற திருவாபரணத்திலிருந்து தெறித்துப் பெருகிய அருவி (நூபுர கங்கை, சிலம்பாறு) உண்மையில் கங்கையை விடவும் ஏற்றம் பெற்றது. கங்கை கூடப் பெருமாள் ஜடாமுடியில் விழுந்து இறங்கியதே. ஆனால் நூபுர தீர்த்தமோ கங்காதரனின் ஸ்பர்ச ஸம்பந்தமில்லாமல் வந்ததனால் ஓகவும் சத்வமும் பாவனமும் ஆனது.

6. சிலம்பாறின் ஏற்றம்

"நூபுர கங்கை" என்ற வடமொழி பெயரை சற்று மறந்து தமிழ் பெயரான சிலம்பாறின் சிறப்பை சற்று பார்ப்போம். சிலம்பு என்றால் மலை. கல். கூரத்தாழ்வான் சொல்கிறார் "கல், பாறை, மலை எல்லாம் கரைந்துருகி வந்த ஆறுதான் சிலம்பாறு என வேண்டும். ஏன் உருகிற்று என்பதற்கு நம்மாழ்வாரைதான் நாம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். பாசுரங்களை தேவமாதர்கள் இனிய கானமாக இசைந்து திரிகின்றனர். இயலும், இசையும் இப்

படி ஒரேயடியாக உருக்கினால் - மரங்கள் இரங்கும், சுக்கா ங் காய் போன்ற நம் நெஞ்சங்கள் உருக வேண்டும். இவையெல்லாம் உருகிற்றோ இல்லையோ, மலைகள் பாறைகள் உருகிச் சிலம்பாறு ஆகிவிட்டதாம்". இதோ அந்த ஸ்ரீஸூக்தி -

வகுலதர ஸரஸ்வதீவிஷக்த
ஸ்வரரஸ பாவயுதாஸு கிந்நரீஷு ।
த்ரவதி த்ருஷதபி ப்ரஸக்த காநாஸு
இஹ வநசைலதடீஷு ஸுந்தரஸ்ய ॥

*(ஸுந்தரபாஹுஸ்தவம் -12)*

## 7. ஆழ்வார்கள் மங்களாசாஸனம்

பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் முதலிய ஆழ்வார் களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்யதேசம் இது! பெரியாழ்வார் இந்த திருமாலிருஞ்சோலை மலையைத் தேன் தமிழால் பேசுகிறார். இது அழகன், அலங்காரன் மலை என்கிறார்.

பகவானை, அழகின் வடிவமாக இங்கு கண்டு களிப்புப் பொங்கப்பாடுகிறார். அழகான அவனைக் கண்டு விட் டால் அவன் எப்போதும் நெஞ்சில் நிறைந்திருப்பான்! இந்த மனோ தத்துவம் பக்தி மார்க்கத்தில் இணைந்திருக் கிறது.

ஆர்வ மிகுதியால் ஆழ்வாரின் ஈரச்சொற்களும் அருவியாக பொங்கி வழிகிறது, இந்த அழகன் இருக்கும் மலையைப் பற்றி பேசி தன் உள்ளத்து உணர்ச்சிகளுக்கு ஓர் எழில் உருவம் கொடுத்து விடுகிறார்.

அம்மலையை, குலமலை, கோல மலை, குளிர்மா மலை, கொற்ற மலை, நிலமலை, நீண்ட மலை - என்று செஞ்சொற்களைத் தொடுத்துச் சொல்கிறார். அவன் அருமையை எல்லோரும் உணர்ந்து கொள்ளவில்லையே என்ற ஆதங்கம். அன்று சிசுபாலன் இருந்தது போல் இன்றும் எத்தனையோ பேர் இருக்கிறார்களே என்ற வருத்தம் ஆழ்வாரின் நெஞ்சிலே உறுத்திக் கொண்டிருக் கிறது போலும், அதன் வெளிப்பாடே கீழ் வரும் பாசுரத்தின் பொருளாம் -

*பல பல நாழம் சொல்லிப் பழித்த சிசுபாலன் தன்னை*
*அலவலைமை தவிர்த்த அழகன் அலங்காரன் மலை*
*குலமலை கோலமலை களிர் மாமலை கொற்ற மலை*
*நிலமலை நீண்டமலை திருமாலிருஞ்சோலையதே*
*(பெரியாழ்வார் திருமொழி- 4-3-5)*

ஆண்டாள், இந்த நாறுநறும் பொழில் மாலிருஞ் சோலை நம்பிக்கு நூறுதடா நிறைந்த அக்காரவடிசிலும் ப்ரார்த்தனையாக செலுத்துவதாக சொல்லியுள்ளாள். இதை பிற்காலத்தில் நிறைவேற்றி வைத்து பெருமை பெற்றவர் பகவத் ஸ்ரீ ராமானுஜர். பெரும்பூதூர் மாமுனிக்கு பின்னா னாள் என்று அவர் ஸ்ரீ ஆண்டாளின் தமையனார் ஆனார்.






# மூன்றாம் பாகம்

## மலைமேல் நிற்பாய்

## திருச்சிங்க வேள்குன்றம்

## நவ நரஸிம்ஹ க்ஷேத்ரம்



## மூன்றாம் பாகம்

## மலைமேல் நிற்பாய் - திருச்சிங்க வேள்குன்றம் நவ நரஸிம்ஹ க்ஷேத்ரம்

மிருகங்களின் ராஜா சிங்கம். இந்த ரூபத்தை ஸ்ரீமந் நாராயணன், தன் பக்தன் பொருட்டாக ஏற்றுக் கொண் டான். இந்த மாதிரி ஒரு உருவத்தை ஹிரண்யன் கனவிலும் கற்பனை செய்திருக்க முடியாது. தான் செய்த கடும் தவத்தின் பலனாக பெற்ற வரத்தால் தனக்கு ம்ருத்யுவே இல்லை என்ற தலை கனத்தால் விஷ்ணு பக்த னான சிறுவன் ப்ரஹலாதனை பலவாறாக துன்புறுத் தினான். இதற்கு முடிவு கட்ட நினைத்த பகவான் நரமும் ம்ருகமும் கலந்த உருவம் கொண்டு ஹிரண்யகசிபுவை வதம் செய்தான் என்பது அனைவரும் அறிந்ததே. அந்த நரம் கலந்த ம்ருக உருக்கொண்டு ஒன்பதுவித நரஸிம்மனாக அஹோபிலத்தில் நரஸிம்மன், வராஹ நரஸிம்மன், மாலோல நரஸிம்மன், யோகானந்த நரஸிம்மன், பாவன் நரஸிம்மன், காரஞ்ச நரஸிம்மன், சக்ரவட நரஸிம்மன் காட்சியளித்தார்.

திருமங்கையாழ்வார் அங்கண் ஞாலமஞ்ச என்ற தசகத்தில் இந்த ஸிம்ஹரூபி ஆதரிக்கும் அரண்யத்தை ரொம்ப விஸ்தாரமாகப் ப்ரஸ்தாபிக்கிறார். சிங்கவேள் குன்ற மாம் இதில் பல சிங்கங்கள் கொண்ட இடத்தைப் பற்றி அருளி, அதிலும் நரஸிங்கமாய் அவதரித்த எம்பெரு மான் செயலானது, ஆச்ரிதனான ப்ரஹ்லாதாழ் வானிடம் உள்ள அன்பினாலே அவனிடம் பகை கொண்ட இரணி யனின் வதையாகும். அதிலீடுபட்டு அதைப்பல படியாக சொல்லியும், அந்த திவ்ய தேசத்திற்கென்று சேவிக்கவா காதபடி அங்குள்ள கஷ்டங்களையும் ஆயினும் ஆர்வத் தினால் பலர் கஷ்டங்களை பொருட்படுத்தாது அங்கு சென்று மலையில் இருப்பவரை சேவித்து அவனது பரத்வ

வாத்ஸல்யங்களை பரக்க அருளியிருப்பது காண்போம்.

அங்கண் ஞாலமஞ்ச அங்கோராளரியாய் அவுணன்
பொங்கவாகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதனிடம்
பைங்கணாணைக் கொம்பு கொண்டு பத்திமையாலடிக்கீழ்ச்
செங்கணாளியிட்டிறைஞ்சும் சிங்கவேள் குன்றமே

(பெரிய திருமொழி 1-7-1)

அழகிய இடங்கள் நிறைந்த பூமியில் உள்ளவர்கள் பயப்படும்படி உள்ளவன், இரணியன் தானே இருந்து பார்த்துக் கட்டிய தூணில் ஏதும் ஒளிந்திருக்க சாத்யமில்லை என்று தூணைத் தட்ட, அங்கு ஒப்பற்ற ஆளரி உருவாய் நரஸிங்க ரூபனாகி, கோபத்தில் கிளர்ந்த அசுரனை அவன் ஆகம் இரண்டாக பிளந்து, அவனது உடலை தன் கூர்மை யான நகங்களால் பிளந்து அருளின பரிசுத்தனின் திவ்ய தேசம் என்று அருளுகிறார்.

அரி எங்கும் உளன் என்ற விடத்தில் புருஷனை சொல்லுகிறபடியால் அதை மெய்ப்பிக்கும் படியாக சிங்கப் புருஷனாக நரஸிங்கமாகத் தோன்றினான் போலும். அப்போது உலகெல்லாம் பயங்கரமான ரூபத்தைக் கண்டும், எங்குமிப்படியிருக்கும் இவன், நாம் செய்யும் தவறுக்காக நம்மையும் தண்டிக்க எப்போது எங்கே தோன்றுவானோ என்று நினைத்தும் அஞ்சிற்று. இச்சிங்கம் குன்றிலே வாசம் செய்யக் கண்டு மற்ற சிங்கங்கள், ஜாதி சம்பந்தத்தை கொண்டு நம் குலதெய்வமென்ற கருத்தினாலே உபகாரம் கொண்டு இவ்வாளரியை வணங்க விரும்பி தங்களால் வேட்டையாடப்பட்ட ஆனைகளின் தந்தங்களையெடுத்து வந்து விசேஷ பக்தியுடன் சமர்ப்பித்து வணங்குகின்றன. திர்யக் கான சிங்கத்திற்கு எம்பெருமானுக்கு சமர்ப்பிக்க வேண்டு மென்கிற புத்தி ஏற்படுவது க்ஷேத்ரமஹிமையினாலாம். பூர்வ ஜன்ம ஞானத் தொடர்ச்சியினால் கஜேந்திராழ்வானுக்கு உண்டானது போல என்னலாம்.

# I

## ஸ்தல வரலாறு

பகவான் வைகுண்டத்தை மறந்து, இங்கேயே தங்கி விட்டதால் மகாலக்ஷ்மி தாயார், இங்குள்ள வேடர் குலத்திற் பிறந்து, பகவானை மணந்ததாக ஸ்தல வரலாறில் காணப் படுகிறது. இன்னும் ப்ரம்மோற்சவத்தின் போது, பெருமாளின் மாமனார் குலமாகிய வேடுவர்கள், ஆர்பாட்டங்கள் நிகழ்த்தி, சீர் வரிசைகள் செய்வர்.

### 1.மேல் அஹோபிலம்

அடிவாரத்திலிருந்து ஆறுமைல் தூரம். காடு அடர்ந்த பகுதி நண்பகலுக்கு முன்பே சேவை முடித்து விட்டு கார்ய ஸ்த்தர்களும் சேவார்த்திகளும் திரும்பி விடுவார்கள். இது ஒரு குடவரைக் கோயில். இங்குள்ள பெருமாளை அஹோ பில நரஸிம்மர் என்று அழைக்கிறார்கள்.

சீதையை தேடி வந்த ராமன் இந்த ஸ்தலத்தில் வந்த போது நரஸிம்ம மூர்த்தியை வழிபட்டு நின்றாராம். ராகவ ஸிம்மம் ந்ருஸிம்மத்தை தொழுது நின்றது! என்ன விந்தை! அந்த ஊர் மக்கள் அந்த ஊரில் தான் சீதை ராமனுக்கு திரும்பவும் கிடைத்தாள் என்ற நம்பிக்கை கொண்டுள்ளார் கள்.

மேல் அஹோபிலத்திலிருந்து, இன்னும் மூன்றரை மைல் மேலேறிச் சென்றால், மாலோல நரஸிம்மனை சேவிக் கலாம். அங்கிருந்து இன்னும் இரண்டு மைல் தூரத்தில், நரஸிம்மர் வெளிப்பட்டதாகச் சொல்லப்படும் தூண் இருக் கிறது. இங்கே எல்லாம் தகுந்த துணையோடு செல்ல வேண்டும்.

### 2. கருடாத்ரி

ஒரு முறை, கருடன் நரஸிம்ஹ அவதாரத்தைக் காண ஆசைப்பட்டதாகவும், பெருமாளும் அவ்வாறே, இம்மலையில் காட்சி அளித்ததால், இம்மலை கருடாத்ரி என்று அழைக்கப் பெறுகிறது.

கீழ் அஹோபிலம் ராஜகோபுரத்திற்கு எதிரில் 80 அடிகளுக்கு மேல் உயரமான ஜயஸ்தம்பம் ஒன்று இருக்கிறது. அந்த தூண், பூமிக்கு கீழே 30 அடி ஆழத்தில் புதைந்திருக்கிறதாம். இப்பேர்ப்பட்ட வைபவங்கள் கொண்ட திருத்தலம் அஹோபிலம்.

அஹோபில மடத்தின் தலைமை ஸ்தானம் இது. முதல் அழகிய சிங்கருக்குப் பெருமாள் யோகி ரூபத்தில் ப்ரத்யக்ஷமாகி அவர்களை இந்த திருமடத்தை நிறுவுமாறு பணித்தாராம். பெருமாள் எங்கிருந்தாலும், அங்கெல்லாம் சென்று சேவிக்கும் திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற மஹத்தான திருத்தலம்.

### 3. ஆண்டாள் மங்களாசாஸனம்

*மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்*
*சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து*
*வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி*
*மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு*

என்ற திருப்பாவையின்முதல் பகுதி - இதில் ஸ்ரீமந் நாராயணனே ஜகத் காரணம், அவனே புருஷோத்தமன், அவனே பலப்ரதன், அடியார்களைக் காப்பதற்கு அவன் எடுக்கும் அவதாரங்களின் மகிமை முதலானவை உள் தாத்பர்யமாக அமைந்துள்ளவை. ப்ரளய காலத்தில் உலகமெல்லாம் கரைந்து பகவானுடன் ஒன்று பட்டிருக்கும் நிலையில், அவன் பிராட்டியுடன் உறங்கிக்கிடக்கிறானாம். ப்ரளய காலம் கழியும் போது, ப்ரபஞ்சத்தை ச்ருஷ்டி பண்ணக் கடாக்ஷிக்கிறான்.ந்ருஸிம்ஹதாபினி என்னும் உபநிஷத்தில், இந்த அவசரத்தில் பகவானை ந்ருஸிம்மமாகக் கூறப்பட்டுள்ளது. ந்ருஸிம்ஹம் என்றால் புருஷோத்தமன் என்று பொருள். உலகம் படைக்கப்பட்டதும், ரஜோ குணமும், தமோ குணமும் ஹிரண்யாக்ஷன். ராவணன், சிசுபாலன் போல் வாரிடம் ரூபம் கொண்டதை அழிக்க நரஸிம்மமாகவும், ராகவஸிம்மமாகவும், யாதவஸிம்மமாகவும் முறையாக வந்து ப்ரக்ருதியில்

உள்ள தீய குணங்களை அறவே ஒழித்து அடியார்களை காப்பதாகக் கருத்து.

ஸிம்ஹகதி போன்ற கண்ணன் நடைஅழகில் ஈடுபட்ட ஆண்டாள், கோப்புடைய சீரிய சிங்காசனத்திருந்து தாம் வந்த காரியத்தை ஆராய்ந்து அருள அவனிடம் ப்ரார்த்திக் கிறாள். கடற்கரையில் ராகவஸிம்மம் அபயப்ரதானம் பண்ணியது போலவும், தேர்த்தட்டில் யாதவஸிம்ஹம் வார்த்தை சொன்னது போலவும், சீரிய சிங்காசனத்திலிருந்து கண்ணன் ஆராய்ந்து அருளி நிற்பது ஸிம்ஹாசலம் என்னும் அஹோபி லத்திலே காணலாம்.

## 4. அஹோபிலம் – சனந்தனன் செய்ததவம்

பல வன விலங்குகள் வாழ்கின்ற காடுகளுடைய மலைப்ரதேசம் அஹோபிலம். இம்மலை ப்ரதேசத்தினிடையே ஓர் அமைதியான இடத்தைத் தனதாக்கிக் கொண்டு நாடி வருவோரை எல்லாம் ரக்ஷித்து அருளை வாரி வழங்கி அநுக்ரஹம் செய்து வருகிறார் ஸ்ரீ நரஸிம்மர்.

இவ்விடத்திலே ஒரு சமயம் சனந்தனன் என்ற ப்ராமணன் தான் பெற்ற மந்திர உபதேசத்தால் ஸ்ரீ நரஸிம்ஹ மூர்த்தியை ஒரு கணமேனும் காண அவாக்கொண்டு கானடர்ந்த பகுதியில் தவம் செய்யத் தொடங்கினான். அன்ன ஆகாரமின்றி சதா சர்வதா காலமும் ஸ்ரீ நரஸிம்மன் நினைவாகவே இருந்து தவம் செய்து வந்த போது ஒரு நாள் காடுகளில் வேட்டையாடிப் பிழைத்து வந்த வேடுவன் அவ்வழியே வர அங்கு தவம் புரிந்து கொண்டிருக்கும் அந்தணனை பார்த்தான். தான் வேட்டையாடி காயப்படுத் திய மான் தப்பியோடியதை அந்த தபஸ்வி கண்டாரா என்று அவரைக் கேட்டான்.

அதற்கு அவர் மானா? நான் ஏதும் பார்க்கவில்லை என்று பதில் கூற அதற்கு வேடுவன் சொன்னான். எனக்குத் தான் காட்டில் அலைந்து மான் ம்ருகங்களை தேடுவது

ஜோலி. உமக்கு இங்கே என்ன ஜோலி, இந்த காட்டில் வாசம் ஏன் செய்கிறீர்? என்று கேட்டான்.


"நீ உன் மானைத் தேடி அலைவது போல், நானும் என் ஹ்ருதயத்தில் குடி கொண்டிருக்கும் நரஸிம்மனை மனசால் தேடுகிறேன்'' என்றார். வேடுவனுக்கு ரொம்ப ஆச்சர்யமாக இருந்தது - நரம் கலந்த ஸிம்ஹ உருவின் வ்ருத்தாந்தம் கேட்டு "நான் அந்த மாதிரி உருவை இந்த காட்டில் எங்கும் பார்த்தேனில்லை, இத்தனை வருடமாக இந்த காட்டில் வாழ்ந்து வரும் நாங்கள் அந்த மாதிரி ஒன்று இருப்பதை கேள்விப்பட்டதே இல்லை'' என்று கூறி இப்படி அங்கு இங்கு திரிந்து தேடிப்பார்த்தால் தான் நாம் வேண்டுவது கிடைக்கும். இப்படி ஓர் இடத்திலே உட் கார்ந்திருந்தால் எதுவும் நடக்காது என்றான். அதற்கு அந்த ப்ராமணன், தன்னாலே மந்த்ர ஜபத்தால் இருந்த இடத்தி லேயே அதைக்காணமுடியும் என்று உறுதியாக கூறினா லும், வேடனுக்கு சமாதானம் உண்டாகவில்லை. ஆகவே அவனும் அந்த நரம் கலந்த ஸிம்மத்தை காடு முழுக்கவும் சல்லடை போட்டு தேடி மறுநாள் மாலைக்குள் அழைத்து வருவதாக வசனம் செய்து போனான். போனவன் மறுநாள் அதிகாலையிலே எழுந்திருந்து காட்டில் அலைந்து தேடி னான். ஒரு இடம் விடவில்லை. ஆனால் நரஸிம்மம் எங்கு இருக்கிறது என்று தெரியவே இல்லை. மாலையும் ஆகி விட்டது. சோர்வினாலும், பசியினாலும் மனம் தளர்ந்து மரக் கொடி ஒன்றால் கழுத்தை நெறித்துக் கொண்டு ப்ராண த்யாகம் செய்ய முனைந்த போது - மின்னல் போல் ஒன்று தோன்றியது. பார்த்தால் நரம் கலந்த ஸிம்ம உருவம். உடனே, தற்கொலையை கை விட்டு அந்தக் கயிற்றாலே அவ்வுருவை கட்டி அந்த ப்ராமணனிடம் அழைத்து சென்று நிறுத்தி, இது தானா நீ தேடிய தெய்வம் என்று கேட்க, அந்த உருவம் ப்ராமணனின் கண்ணுக்கு புலப்படவில்லை - ஆனால் கயிறு மட்டும் ஏதோ ஒன்றை சுற்றியிருப்பது போலி

ருந்தது. அந்த ப்ராமணன் கதறினான். என்ன சோதனை ! நரஸிம்மா! என் தவத்தில் ஏதேனும்குறைபாடு கண்டாயா? நான் செய்த பாவம்தான் என்ன என்று கதறியழுதான்.

சனந்தனா வருந்தாதே அறிவினால் எளியவனாயினும் வேடுவன் என்னை அணுகவேண்டுமென ஸர்வ காலமும் என் நினைவாகவே இருந்து காணும் பாக்கியம் பெற்றான். நீயே வேடுவனுக்கு நான் தென்படுவது நடவாத காரியம் என எண்ணி இறுமாந்திருந்தாய். உன் தவம் தூய்மையாக இருப்பினும் வேடுவன் எண்ணத்தால் உயர்ந்து விட்டான் ஆகவே தான் அவன் என்னை காண முடிந்தது. உனக்கு நான் அசரீரியாகத்தான் இருந்து அருள் வழங்குகிறேன் என்றருளி அந்த நிசப்தமான இரவு நேரத்தில் நரஸிம்மர் அருள் பாலித்தார்.

நம்பிக்கையுடனும் உறுதியுடனும் தன்னை அடைய நினைப்பவர்களுக்கெல்லாம் இன்றும் அருள் மழை பொழிந்து மகிழ்விக்கிறார் ஸ்ரீ அஹோபில நரஸிம்மர்.





# நான்காம் பாகம்



'மலைமேல் நிற்பாய்'! என்று ஆழ்வார் ஸாதித்தருளி யிருப்பதை நோக்குகையில், அவர்கள் அர்ச்சாவதாரத்தில் ஆழ்ந்து அநுபவித்ததன் முடிவே இந்த வெளிப்பாடாகும். எம்பெருமான் ஆச்ரிதர்கள் உய்ய வேண்டி பல ப்ரயத்னங் களை மேற்கொண்டு ஆங்காங்கு பல திவ்ய தேசங்களில் நின்றும் இருந்தும் கிடந்தும் அருள் பாலித்து வருகிறான். அது மட்டுமல்ல ஒவ்வொரு திவ்ய தேசத்திலும் தான் (ஸ்ரீக்ருஷ்ண பகவானாக) செய்த விபவாவதாரத்தில் வெளிப் படுத்திய அறநெறிகளை அநுஷ்டித்துக் காட்டியுள்ளவாறு இருக்கிறான்.

ஸ்ரீபத்ரிகாச்ரமத்தில் நரநாராயணனாய் தோன்றி உலகத்தின் அறநூல்களால் போற்றப்படுகிறான். ஸ்ரீவைஷ்ண வர்களும், பக்தர் களும் அந்த உயர்ந்த இமய மலையில் கோயில் கொண்டுள்ள எம்பெருமானை திரள் திரளாக இன்றளவும் சேவித்து மேன்மை அடைவதை காணலாம்.

திருமங்கை மன்னன் இந்த திவ்ய தேசத்தை மூன்று தசகங்களால் மங்களாசாஸனம் செய்துள்ளார். மக்கள் அங்கு சுற்றுலா செல்லும் வ்யாஜத்திலே சென்று சேவிக் கிறார்கள். இதையெல்லாம் ஆழ்வார் திருவதரிக் கான பாசுரத்தில் இயற்கையாகவே எழிலுடைய அந்த மலை ப்ரதேசம் அங்குள்ள வளம் மிக்க வனப்பகுதிகள், விண் ணை முட்டும் மரங்கள் இவைகளை அற்புதமாக தம் அருளிச் செயலில் வாரி வழங்குகிறார். நாமும் அதை சற்று காண்போம் -

### 1. திருப்பிரிதி

*வாலி மாவலத் தொருவன துடல்கெட*
*வரிசிலை வளைவித்தன்று*
*ஏல நாறு தண் தடம்பொழி லிடம் பெற*
*இருந்தநல் இமயத்துள்*

*ஆலி மாமுகி லதிர்தர, அருவரை*
*அகடுற, முகடேறி*
*பீலி மாமயில் நடஞ்செயும் தடஞ்சுனைப்*
*பிரிதி சென்றடை நெஞ்சே!*
*(பெரிய திருமொழி 1-2-1)*

திருப்பிரிதி என்ற ஜோஷிமட், திருபதரி செல்லும் வழியில் உள்ளது. இங்கு ஸ்ரீ நரஸிம்மர் பரிமளவல்லி தாயாருடன் சேவை சாதிக்கிறார். இந்தத் திருமலை யாத்திரையில் எழிலுடைய கண் படைத்த பலனை இந்த திவ்ய தேச யாத்திரையில் நாம் பெறுகிறோம்.

இன்னொரு சிறப்பாம்சம் இங்குள்ள திவ்ய தேசத்தில் என்னவென்றால், திருவதரியிலிருந்து உத்ஸவ மூர்த்தி தீபாவளி பண்டிகைக்குப் பிறகு திருப்பிரிதியில் 6 மாத காலம் அக்ஷயத்ருதியை வரை எழுந்தருளியிருப்பார். கடும் குளிரால் பாதிக்கப்படும் இந்த இடத்தில் திருவதரி பெருமாள் சேவை ஆறு மாத காலம் கிடைக்காது.

2. திருவதரி

''முற்ற மூத்துக் கோல் துணையா முன்னடி நோக்கி வளைந்து'' (பெரிய திருமொழி 1-3-1) இந்த தசகத்தில், ''கிளரொளி இளமை கெடுவதன் முன்னம் வளரொளி மாயோன் மருவிய கோயில்''களை சென்று சேவியுங்கள் என்ற உபதேசத்தை ஒட்டியது இந்த தசகம். ஐம்புலன் களும் செம்மையாக இருக்கும் போதே இள வயதிலேயே இந்த சிரமமான யாத்திரைகள் மேற்கொண்டு எம்பெருமானை சேவித்து மகிழுங்கள் என்று ஆழ்வார் கூறுகிறார்.

3.''ஏனமுனாகியிருநில மிடந்தன் றிணையடி இமையவர் வணங்க'' பெரியதிருமொழி (1-4) என்ற பதிகத்தில், பரவலாக விபவ அவதாரங்களைச் சொல்லி, அவன் வதரி

மலையில் இருக்கும் பாங்கைச் சொல்லி இந்த பத்து பாசுரங்களை அனுசந்தானம் செய்பவர்கள் இந்த உலகை ஆண்டு ஒரு குடை கீழ் சத்ரபதி போல், இமயம் போல், உயர்ந்து புகழ் பெற்று திகழ்வர் என்று தலைக்கட்டுகிறார்.

## (3)திருநாராயணபுரம்

*ஒருநா யகமாய் ஓட உலகுட னாண்டவர்,*
*கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர்*
*பெருநாடு காண இம்மையி லேபிச்சை தாம்கொள்வர்*
*திருநாரணன் தாள் காலம் பெறச்சிந்தித்துய்ம்மினோ.*
*(திருவாய்மொழி 4-1)*

இந்த பாசுரம் பகவத் கீதை சரம ச்லோகத்திற்கு விளக்கமாக உள்ளது. திருநாரணன் தனது வலது கரத்தால் அபயப்ரதானம் செய்து இதைத் தஞ்சமாக கொள்ளுங்கள் என்று காட்டி நிற்கிறான்.

திருநாராயணபுரம் என்னும் மேல்கோட்டை ஒரு சிறு மலையில் உள்ளது. அங்கு பெருமாள் மிகவும் யௌவனமாகக் காட்சி தருகிறான். யதுகிரித் தாயார் எப்போதும் பெரியவள். ஆச்ரிதர்களுக்கு இன்னம் என்ன மேன்மை யை வழங்கலாம்? என்று சிந்தித்திருப்பது போல் தோற்றம் அளிக்கிறாள்.

திவ்யப்ரபந்தம், ஸ்ரீ நாதமுனிகள் காலத்துக்கு முன்பு லுப்தமாகியிருந்தது. இதைஉலகிற்கு மறுபடியும் அளித்து பெருமை அடைந்தவர்கள் திருநாராயணபுரத்து ஸ்வாமிகளே. அங்குறையும் பெருமாளை ஞானப்பிரான் என்றும், ஞான மண்டபம் என்ற ஸ்தல பெருமை பெற்றுள்ளது க்ஷேத்ர மலையான திருநாராயணபுரம்.

## செல்லப்பிள்ளை

திருமலையில் செல்வநாயகனாக ஸ்ரீ மந்நாராயணனை அனுபவித்தோம். இதற்கு ஈடாக திருநாராயணபுரத்திலும் உத்ஸவ மூர்த்திக்கு செல்வப்பிள்ளை என்று திருநாமம் அமைந்ததற்கு ஸ்ரீராமானுஜரே காரணம். இது இதிகாசத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் ஒரு சுவாரஸ்யமான விஷயம். கி.பி.11ஆம் நூற்றாண்டில் துலுக்கர்படையெடுப்பு நம் நாட்டை பாதித்து வந்த சமயம். நம்நாட்டிலுள்ள கோயில் செல்வங்களையெல்லாம் அழித்து பாழ்படுத்தி வந்தார்கள். அப்பொழுது நம் கோயில்களிலுள்ள மிக பிராசீன விக்ரகங்கள் எல்லாவற்றையும் சூறையாடிச்சென்றார்கள். அப்படி களவாடப்பட்டவர் நம் திரு நாராயணபுரத்தில் உத்ஸவ மூர்த்தி. இவரை எம்பெருமானார் தில்லி பாதுஷா அரண் மனையிலிருந்து மீட்டு வந்து திருநாராயணபுரத்தில் கோயில் நிர்மாணித்து பெருமாளையும் எழுந்தருளப் பண்ணி உத்ஸவாதி களை ஏற்படுத்தினார். அங்கிருந்து மீட்டு வந்த மூர்த்தியை 'வாராய் செல்வப் பிள்ளாய்' என்று அதி ஆதரத்துடன் அழைத்து வந்து மேல் கோட்டைக்கு வந்து சேர்ந்தது எல்லோரும் அறிந்ததே.

ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ தேசிகன், ஸ்ரீ பட்டர் போன்ற ஆசார் யர்கள் உகந்து உகந்து எம்பெருமானை மங்களாசாஸனம் செய்து அனுபவித்த ஸ்தலம். இங்கு தான் பட்டர், நஞ்சீயரை (பூர்வத்தில் அத்வைத வேதாந்தி) திருநெடுந்தாண்டக சாஸ்த்திரத்தால் திருத்தி ஆட்கொண்டு எம்பெருமானாரிடம் சேர்ப்பித்தார் என்பது வரலாறு. **பின்னானார் வணங்கும் சோதியாக** சரம ச்லோகத்தை விளக்கும் படியாக எம்பெரு மான் அர்ச்சையில் சேவை சாதிக்கிறான்.

அங்குள்ள கல்யாணி தீர்த்த கரை அருகிலுள்ள ஒரு சிறு மலை மேல் யோகநரஸிம்மர் வீற்றிருந்து அனைத்து ஆச்ரிதர்களுக்கும் அருள்பாலித்து வருகிறார். அந்த மலை

மேலிருந்து ஸ்ரீரங்க பட்டணத்தை உடையவர் சேவித்து வந்தாராம். அவர் திருவடியை அங்கு பார்க்கலாம். மேலிருந்து அற்புதமான இயற்கை காட்சிகளை காண மனோகரமாக இருக்கும்.

இதை ஸ்ரீஹஸ்தி சைல சிகரோஜ்வல பாரிஜாதம் என்று மங்களம் பாடி திருநாராயண பெருமாள், ஸ்ரீ.சம்பத் குமாரன், ஸ்ரீராமப்ரியன் என்றும் இவனை வணங்கி அனைவரும் அவன் அருள் பெற அவனை ப்ரார்த்திப்போம்.

*ஸ்ரீரங்க மங்கள நிதிம் கருணா நிவாஸம்*
*ஸ்ரீவேங்கடாத்ரி சிகராலய காளமேகம்*
*ஸ்ரீஹஸ்தி சைல சிகரோஜ்வல பாரிஜாதம்*
*ஸ்ரீசம் நமாமிசிரசா யதுசைல தீபம்*

**சுபம்**

## நூல் பட்டியல்

1. ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ பாடக்குறிப்புகள்
2. திவ்யப்ரபந்த ஸ்ரீகோசம்
3. ஸ்ரீ நரஸிம்ஹப்ரியா - மாத இதழ்கள்
4. சப்தகிரி இதழ்
5. உத்தமூர் ஸ்வாமி வ்யாக்யானங்கள்
6. நூற்றெட்டு திவ்ய தேச திருமால் திருவுருவங்கள்
7. ஆசிரியர் திருக்கோஷ்டியூர் ராமானுஜம் அவர்களது அருள் மொழிகள்

அச்சிட்டோர்: ஸ்ரீரங்கநாச்சியார் அச்சுக்கூடம்,
214, கீழ உத்தர வீதிஸ்ரீரங்கம், திருச்சி -6
☎: (0431) 434398 : akchari@vsnl.com



செங்கமலத்து அயனனைய மறையோர் காழிச்
சீராமவிண்ணகர் என் செங்கண்மாலை *
அங்கமலத் தடவயல்சூழ் ஆலிநாடன்
அருள்மாரி அரட்டமுக்கி அடையார்சீயம் *
கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கைவேந்தன்
கொற்றவேல் பரகாலன் கலியன் சொன்ன *
சங்கமுகத் தமிழ்மாலைப் பத்தும் வல்லார்
தடங்கடல்சூழ் உலகுக்குத் தலைவர் தாமே.

- பெரியதிருமொழி 3-4-10